திருக்கோயில்

மார்ச் 1976

ரூ. 1

113

மறவாதீர்கள்;

உங்கள் மகள் ஒருநாள்

மணமகளாக அமர வேண்டியவள்!

திருமணம் என்றாலே - அதுவும் உங்களது மகளின் திருமணம் என்றால் — செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கினால் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்றோம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது — இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

	மாதம் செலுத்தும் தொகை	5 ஆண்டு இறுதியில் கிடைப்பது	10 ஆண்டு இறுதியில் கிடைப்பது
	ரூ.	ரூ.	ரூ.
ரெக்கரிங் டிபாசிட்	5/-	375/-	...
	10/-	750/-	...
வளரும் மாதச் சேமிப்பு	5/-	...	825/-
	10/-	...	1,650/-

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002

திருக்கோயில்



முகப்பு : "பழநி கோயில் தேர்"

மாலை : 18 இராக்கத—மாசி மார்ச்—1976 மணி: 6

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

''திருக்கோயில்'' திங்கள் இதழின் 'சந்தாதாரர்'களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

திரு. ஆணையர்.
அறநிலைய ஆட்சித் துறை,
சென்னை—600 034

என்னும் முகவரிக்கு ரூபாய் பன்னிரண்டு (12) அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாராராகச் சேர்ந்து கொள்ளலாம்.

அந்தந்த வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் சந்தாவைச் செலுத்திச் சந்தாதாராராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

இதழ்கள் தவறுதுகிடைத்திடச் சந்தாதாரர்கள் முழு முகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

ஆண்டுச் சந்தா ரூ. 12/- தனி இதழ் ரூ. 1/-

ஆசிரியர்:
ந.ரா. முருகவேள்
M.A.,M.O.L.,

துணை ஆசிரியர்:
கே.எஸ்.ஜெகன்னாதன்

பொருளடக்கம்

இந்து மதத்தின் சிறப்பு
—ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.

பஞ்சாமிர்தம் —டி. என். சுகிசுப்பிரமணியன்

மந்தரை —ப. அ. முருகேசன், பி.ஏ. பி.எல்.

குருலிங்கசங்கமம் —சிவநேசன்

ஸ்ரீகிருஷ்ண அந்தாதி —கவிஞர் கண்ணதாசன்

திருவண்வண்டூர்த் திருமகள் கொழுநன்
—டாக்டர் ந. சுப்புரெட்டியார், எம்.ஏ.பி.எச்.டி.

ஆண்டாள்நாச்சியாரின் ஆற்றுமை
—தே. வீரராகவன் எம்.ஏ.

பாம்பன் சுவாமிகள் பாடல் நலன்
—பாம்பன் அடிகள் பக்தன்

ஸ்ரீவைணவ மதத்தின் சிறப்பு
—(முன்னாள்) நீதிபதி என். கிருஷ்ணசாமி ரெட்டியார், பி.ஏ. பி.எல்.

திருவாசகத்தில் சைவசித்தாந்தம்
—ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

நம் ஆசாரியர்களின் திருநாவீறு
—திரு. பி. ப. அண்ணங்கராசார்ய சுவாமிகள்

இராம காவியம்

வாலி வழக்கு—திரு. புரிசை சு. முருகேச முதலியார்

என்கடன்
பணிசெய்து
கிடப்பதே

இந்து மதத்தின் சிறப்பு

த. ரா. முருகவேள், M.A., M.O.L.

158.611
N76-18-6

முன்னுரை :

உலகில் நிலவி வரும் பல்வேறு மதங்களில் மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்து திகழ்வது, நமது இந்து மதம். பிற சில மதங்களைப் போல நமது இந்து மதமானது, ஒரு குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டதன்று. யூத மதம் (கி.மு. 1500—1200), ஷிண்டோ மதம் (கி.மு. 660), சொராஸ்ட்ர மதம் (கி.மு.660), டாவோயிஸ்ம் (கி.மு. 604), சமணம் (கி.மு. 599), பௌத்தம் (கி.மு. 560), கன்ஃபூசியம் (551), கிறித்துவம் (4 கி.பி.), இசுலாமியம் (570 கி.பி.), சீக்கியம் (1469 கி.பி.) என்னும் மற்றைச் சமயங்கள், இன்ன காலத்தில் இன்னரால் தோற்றுவிக்கப் பட்டன என்றெல்லாம், வரலாற்று நூல்கள் கூறக் காண்கின்றோம்.

அவ்வாறு காலம் ஏதும் கூறுதற்கு இயலாத நிலையில் வரலாற்றுக் காலத்திற்கும் மிக முற்பட்டு, மிக்க பழமை வாய்ந்ததாக நமது இந்து மதம்விளங்கி வருகின்றது. எகிப்து, மெக்சிகோ, பாபிலோனியா, அசீரியா, பினிசீயா, சிறிய ஆசியா, கிரீசு, உரோம் முதலிய நாடுகளில் முன்னொரு காலத்தில் விளங்கியிருந்த, எத்தனையோ பல மதங்கள் இருந்த இடமும் தெரியாமல் மருங்கற மாய்ந்தொழிந்தன. அவ்வாறு இன்றி, நம்முடைய இந்து மதம் தொன்று தொட்டு இன்று காறும் நின்று நிலவி வழங்கி வருகின்றது. பேரறிஞர் பாலகங்காதர திலகர், பேராசிரியர் எர்மன் ஜேகோபி ஆகிய பெருமக்கள், வான நூற் குறிப்புக்கள் பல கொண்டு கணித்து, வேத காலம் கி.மு. 4500-க்கு முற்பட்டது என்று வரையறை செய்துள்ளனர். இதனால் இந்து மதத்தின் பழமை எத்தகையது என்று, யாவரும் இனிது உணரலாம். இத்தகைய சிறந்த தொன்மையுடைமை பற்றியே, இந்து மதத்தினைச் ''சனாதன தருமம்'' (Perennial Religion) என்று நம் சான்றோர்கள் போற்றி வந்துள்ளனர்.

சொற்பொருள் :

''இந்து மதம்'' என்னும் சொல், நமது பழைய வேதம் உபநிடதம் ஆகமம் புராணம் முதலிய நூல்கள் எதிலும் காணப்படவில்லை என்றும், அஃது அண்மையிற் சில காலமாகவே வழங்கி வருகின்ற வேற்றுப் புலச்சொல் என்றும் ஒரு சிலர் கூறுவது உண்டு. அஃது ஒருவகையில் உண்மையே யாகுமாயினும், அதுபற்றி ஏதும் குறையில்லை.

''தொன்மையவாம் எனும் எவையும்
நன்றுகா; இன்று
தோன்றியன எனும் எவையும்
தீதாகா''

என நம் சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர்களுள் ஒருவர் ஆகிய உமாபதி சிவம் கூறுவது, இங்கு நாம் எண்ணியுணர்தற்கு உரியது.

''கடிசொல் இல்லைக்
காலத்துப் படினே''

என ஆசிரியர் தொல்காப்பியர் அருளிச் செய்திருத்தலும், இங்கு நாம் பெரிதும் சிந்திக்கத் தகுவதாகும். இச்சொல் அண்மையது ஆயினும் அது குறிக்கும் பொருள் மிக்க தொன்மையுடையதேயாகும் என்பதில் ஐயமில்லை.

பொருள் விளக்கம் :

(1) ஒரு சொல்லின் பொருளை விளக்குதலில் பொதுவாக இரு வகை முறைகள் உண்டு. அவைகளை முறையே உண்மை கூறல், பொருந்தக்கூறல் எனலாம். பாரசிகர்கள், கிரேக்கர்கள் முதலிய பிற நாட்டார், சிந்து நதியையும் அதனைச் சார்ந்த நிலப்பகுதியையும் (Indus, India, Hindu) இந்து என்று வழங்கி வந்தனர். அதுவே பின்னர்ப் பாரத தேசம் முழுமைக்கும் அதன்கண் வாழும் மக்கள் தொகுதியினர்க்கும் அவர்களின் பழக்க வழக்கம் பண்பாடு சமயம் ஆகியவற்றிற்கும் நாளடைவில் வழங்குவதாயிற்று. முதலில் நிலப் பரப்பைக் குறிக்கும் பெயராகவே இருந்த இந்து என்னும் சொல், இன்று இந்தியா என வழங்கப்படும் நம் பாரத நாடு முழுவதற்கும் பொதுவாக உரிய சமயப் பண்பாட்டு நெறியினைக் குறிப்பதாக விளங்கி வருகின்றது. இச்சொல் அண்மைக் காலத்திலேயே பெருவழக்குப் பெற்றது எனினும், இதனால் குறிக்கப்படும் சமய நெறி தொன்மை வாய்ந்ததாகும். (The name is recent, but the religion is ancient). இஃது உண்மை கூறல் என்னும் உத்தியாகிய நூல் வழக்காறு.

(2) இனி, பொருந்தக்கூறல் என்னும் உத்தி வகையினால், இந்து என்னும் சொல்லுக்கு அறிஞர்கள் பல புதிய பொருள் விளக்கங்களையும்

அறிவிற்குப் பொருந்துமாறு ஆராய்ந்து கூறுவ துண்டு. அம்முறையில் பின் வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

இந்து என்னும் சொல் நம்முடைய பழைய வேதாகம உபநிடதங்கள் முதலியவற்றில் யாண்டும் வரப்பெறவில்லை. ஆயினும், இன்று நம் பாரத தேசத்திலுள்ள சைவம் வைணவம் சாக்தம் சமணம் புத்தம் வேதாந்தம் சித்தாத் தம் முதலிய பல்வேறு சமய நெறிகளையும் ஒன்று சேர்த்துத் தொகுத்துப் பொதுவாகக் குறிப்பிடு வதற்குரிய ஒரு தொகுதிப் பெயராக (Collective noun) இந்து மதம் என்னும் சொல் பெருவழக்க மாக நிலவி வருகின்றது. ஆதலின் பொருந்தக் கூறல் என்னும் உத்தி பற்றி, அறிஞர்கள் இந்து மதம் என்பதற்குப் பின்வருமாறு பொருள் விளக்கங்கள் கூறுவர்.

''ஹிம்ஸாயாம் தூ யதேய: ஸ: ஹிந்து
இத்யபி தீயதே''

என்றபடி, (ஹிம்—ஹிம்சையில் து—துக்கிக் கிறவன்; ஹிந்து) ''ஓர் உயிர் எந்தக் காரணத் தினலாவது வருந்துவதாக இருந்தால், அதற்காக மிகவும் துக்கித்து, அவ்வுயிர்க்கு நேர்ந்த துன் பத்தைத் தனக்கு வந்ததாகக் கருதி, அதனை அகற்றுவதற்கு எவன் ஒருவன் பணி புரிகின் றனே, அவனே இந்து ஆவான்; அவனது சமயமே இந்து மதம்'' என்று அறிஞர்கள் இதற்குப் பொருள் கூறுவர்.

(3) இனி, மற்றும் சில அறிஞர்கள் இதற்கு வேறொரு பொருளும் கூறுவர். 'சப்த கல்பதரு' என்னும் புகழ் பெற்ற வடமொழி இலக்கண நூல், 'ஹேயம் நிந்தாதி இதி ஹிந்து' எனக் கூறுகின்றது. ''நினைவிலும் சொல்லிலும் செய லிலும் எத்தகைய இழிவும் பிழையும் நேராமல் கருத்தாகப் புறக்கணித்து ஒழுகுபவன் எவனே, அவன் இந்து; அவனுடைய மதமே இந்து மதம்'' என்பது மற்றொரு வகை விளக்கம்.

இவ்விருவகைப் பொருள்களும், இந்து மதத்தைப் பின்பற்றி ஒழுகும் மக்களாகிய நாம் அனைவரும் கடைப்பிடிப்பதற்குரிய உயரிய சிறந்த குறிக்கோள்களை உணர்த்துவனவாகத் திகழ்கின்றன. ஆதலின் இப்பொருள் விளக் கங்கள் நாம் பெரிதும் போற்றிப் பாராட்டுவ தற்குரியனவாகும்.

''இந்து மதத்தின் மூலமாகவே தெளிவும் இன்பமும் அமைதியும் அடைய முயலுதலைத் தவிர, இவ்வுலகில் எனக்கு வேறு பிறிதொரு விருப்பமும் இல்லை'' எனக் காந்தியடிகள் கூறி யருளியுள்ளார் என்பது, இங்கு நாம் அறிந்து இன்புறத் தக்கது. அன்னி பெசன்ட் அம்மை யார், ஆல்டஸ் அக்ஸ்லி போன்ற எத்தனையோ வேறு பல அயல் நாட்டுப் பேரறிஞர்கள், இந்து மதத்தையும், அதன் உயர்ந்த தத்துவக் கோட் பாடுகளையும் வியந்து போற்றிப் பாராட்டியுள் ளனர் என்பதும், நாம் பெரிதும் சிந்தித்து மகிழ்தற்குரியது.

பொதுமை நலம்:

நமது இந்தியப் பெருநாட்டில், பல திற மக்களும், பல்வேறு மொழிகளும், பல்வேறு நடையுடை பாவனைகளும், பல்வேறு பழக்க வழக்கப் பண்பாடுகளும், ஆங்காங்கே அமைந்து விளங்கக் காண்கிறோம். ஆயினும், இப் பலதிற வேறுபாடுகளுக்கும் இடையே ஒரு பெரும் பொதுத் தன்மையும் ஊடுருவி நின்று பொலிந்து திகழ்ந்து காணப்படுகின்றது. இந்திய மக்களின் புறக்கோலங்களும் பிறவும் வேறுபட்டாலும், அவர்கள் அனைவருடைய உள்ளப் போக்கும் உணர்வும், பெரும்பாலும் ஒரே தன்மை உடை யனவாக விளங்குகின்றன. இமயம் முதல் குமரி வரையிலுள்ள எல்லா மக்களும் பற்பல துறைகளில், மிகவும் வியக்கத் தக்க நிலையில், ஒத்த மனப்பான்மையும் உணர்வும் உடையவ ராக இருக்கின்றனர். கடவுள் நம்பிக்கையிலும், விக்கிரக வழிபாடுகள் புரிவதிலும், பல்வேறு சடங்குகள் இயற்றுவதிலும், பாவம் புண்ணியம் ஊழ்வினை இறப்பு பிறப்பு மறுபிறப்பு சுவர்க்கம் நரகம் என்பன பற்றிய கொள்கைகளிலும், இந்திய மக்கள் அனைவருக்குமிடையே ஒத்த கருத்தே நிலவி வருகின்றது. இவைகள் யாவும் இந்திய மக்களின் அடிப்படைப் பொதுக் கருத்துக்களாக அமைந்திருக்கக் காண்கிறோம். சார்வாகம் சமணம் பௌத்தம் சைவம் வைண வம் சாக்தம் சீக்கியம் முதலிய சமயங்களும், கேவலாத்துவிதம் விசிட்டாத்துவிதம் துவிதம் சுத்தாத்துவிதம் முதலிய எத்தனையோ பற்பல தத்துவக் கொள்கைகளும், நமது இந்தியப் பெருநாட்டில் விளங்கி வழங்கி வருகின்றன. ஆயினும், அவைகள் அனைத்தையும் தனக்குள் ஏற்றுத் தழுவிக் கொண்டு விளங்கி வரும் சிறந்த பொதுமைப் பெரு நெறியே, இந்து மதம் ஆகும் என நாம் சுருக்கமாகக் கூறலாம்.

பெருமை:

இந்து மதமானது, ஒரு வகையில், ''முன் னைப்பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொரு ளாய்ப் பின்னை புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியினதாய்ப்'' பெருமையுற்றுப் பிறங்கி வருகின்றது. உலகின் பல பகுதிகளில் இந்து மதம் பண்டும் பரவியிருந்தது; இன்றும் பரவி யிருந்து வருகின்றது. சமணமும் பௌத்தமும் சீக்கியமும் போன்ற மதங்கள் இந்து மதத்தி னின்று தோன்றிய கிளை மதங்களே யாகும். எத்தனையோ கோடிக் கணக்கான மக்களுக்குரிய மதமாக இந்து மதம் இலங்குகின்றது. இந்து மதத்தை எதிர்த்துப் பல இயக்கங்களும் கொள்கைகளும் அவ்வப்போது தோன்றின. எனினும், அவற்றை யெல்லாம் வென்று புறங் கண்டு, இன்றும் உயிர்ப்பாற்றலுடன் இந்து மதம் நின்று நிலவி வருகின்றது. உலகப் புகழ் பெற்றவர்களாகிய விவேகானந்தர், அர விந்தர், இரவீந்திரநாத தாகூர், காந்தியடிகள் போன்ற பல பெருஞ் சான்றோர்கள் இந்து மதத்தினைப் பெரிதும் விரும்பிப் போற்றி மகிழ்ந் துள்ளனர்.

சிறப்பு:

தமிழ் நாட்டில் தோன்றிய தத்துவ ஞானி களில் தலைசிறந்த ஒருவரும், சிவஞான சித்தி யார் என்னும் செந்தமிழ்த் தத்துவப் பெரு நூலை இயற்றியருளியவரும் ஆகிய அருள் நந்தி சிவாசாரிய சுவாமிகள் (கி.பி. 13 நூற்), சிறந்த சம

யம் எது? என்பது பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார். "உலகத்திலுள்ள பல சமயங்களும், அவற்றிற்குரிய பல நூல்களும், தம்முள் ஒன்றோடொன்று ஒவ்வாமல் மிகவும் மாறுபட்டனவாக உள்ளன. இவற்றுள் சிறந்த சமயம் யாது? சிறந்த பொருள் நூல் யாது? என்று நாம் ஆராய்ந்தால், எந்தச் சமயத்தையும் நூலையும் இகழாமலும், 'இதுவே பொருந்தும், அது பொருந்தாது' என்னும் பூசல்கள் இன்றியும், பல சமயங்களும் நூல்களும் கூறுகின்ற எல்லா உண்மைகளையும் ஏற்ற பெற்றி உடன்பட்டுத் தழுவிக் கொண்டு, அவைகள் அனைத்திற்கும் பொதுவானதாய், ஒரு பெரும் நிலைக்களனைத் திகழும் சமயமும் நூலுமே, உண்மையிலேயே சிறந்த ஒரு பெரும் சமயமும் நூலும் ஆகும்" எனக் குறிப்பிடுகின்றார்.

"ஓது சமயங்கள்
பொருள் உணரும் நூல்கள்
ஒன்றோடொன்று ஒவ்வாமல்
உளபலவும்; இவற்றுள்
யாது சமயம்? பொருள் நூல்
யாது இங்கு? என்னில்
இது ஆகும்; இது அல்லது
என்னும் பிணக்கது இன்றி,
நீதியினால் இவையெல்லாம்
ஓர் இடத்தே காண
நின்றது யாதொரு சமயம்!
அதுசமயம்; பொருள் நூல்!"

என அவர் சைவ சித்தாந்தத்தின் சிறப்பைப் பற்றி விதந்து கூறியிருப்பது, இந்து சமயத்திற்கும் கூட, ஒரு வகையிற் பெரிதும் ஏற்பு உடைத்தொன்றேயாகும் எனலாம்.

மானியர் வில்லியம்ஸ்:

இவ்வுண்மையை நன்கினிது வலியுறுத்தி வற்புறுத்தும் முறையில், சர். மானியர் வில்லியம்ஸ் என்னும் மேலைநாட்டுப் பேரறிஞர் இந்து மதம் பற்றிக் கூறியிருக்கும் பின்வரும் கருத்துக்கள் இங்கு நாம் அறிந்து இன்புறுதற்குரியன.

"இந்து மதம், எல்லாச் சமயங்களிலும் உள்ள நல்ல கொள்கைகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்கின்றது. எந்த ஒரு சமயத்தையும் இகழ்ந்து புறக்கணிக்காமல், எல்லாவற்றையும் ஏற்ற பெற்றி உடன்பட்டுத் தழுவிக் கொள்கின்றது. மனித குலத்திற்கும், மனித இயற்கைக்கும், அனைத்துலகிற்கும் உரிய இனிய மதமாக அது திகழ்கின்றது. வேறு எந்த மதத்தின் வளர்ச்சியினையும் தடுத்து எதிர்க்கும் இயல்பு அதன்கண் காணப்படவில்லை. ஏனைய எல்லாச் சமயங்களையும், தனது பரந்து விரிந்த பெருநோக்கினால், தன்பால் ஏற்று இணைத்துத்தழுவிக் கொள்ளும் பெரு மாட்சிமை உடையதாக, இந்து மதம் இலங்குகின்றது. அவரவர்களின் மனப்போக்கிற்கும் இயல்பிற்கும் ஏற்ப, அவரவர்க்குப் பொருந்திய நலங்களை விளைவிக்கும் திறனை, இந்து மதம் உண்மையிலேயே பெற்று விளங்குகின்றது. மனித குலத்திற்கும் மனித மனப்போக்குக்கும் உரிய எத்தகைய வேறுபாடுகளுக்கும் இணங்கி, இசைந்து ஒத்துச் செல்லும் தன்மையில், இந்து மதம் இணையற்றதாகத் திகழ்கின்றது. இவ்வியல்பே அதன் வலிமைக்கும் வளர்ச்சிக்கும் காரணம் எனலாம். தத்துவஞானிகள், கவிஞர்கள், சிந்தனையாளர்கள், அமைதி விரும்புவோர், தனிமை நாடுவோர், உணர்ச்சி மிகுந்தோர், செயல்வகை விழைவோர் ஆகிய பலருக்கும், மனநிறைவு அளிக்கவல்லதாக, இந்து மதம் இனிய பற்பல சிறப்பியல்புகளைத் தன்னிடம் கொண்டுள்ளது" (1)

அன்னை வசந்தை:

இவ்வாறே இங்கிலாந்தில் தோன்றியவரும் உலகப் புகழ்பெற்ற ஜார்ஜ் பெர்னர்ட் ஷா, சார்லஸ் பிராட்லா முதலியவர்களோடு நட்புரிமை கொண்டு பழகிய பெருநாவலரும், பல நூல்களின் ஆசிரியரும் ஆகிய திருமதி அன்னை வசந்தை அம்மையார் (Dr. Annie Besant) அவர்கள் கூறியிருப்பதும், இங்கு நாம் அறிந்து பெரிதும் மகிழ்தற்குரியது.

"கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக, உலகின் பல்வேறு பெருமதங்களையும் பற்றி ஆராய்ந்தறிந்த பிறகு, இந்து மதம் என்னும் பெயரால் வழங்கி வருகின்ற சிறந்த சமயத்தைப் போன்று நிறைவுடையதும், அறிவார்ந்ததும், ஆராய்ச்சி அனுபவங்களில் மிக்கதும், உயிர்க்கு உய்வளிக்கக்கூடியதும் ஆகிய சிறந்த மதம், வேறு பிறிது எதுவும் இல்லை என்று நான் உணருகின்றேன். அதனை எவ்வளவுக் கெவ்வளவு உணருகின்றோமோ, அவ்வளவுக் கவ்வளவு அதனை நாம் நேசிப்போம்; எத்தனை அளவுக்கு நாம் அதனைப் புரிந்து நன்கு விளங்கிக் கொள்ளுகின்றோமோ, அத்துணை அளவுக்கு அதனை நாம் பெரிதும் மதித்துப் போற்றி மகிழ்வோம்." (2)

அறுவகைச் சமயங்கள்:

இந்து மதத்தின் பலதிறப் பெருஞ்சிறப்புக்களுள், அதன் தத்துவக் கொள்கைகளும் சிறந்த நூற்பெருக்கமும் குறிப்பிடத் தக்கனவாகும். 'அறுவகைச் சமயங்கள்' என்னும் தொடர், தொன்றுதொட்டு வழங்கி வருவது, சமய

---

(1) "A characteristic of Hinduism is its receptivity and all-comprehensiveness. It claims to be the one religion of humanity, of human nature, of the entire world. It cares not to oppose the progress of any other system. For it has no difficulty in including all other religions within its all-embracing and ever-widening fold.

And, in real truth, Hinduism has something to offer which is suited to all minds. Its very strength lies in its infinite adaptability to the infinite diversities of human character and human tendencies. It has highly spiritual and abstract side suited to the metaphysical philosopher., its practical and concrete side suited to the man of poetic feeling and imagination, its quiescent and contemplative side suited to the man of peace and lover of seclusion...."
—SIR MONIER WILLIAMS

(2) "After a study of some forty years and more, of great religions of the world, I find none so perfect; none so scientific, none so philosophical, and none so spiritual as the great religion known by the name of Hinduism. The more you know it, the more you will love it; the more you try to understand it, the more deeply will you value it." —DR ANNIE BESANT

தத்துவ நூலாசிரியர்கள், இவ்வறுவகைச் சமயங்கள் யாவை? என்பன குறித்துத் தத்தம் நூல்களில் பல்வேறு வகைகளில் குறிப்பிட்டுள்ளனர். எனினும், அறுவகைச் சமயங்கள் அல்லது 'ஷட்தரிசனங்கள்' எனப்படும் நியாயம் வைசேடிகம் சாங்கியம் யோகம் மீமாம்சை வேதாந்தம் என்னும் ஆறுமே, ஏனையவற்றை விட மிகவும் பழமை வாய்ந்தனவாகும். இவைகளை விளக்கி முறையே அக்கபாதர் கணதர் கபிலர் பதஞ்சலி ஜைமினி வாதராயணர் என்னும் முனிவர்கள் நூல்கள் இயற்றியுள்ளனர்.

வில்லியம் ஜோன்ஸ் :

மிகப் பழைய காலத்திலேயே, நம் இந்திய நாடானது கிரேக்கர் உரோமர் முதலிய மேலை நாட்டு மக்களுடன் வாணிகம் முதலிய தொடர்புகள் கொண்டிருந்தது. அதன் பயனாக இந்நாடுகள் இந்தியாவுடன் பல பொருள்களைக் கொண்டும் கொடுத்தும் கலந்து உறவாடி மகிழ்ந்தன.

இந்திய நாட்டுத் தத்துவக் கொள்கைகளை ஆராய்ந்துணர்ந்து வியந்த சர். வில்லியம் ஜோன்ஸ் என்னும் பேரறிஞர், ''இந்தியத் தத்துவக் கொள்கைகளுள் நியாயம் 'பெரிபடெடிக்' கொள்கையையும், வைசேடிகம் 'ஐயோனிக்' கொள்கையையும், மீமாம்சம் 'பிளேட்டோவின்' கொள்கையையும், சாங்கியம் 'இட்டாலிக்'' கொள்கையையும், யோக தத்துவம் 'ஸ்டாயிக்' கொள்கையையும் பெரிதும் ஒத்துள்ளது. இவ்வாற்றுல் கௌதமர் என்னும் அக்கபாதர் அரிஸ்டாட்டிலையும், கணதர் தேல்ஸ்ஸையும், ஜைமினி சாக்ரடீசையும், வியாசர் எனப்படும் வாதராயணர் பிளேட்டோவையும், கபிலர் பித்தாகரசையும், பதஞ்சலி ஜெனோவையும் போன்றவர்களாகக் காணப்படுகின்றனர்.'' என்று ஆராய்ந்து ஒப்பிட்டுக் கூறி மகிழ்கின்றூர். (3)

இங்ஙனமே மாக்ஸ்முல்லர், பெரிடேல் கீத், விண்டர்நிட்ஸ், கிரீ:பித், எட்வின் ஆர்னல்ட், வில்லியம் காரி, ஷோ:பனேர், ரோமைன் ரோலண்ட் முதலிய நூற்றுக்கணக்கான மேலை நாட்டு அறிஞர்கள் பலர், இந்து மத நூல்களை ஆராய்ந்து வியந்து போற்றிப் பதிப்பித்திருக்கின்றூர்கள்.

விக்டர் கசின் :

''இந்திய நாட்டின் கவிதை இலக்கியங்கள் தத்துவ நூல்கள் ஆகியவற்றை ஆராயும் பொழுது அவைகளிற் பொதிந்துள்ள உண்மைகள் மிகவும் சிறப்புடையனவாகக் காணப்படுகின்றன. அவற்றின் உயரிய தத்துவக்கொள்கை நலங்களை நம்முடைய ஐரோப்பிய அறிவுநலனுடன் ஒருங்கு வைத்து ஆராயும்போது, நாம் மண்டியிட்டு வணங்கிப் பணிய வேண்டிய நிலையில் இருக்கின்றோம்''(4) என்று விக்டர் கசின் என்னும் பேரறிஞர் விளம்புகின்றூர்.

இங்ஙனமே மாக்ஸ்முல்லர் என்னும் பேரறிஞரும், ''ஐரோப்பியர்கள் வெறும் கிரேக்க, உரோம, யூத தத்துவங்களை மட்டுமே, படித்தால் போதாது. நம்முடைய அகவாழ்க்கை நிறைவானதாகவும், பல நலம் பொதிந்ததாகவும், உலகளாவி விரிந்ததாகவும், உண்மையிலேயே உயரிய மனித இயல்புடையதாகவும் அமைய வேண்டுமாயின், இந்தியத் தத்துவ நூல்களை நாம் படிக்க வேண்டுவது மிகவும் இன்றியமையாததாகும். அது நம்முடைய குறைகளைப் போக்கித் திருத்திச் செம்மைப்படுத்தவல்லதாக உளது'' (5) என்று கூறுகின்றூர். இவற்றினுலெல்லாம் இந்து மதத்தின் சிறப்பு இனிது புலனுதல் காணலாம்.

உலகின் பல பகுதிகளில் :

இந்து மதமும், அதன் பல்வகைப் பண்பு நலங்களும் உலகின் பல பகுதிகளிலும் பரவியுள்ளன. சுமத்திரா (சுவர்ணதீபம்), ஜாவா (யவத் தீபம்), பாலி, போர்னியோ, மலேயா, சயாம், கம்போடியா (காம்போஜம்), சம்பா, இந்தோனேஷியா, இந்தோசைனு, நடு ஆசியா, திபெத்து, பர்மா, சிலோன், சைனு, கொரியா, ஜப்பான் முதலிய பல பகுதிகளிலும், இந்து மதத்தின் பண்பாடுகளும், சாயல்களும் பரவிக் காணப்படுகின்றன. கிழக்காசிய நாடுகளில் தேவர்மன், குணவர்மன், உத்திரவர்மன், யசோவர்மன், சஞ்சயன், கௌணியன், அர்ச்சுனன், உக்கிரசேனன், சித்திரசேனன், பிரம்மதத்தன், இந்திராதித்தியன் முதலிய பல இந்து மதப் பெயர்கள் இன்றளவும் பெருக வழங்கப்பட்டு வருகின்றன.

ஜாவாவில் உள்ள போராபுதூர் புத்தர் கோயிலும் (கி.பி. 750—850), கம்போடியாவில் உள்ள அங்கோர்தாம் என்னும் சிவபிரான்

---

(3) " Of the philosophical schools, it will be sufficient here to remark that the first Nyaya seems analogous to the Peripatetic; the second, sometimes called vaisesika, to the Ionic ; the two Mimamsas, of which the second is often distinguished by the name of Vedanta, to the Platonic ; the first Samkhya to the Italic ; and the second of Patanjali to the Stoic philosophy ; so that Gautama corresponds with Aristotle, Kanada with Thales, Jaimini with Socrates, Vyasa with Plato, Kapila with Pythogoras, and Patanjali with Zeno."
—SIR WILLIAM JONES.

(4) " When we read with attention, the poetical and philoscphical movements of the East, above all those of India, which are beginning to spread in Earope, we discover there so many truths, and truths so profound, and which make such a contrast with the meanness of the results at which the European genius has sometimes stopped, that we are constrained to bend the knee before that of the East, and to see in this cradle of human race, the native land of the highest philosophy."
—VICTOR COUSIN

(5) " If I were to ask myself from what literature, we here in Europe, we who have been nurtured almost exclusively on the thoughts of Greeks and Romans, and of one scenictic race the Jewish, may draw that corrective which is most wanted, in order to make our inner-life more perfect, more comprehensive, more universal, in fact more truly human, a life, not for this life only, but a transfigured and eternal life, again I should point to India".
—PROF. F. MAXMULLER
India What can it Teach us.

கோயிலும் (கி.பி. 802—860), அங்கோர்வாட் என்னும் திருமால் கோயிலும் (கி.பி. 1110—1150), நமது தமிழக இந்துக் கோயிற் கட்டடக்கலை, சிற்பக் கலைகளினுடைய வளர்ச்சியையும், சிறப்பையும், பரவலையும் விளக்குவனவாக அமைந்து திகழ்கின்றன. கம்போடியாவில் அங்கோர்வாட் என வழங்கும் ஒரு பெருங்கோயில், திருமாலுக்கென அமைக்கப் பட்டுள்ளது. அதன்கண் இராமாயணம், மகாபாரதம், அரிவம்சம் என்னும் நூல்களிலிருந்து பல அழகிய சிறந்த சிற்பக் காட்சிகள் செதுக்கப் பட்டுள்ளன. இராமன் மாயமானைப் பின் தொடர்தல், வாலி சுக்ரீவப்போர், அசோக வனத்தில் சீதையின் சோகநிலை, கண்ணபிரான் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்தல், சிவபிரான் காமதகனம் செய்தல், தேவர்கள் திருப்பாற்கடல் கடைதல், முதலிய காட்சிகள் மிகப் பெரிய அளவில் செதுக்கப்பெற்று இன்றளவும் உயிரோவியங்களாகத் திகழ்ந்து வருகின்றன.

ஈலியோடொரஸ் :

மிகப் பழங்காலத்தில் வெளிநாட்டவர்களும் இந்திய நாட்டில் வந்து தங்கியிருந்து, இந்து மதத்தைத் தழுவிப் போற்றியுள்ளனர். கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் குவாலியர் மாநிலத்தில் பெஸ்நகர் என்னுமிடத்தில், பிராமி எழுத்துக்களில் நிறுவப்பட்டுள்ள கல்வெட்டுத் தூண் ஒன்றில், ''சுங்க வம்சத்து மன்னனுகிய பகபத்திரன் என்பவனின் அரசவைத் தூதுவனுக அந்தால்கிதாஸ் என்னும் கிரேக்க மன்னவனுல் அனுப்பப் பெற்றவனும், டியோன் என்பவனின் புதல்வனும், தட்ச சீலத்தில் வாழ்பவனும், 'பாகவதன்' எனப்படும் விஷ்ணுபக்தனும் ஆகிய ஈலியோடொரஸ் என்பவனுல், பரவாசுதேவன் எனப்படும் விஷ்ணுவுக்குரிய, புனிதம் மிக்க பறவையாகிய கருடனின் வடிவத்தை உச்சியில் செதுக்கப்பெற்றுள்ள, இத்தூணனது நிறுவப் பெற்றது''(6) என்று காணப்படுகின்றது. இதனுல் ஏறத்தாழ 2200 ஆண்டுகளுக்கு முன்னரே கிரேக்கர் முதலிய பிறநாட்டவர்கள், இந்து மதத்தைத் தழுவியுள்ளனர் என்னும் சிறப்பு மிக்க செய்தி அறியப்படுதல் காணலாம்.

அண்மையில் உருசிய நாட்டில் நமது இந்துமதத்திற்குரிய இதிகாசங்களாகிய இராமாயணம் பாரதம் முதலிய நூல்கள் மொழி பெயர்த்துப் போற்றப்பட்டு வருகின்றன. பேரறிஞர் ஃபிலியோசா (Dr. Filiozat) என்பவரால், ஃபிரெஞ்சு மொழியில் பெரிய புராணம் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றது. இன்னோரனைய பற்பல செய்திகளால் இந்து மதம், முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றிய தாய்ப் பிறங்கிவருதல் உணரலாம்.

சமன்லால் :

''திருமாலின்கூர்மாவதாரப் படிமையினைக் கொய்ராகுவாவிலும், ஆதிசேடனின் கோயிலை மெக்சிகோ நகரின் அருகிலும், வாமனன் இந்திரன் ஆகியோர் படிமங்களை மெக்சிகோ நகரின் தேசியக் காட்சிச் சாலையிலும் இன்றும் யாவரும் காணலாம்.

பெரூவிய நாட்டுக் கவிதை நூல்களில் ஒவ்வொரு பக்கத்திலும், இராமாயணம் மகாபாரதம் ஆகியவற்றின் இலச்சினைகள் காணப் படுகின்றன. மெக்சிகோ, குவாதமாலா, பெரு, பொலிவியா, ஒண்டுரஸ் முதலிய அமெரிக்க நாட்டுப் பகுதிகளில், சிவபிரான் திருமால் விநாயகர் வாமனர் இந்திரன் சூரியன் அநுமான் முதலிய தெய்வங்கள் வழிபடப்பெற்றன. நடு அமெரிக்காவிலும் தென்னமெரிக்காவிலும் இத் தெய்வங்கள் வழிபடப் பெற்றன'' என்று சமன்லால் என்னும் ஆராய்ச்சிப் பேரறிஞர் கூறுகின்றார் (6).

இராமாயணம் :

எகிப்து தேசத்தில், நமது இராமரின் திருப் பெயர், பெரிதும் பரவியிருந்ததாகத் தெரிகின்றது. அந்நாட்டின் வரலாற்று நூல்களில் முதலாம் இராமேசஸ், இரண்டாம் இராமேசஸ், மூன்றும் இராமேசஸ் என்னும் பெயர்கள் பல காணப்படுகின்றன. எகிப்து நாட்டிலுள்ள சகாரா என்னும் பாலைநிலப் பெயருக்கும், இராமாயணத்தில் வரும் பகீரதனின் முன்னோர்கள் ஆகிய சகரர் என்பவர்களின் பெயருக்கும் இடையே, தொடர்பு இருப்பதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

கிரேக்க நாட்டின் இணையற்ற பெருங் காப்பியம் ஆகிய இலியதம் (Iliad) என்னும் காப்பியத்தின் கதையில் வரும் மாந்தர்களுக்கும் (Characters), இராமாயணம் என்னும் நம் நாட்டு இதிகாசத்தில் வரும் மாந்தர்களுக்கும் இடையே, பல திற ஒப்புமைத் தன்மைகள் காணப்படுகின்றன. இவ்விரு பெருநூல்களுமே, போர் நிகழ்ச்சியினை அடிப்படைப் பொருளாகக் கொண்டவை. இரண்டிலுமே ஒருவன் மனைவியை மற்றொருவன் கவர்ந்துகொண்டு சென்று விடும் செய்தி கூறப்படுகின்றது.

கிரேக்க நாட்டில் இலியதம் என்னும் காவியத்தில் வரும் மெனிலஸ் (Menelus) இராமன்; ஹெலன் (Helen) சீதை ; ஸ்பார்ட்டா நகர் (Sparta) அயோத்திநகரம்; அகமெம்னன் (Agamemuonh) சுக்கிரீவன்; பெட்ராக்ள்ஸ் (Petrocles) இலக்குவன்; நெஸ்ட்டார் (Nestor) ஜாம்பவான்; யுலிஸிஸ் (Ulysses) ஆஞ்சநேயன், ஹெக்டார் (Hector) இந்திரசித்து என்று கூறலாம்படி, ஓரளவு ஒப்புமைத் தன்மை இவ்விரு பெரு நூல்களிலும் அமைந்து கிடக்கின்றது. இன்னோரனைய சான்றுகள் பலவும், இந்து மதத்தின் கருத்துக்கள் கதைகள் கொள்கைகள்,

---

(6) "Every page of Peruvian poetry bears the imprints of Ramayana and Maha-Bharatha.....Shiva Ganesha, Indra, the Sun, Hanuman, Vishnu and his tortoise-incarnation (Kurma-Avatar), were some of the Hindu Gods worshipped in Central and South America.....After 17 years of research, I can now claim to have proved my theory of Hindu colonisation of America. The stones in every corner of America speak of Hindu influences."

—CHAMAN LAL
Hindu America.

உலகின் பல பகுதிகளிலும் சென்று பரவியிருந்த செய்தியினை நுண்ணிதின் எண்ணியுணரப் பயன் படும் இனிய அரிய சான்றுகள் ஆகும் எனலாம்.

ஒப்புமைத் தன்மைகள் :

எத்துணையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த கண்ணபிரானின் திருவவதாரம் பற்றிய வரலாறு, மேலை நாடுகளிலும் மிகப் பழங்காலத்திலேயே பரவியிருந்ததாகத் தெரி கின்றது. கண்ணபிரானின் வரலாற்றைப் போலவே, இயேசுநாதரின் பிறப்பைப் பற்றிய வரலாறும் அமைந்து காணப்படுகின்றது. இரண் டிற்கும் இடையே பெரிதும் ஒப்புமைத் தன்மை மிக்குத் திகழ்கின்றது.

இருவரும் இரவிலேயே பிறந்தனர். கண்ணன், கம்சன் பொருட்டு ஒளிந்து வளர்ந் தான். இயேசுநாதர், ஏரோது (Herod) என்னும் அரசனின் பொருட்டு அஞ்சி மறைந்து வளர்க்கப் பெற்றார். கம்சனைப் போலவே, ஏரோது அரசனும் தனது உயிர்ப் பாதுகாப் பின் பொருட்டுப் பல குழந்தைகளைக் கொல் வித்தான். கம்சனுக்குக் கண்ணபிரானின் அவ தாரம் பற்றிய அறிவிப்பு, முன்னரே நிகழ்ந்தது. அவ்வாறே, ஏரோது அரசனுக்கும் அசரீரியினால் இயேசுநாதரின் அவதாரச் செய்தி அறிவிக்கப் பெற்றது. கண்ணபிரான் சிறையிலேபிறந்தார். இயேசுநாதர் தொழுவத்திலே பிறந்தார். இயேசுவை 'நல்ல மேய்ப்பன்' (Good shepherd) என்று போற்றுவர். அவ்வாறே கண்ணபிரானும் ஆயர்பாடியில் இடையர்களில் ஒருவனைப் பசுக் களை மேய்ப்பவனும் காப்பவனுமாகக் 'கோபாலன்', 'கோவிந்தன்' என்று பெயர் பெற்று விளங்கினன். இயேசு மலைச் சொற் பொழிவு (Sermon on the Mount) நிகழ்த்தினர். கண்ணபிரான் குருக்ஷேத்திரத்தில் தேர்த்தட் டின்மீது இருந்து, பகவத் கீதை (Song Celestial) உபதேசம் புரிந்தார். இத்தகைய ஒப்புமைகள் பலவும் நாம் அறிந்துணர்ந்து மகிழ்தற்குரியன. (7).

விவேகானந்தர்:

இந்து மதத்தின் இணையற்ற சிறப்பு, விவே கானந்த சுவாமிகள் அவர்களால், அமெரிக்க நாட்டில் சிகாகோவில் கூடிய உலகச் சமய மகா நாட்டில், அனைத்து அறிஞர்களின் உள்ளங்களை யும் கவரும் முறையில் எடுத்து விளக்கப்பெற்ற தனை நாம் அறிவோம். வீர புருஷராகிய விவே கானந்த சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற இராமகிருஷ்ணர் பணி மன்றம், இன்று உலகத் தின் பல பகுதிகளிலும், நூற்றுக்கு மேற்பட்ட பல கிளை நிலையங்களைத் தோற்றுவித்து, இந்து மதத்தைப் பரப்பிச் சிறந்த தொண்டாற்றி வருகின்றது.

முடிவுரை :

இந்து சமய வரலாற்றிலும், மறுமலர்ச்சி யிலும் விவேகானந்தருக்கு மிகச் சிறந்த பங்கு உண்டு. தேச பக்தி, தெய்வ பக்தி ஆகிய இரண்டையும் சேர்த்து இணைத்து, நமது இந்து மத வளர்ச்சிக்கு அவர் சீரிய சிறந்த பணி புரிந்துள்ளார். நாட்டுப் பற்றுப் போலவே, சமயப் பற்றும் நமக்கு மிக மிக இன்றியமையா ததாகும். நாம் நமது இந்து சமயத்தை மிகவும் போற்றி வளர்க்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். 'இந்து மதம் வாழ்ந்தால் தான் இந்தியாவும் வாழும்' என்பது விவேகானந்தர் விடுத்த எச்ச ரிக்கை. ஆதலின் நாம் நம் இந்து மதத்தை இக் காலநிலைக்கு ஏற்பப் போற்றி வளர்த்து, நலம் பலவும் அடைய முற்படுவோமாக!

[காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச் சாரிய சுவாமிகள் அவர்களின் ஆதரவில், சென்னையில் 1-3-76 முதல் 5-3-76 வரையில் நடைபெற்ற **உலக இந்து மாநாடு** *குறித்து, இக்கட்டுரை வெளியிடப் பெறுகின்றது.*

—ஆசிரியர்]

(7) "The birth stories of Krishna and Jesus have a certain striking resemblances suggestive of mutual borrowing. The similarities in the teachings of the 'Bhagavad Gita' and the Gospels have led some to think that Krishna and Christ were one. A comparison of the lives of the founders of the wo religions of Buddhism and Christianity, their scriptures and their ethical teachings is undoubtedly an instructive study. The study of the ancestry of ideas is a fertile branch of Comparative Religion..."

—DR .S. RADHAKRISHNAN.

இந்து சமயம்

"இப்பரதமாகண்டத்தில் தொன்றுதொட்டு நடைபெற்று வருகின்ற சாரு வாகம், பௌத்தம், சமணம், மாயாவாதம், வைஷ்ணவம், சைவம் என்றற்றொடக்கத்துச் சமயங்களெல்லாம் இந்து சமயங்களென்று பெயர் பெறுகின்றன.

இவ்விந்துசமயத்தின் பிரிவுகளான சாருவாகம், பௌத்தம், சமணம், மாயாவாதம், வைஷ்ணவம், சைவம் முதலிய சிறப்புச் சமயங்க ளெல்லாம் அழிந்தொழியினும், அன்றி வேறு சில சமயங்கள் புதிதே முளைப்பினும், இவற்றிற்கெல்லாம் பொதுவாக விரிந்து, இவைதம்மை யெல்லாம் தன்கண் அடக்கிக் கொண்டிருக்கும் இயல்புடையதான இந்துசமயம், என்றும் உள்ளதாயே விளங்கும்." **—மறைமலையடிகள்.**



சென்னை சைதாப்பேட்டை திருக்காரணி அருள்மிகு சொர்ணம்பாள் உடனுறை திருக் காரணீசுவரர் இராச கோபுரத் திருப்பணியும், கோடி அர்ச்சனையும் 2-2-76 திங்கட்கிழமையன்று காலை 9 மணியளவில், காஞ்சி காமகோடி பீடாதிபதி சகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களால் தொடங்கி வைக்கப்பெற்றன.



பஞ்சாமிர்தம்

டி.என்.சுகிசுப்பிரமணியன்

இறுமாப்பு வேண்டாம்

காலையில் சூரியன் உதிக்கிறான்; கடவுளை வணங்குவதற்காக.

காற்றுத் தேவன் இயங்குகிறான்; கடவுளுக்குச் சாமரம் வீசுவதற்காக.

வருணன் நீர் நிலையில் நிற்கிறான்; ஓடுகிறான்; கடவுளை அபிடேகம் செய்வதற்காக.

புள்ளினங்கள் பாடுகின்றன; பூபாளம் பிறக்கிறது. இரண்டுமே கடவுளின் காதுக்காகப் பிறந்த கானங்கள்.

உன் உடலும் அதிகாலையில் விழிக்கட்டும், நான் கடவுளைத் தொழ வேண்டும்.

என் சுவாசப் பைக்கு நல்ல காற்றைத்தா; நான் உன்னையே சுவாசிக்கிறேன்.

நான் நீரில் மூழ்கி இருக்கும்போது நிமலா. உன் நினைவில் மூழ்கி இருக்கிறேன். உன் நினைவால் புனித மடைந்து நீரை விட்டு வெளியே வருகிறேன்.

புள்ளினங்களின் பூங்குரலும், பூபாளமும் என் காதில் நுழைகின்றன. இறைவா பறவை போன்ற நான் பறக்க முடிகிறது. பாடலைப் போல எங்கும் நாதத்தைப் பரப்ப முடிகிறது.

தினம் தினம் இத்தனை அற்புதங்களைச் செய்கிறாய்; நீ இன்பங்களை இனிமையாக வாரி வழங்குகிறாய்; நான் வணங்காமலே வாளாவிருந்தால் எனக்கு வாழ்க்கையது?

இறுமாந் திருப்பன் கொலோ-ஈசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமா னேந்தி தன் சேவடிக்கீழ்ச் சென்றங்கு
இறுமாந் திருப்பன் கொலோ

—திருநாவுக்கரசர்.

யார் நல்லவர்

''மன்னரை மதிக்காதவர்கள், உண்மையை மதிப்பவர்கள் நாட்டில் இருக்கக்கூடுமோ!''

இவ்வாறு அரசர் ஒருவருக்கு ஐயப்பாடு உண்டாயிற்று!

தமது சேவகனைக் கூப்பிட்டார்.

''நாளைக் காலை உன் கண்ணில் முதன் முதலாகத் தென்படும் மூவரை நீ அழைத்து வா'' என்றார்.

''சேவகன் ''உத்தரவு'' என்றான்.

மறுநாட்காலை ராஜ வீதியில் வந்த மூன்று நபர்களை ராஜாவின் சேவகன் பிடித்துக் கொண்டான்.

நிரம்பப்படித்த பாண்டித்தியம் நிறைந்த புலவர் ஒருவர்.

கோவிலில் பூசை செய்யும் பரமவைதீக சிகாமணி ஒருவர்.

தன்னை விற்கும் விலைமகள் ஒருத்தி.

மூவரையும் அரசர் முன்கூட்டி வந்து நிறுத்தினான்.

தனித்தனியே மூவரையும் சந்தித்தார் அரசர்.

''சகலசாஸ்திரங்களையும் துறைபோகிய ''பண்டிதர் திலகமே! கோவில் பூசை-தேர் திருவிழா முதலானவை நடப்பதை யறிவீர். இதனால் மக்களுக்குப் பயனில்லை என்று யாம் நினைக்கின்றோம். தங்கள் கருத்து என்ன!?'' என்று கேட்டார் அரசர்.

படித்த மேதாவி சில விநாடிகள் யோசித்தார். முடிவைச் சொன்னார்.

''அரசர் பெருமானே! ஆலயத்தால் யாருக்கு என்ன பயன்! ஆலய வழிபாடு பயனற்றது என்பதற்கு என்னால் மேற்கோள் சொல்ல முடியும்'' என்று தொடங்கினார்.

''ஆலய வழிபாட்டால் பயன் உண்டா இல்லையா?''

''இல்லை!''

படித்த மேதாவிக்கு ஆசனம் தந்து உபசரித்து உட்காரச் சொன்னார்.

அடுத்து கோவில் குருக்கள் வந்தார். அவரது திருமேனியில் வழிபாட்டுச் சின்னங்கள் முத்திரைகள் யாவும் விளங்கின.

''ஆலய வழிபாட்டால் நன்மை இல்லை என்பது எனது எண்ணம். தங்கள் கருத்து என்ன?''

''அரசர் பெருமானே! என் போன்று ஆலயத்தில் சேவகஞ் செய்பவர்களுக்கு வயிறு நிறைகிறது. ஆலயம் இல்லாது போனாலும் என் போன்றவர்கள் உண்ண முடியும். ஆலய வழிபாடு தேவை இல்லை'' என்று கோவில் குருக்கள் சொன்னார்.

அன்னாருக்குப் பண்டிதர் பக்கத்தில் ஒரு இருக்கை கொடுக்கப்பட்டது.

அடுத்து விலைமகள் வந்தாள். பழைய கேள்வியையே அரசர் கேட்டார்.

'அரசர் பெருமானே! நான் படித்த பண்டிதர் இல்லை; பூசை செய்யும் குருக்களும் இல்லை. அறிவும் அனுபவமும் இல்லாதவள். ஆண்டவன் இல்லையென்று முடிவு செய்வதும் ஆலயத்தை வழிபாடு செய்யாமலும் என்னால் இருக்க முடியாது. அரசர் சொன்னார் என்பதற் காகத் தலையாட்டும் துணிச்சல் இல்லாத பேதை. ஆண்டவன் என்ற தத்துவத்தால் மனதில் நிம்மதி; பிறருக்கு இரக்கப்படும் சமு தாயப் பண்பாடு; பணப்பங்கீடு யாவும் நடக் கின்றன. ஆண்டவனைச் சுற்றி ஊர் அமைகிற மாதிரி உள்ளங்களும் அமைதல் வேண்டும். தங்கள் கருத்துக்கு எதிராக நான் பேசியதற்குத் தண்டனை தந்தாலும் அது ஆண்டவன் கருணை என்று ஏற்றுக் கொள்ளுகிறேன்.

பண்டிதரும் சிரித்தார்.

குருக்களும் சிரித்தார்.

அரசர் பெருமான் எழுந்து ''தாயே! ஆண்டவனின் தன்மையை அரச பதவியுற்ற வன் சொல்லுக்காக ஏற்காது மறுக்கும் அளவு நெஞ்சத் துணிவு உங்களுக்கு இருக்கிறது. பக்தர்கள் எவருக்கும் பயப்படமாட்டார்கள். பக்தியைப் பற்றிப் படிப்பவர்கள்; பகவானின் அருகில் நின்று பயன் அடைகிறவர்கள் சந் தர்ப்பவாதிகள். தாங்களோ உண்மையின் வாரிசு. கடவுளுக்கு அஞ்சுபவர் என் வணக்கத் திற்குரியவர்'' என்று விழுந்து வணங்கினன்.

படித்த மேதாவிகளும், பக்தி மார்க்கம் கைங்கரியம் செய்கிறவர்களும் எப்படியும் சாய் வார்கள். பாமரர்கள் உறுதிப்பாட்டுடன் இருப்பார்கள்.

''பெரியோரெல்லாம் பெரியருமல்லர்
சிறியோரெல்லாம் சிறியருமல்லர்''

கனியும் கடவுளும்

உலகம் என்பது அனுபவங்களைச் சொல் லும் களஞ்சியம்.

பாத்திரத்தின் அளவுக்கு ஒப்பாகத் தண் ணீரை மொண்டு செல்லலாம். அனுபவங்களை அவரவர் அறிவு, ஞானம் தாகம் இவற்றுக்கு ஒப்பாக உலகத்திலிருந்து உணரலாம்; உண்ண லாம்; விழுங்கலாம்.

வாழைப்பழம் சீப்போடு இருக்கிறது. இதனைக் கண்ணுறும் கழுதை அதன் காம்பும் தோலையும் சேர்த்துத் தின்னும்.

எறும்பு பழத்தில் ஊர்ந்து, எப்பகுதியில் அதனைத் துளைக்க முடியுமோ அங்கே மட்டும் தலையை நுழைக்கும்.

மனிதர்கள்! இவர்கள் உண்ணும்விதம் மிக வும் விந்தையானது. விலை மலிவு எங்கேயென்று தேடுவார்கள். பழுக்கும் காயாக இருந்தாலும் தின்பவர்கள் உளர்; கனிந்து தூரஎறிய வேண் டியதையும் உண்பார்கள்; கனிவோடு ருசியோடு நெகிழாமலும் காயாக இல்லாமலும் கனியாகத் தேர்ந்தெடுத்து உண்பவர்களும் இருக்கிறார்கள். இன்னுஞ்சிலர் என்ன உண்டோம் என்று அறி யாமலே உண்பார்கள்; அப்படியே விழுங்கும் மனிதர்களும் இருக்கிறார்கள். உரித்த வாழைப் பழம் இருக்குமா என்று தேடும் சோம்பேறி களும் மனிதக் கூட்டத்தில் உளர்.

வாழைப்பழம் தின்னும் வக்கணையிலிருந்து ஒரு மனிதனின் குலம்-உலக ஞானம், மனிதத் தன்மை அவனது பிற பழக்க வழக்கங்கள் அறிவு அனுபவங்கள் யாவற்றையும் சொல்லி விடலாம்.

எப்பொருளையும் அதனை அடையும் ஆசை, அதற்கான சீலமான வழிகள், அடைந்த பின் செய்யும் அறிவுத்திறன் முதலியன நன்கு தெளிந்து நிற்கும்.

வாழைப்பழத்தைத் தக்க சமயம் தேர்ந் தெடுத்துப் பக்குவமாக உரித்து, பார்ப்போர் அருவருப்புக் கொள்ளாத வண்ணம், அழகுபட உண்பதற்குப் பயின்றிருக்க வேண்டும். துப்புர வும் இனிமையும் பிறர் அனுபவிக்கும்படி உண ரும்படியாக உண்பதே சிறந்த அறிவு.

கனியை உண்பதும் கடவுளை உணர்வதும் ஒன்றே. எதற்கும் எங்கும் பக்குவநிலை தேவை. வாயும் வயிறும் தனிப்பட்டவர்களுக்கு இருந் தாலும் வழிகாட்டுவதற்கு ஒரு ஆசான் தேவை. தாய் போல அன்பும், நண்பன் போல் குழை வும், வழிகாட்டிபோல முன் அனுபவமும் உள்ள நபர்கள் தேவை.

உரித்த பழத்தை உண்ணத் தெரிவதே பெரிய கலையென்றால், பிறரிடம் கற்றுக்கொள்ள வேண்டிய அனுபவம் என்றால், உலகமெங் கணும் நிறைந்த கனியைப் பிறர் வழிகாட் டாமல் அனுபவிக்க இயலாது.

உணவைப் போலக் கடவுளை இனம் காண் பது எளிதான காரியம்.

நீதி நியாயம் என்ற எல்லைக் கோட்டுக்குள் நின்று கடவுளைக் காண்பதும் நடக்கக் கூடிய காரியம். சட்டம் நியாயம் தெரியாதவர் களுக்குச் சட்டமும் நியாயமும் அவசியமற்றவை போலத் தோன்றும். குரங்கு கையில் பூமாலை அகப்பட்டதுபோலச் சிலர் கைக்குள் கடவுள் தத்துவம் அகப்பட்டுக் கொள்ளும்.

நீதியை அறியாதவர்கள் நீதிபதியாக வருவதும், பூவின் மணம் அறியாதவர்கள் பூமாலை எடுப்பதும், கடவுள் தத்துவத்தைக் குருநாதன் இல்லாமல் விழுங்க முற்படுவதும் கேலிக்கிடமாகும்.

ஈசனைக் கனியாக நினைத்துக் கனியை உண்ண வாராத மக்களைப் பார்த்து அப்பரடி கள் சொல்லுகிறார்.

மனிதர்காள் இங்கே வம்மொன்று
சொல்லு கேன்
கனிதந் தால்கனி உண்ணவும்
வல்லீரே!
புனிதன் ஈசன் பொற்கழல்
என்னுங்கனி
இனிது சாலவும்
ஏசற் றவர்கட்கே. **

மந்தரை

திரு. ம. அ. முருகேசன், பி.ஏ., பி.எல்.

கம்பனுடைய ''இராம காதை'' சிறந்த நாடகம் என்பதில் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. உம்பர் நாட்டுச் செல்வத்திலும் அரசாட்சியிலும் களிப்படையாத உயர்ந்த உள்ளம், கம்பனுடைய கவி நயத்தில் களிப் படைகிறது. காவிய ரசனையும், கவிதை நயப் பும் அறியாத பாமரர்கள் கூட நெடுங்காலமாக இராம காதையை முழுமையாகவும், பகுதிக ளாகவும் இசைத்தும், நடித்தும் அநுபவித்து வருகின்றனர். தங்களுக்கே தெரிந்த ரசனை முறையிலே தெருக் கூத்துகளாகவும் நடத்தி அனுபவித்து வந்திருக்கின்றனர். படித்து இன் புறுவதற்கு மட்டுமல்லாமல், நாடகமாக நடிப் பதற்கும் கம்பனுடைய இராம காதை வெகு வாக இடங்கொடுக்கிறது. முழுமையாகப் படித்தோ, நடித்தோ மகிழக் காலம் இடந்தராத போதும் இராமாயணத்தின் பகுதிகளை மட்டும் எடுத்துத் தனித் தனியே ரசிக்க முடியும். பாத்திரங்களில் கூட சோடை என்பதே கிடை யாது. திரும்பத் திரும்பக் கதை நெடுகிலும் தொடர்ந்து வரும் பாத்திரமானாலும் அல்லது ஓரிரு முறையே தோன்றி மறையும் பாத்திர மானாலும் அதை முழுமையாகச் சித்தரித்தே மேடையில் ஏற்றி உலவ விடுகிறான் கம்பன். முழுமை பெறுத பாத்திரம் என்பது இராம காதையில் அரிது.

இராம காதை விறுவிறுப்பு அடைவதே அயோத்தியா கண்டத்தில்தான். பால காண் டத்தில் கதைக்கான அஸ்திவாரம் விரிவாக இடப்படுகிறது. இருந்தாலும், கதையைப் பொறுத்த வரை ஒட்டமில்லை. ஒட்டமெல்லாம் அயோத்தியா காண்டத்தில் தான். ஏன்? திருப்பு மையமே அயோத்தியா காண்டத்தில் தான். ஒரு வகையில் பார்க்கப் போனால், சிலப்பதிகாரத்தில் கானல் வரியும், இராம காதையில் அயோத்தியா காண்டத்தில் மந்தரை சூழ்ச்சிப் படலமும் ஒப்பு நோக்கத் தக்கன. கானல் வரியிலே அதுவரை மாதவியின் ஆடற் கலையிலும் மையலிலும் விடுதல் அறியா விருப் பினனாகி மயங்கிக் கிடந்த கோவலன், திடீர் என்று அந்த மையலிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, ''மாயப் பொய் பல காட்டும் மாயத் தாள்'' என்று மாதவியைப் பிரிந்து செல் லுகிறான். இதைத் தொடர்ந்து இன்பியல் நாடகமாக ஓடிக் கொண்டிருந்த கதை கொடி யோன் (Villain) சூழ்ச்சி இல்லாமலேயே, துன் பியல் துறைக்குத் திரும்பி விடுகிறது. அங்கு விதிதான் கொடியோன் என்று கொள்ள வேண்டும். அதைத் தொடர்ந்து, கோவலன் —கண்ணகி மதுரைப் பயணமும், சிலம்பு விற்ற லும், கோவலன் கொலைக் களப்படுதலும், மதுரை அழற்படுதலும் துன்பியலின் உச்சா னிக்கே போய் விடுகிறது. அது போல, இராம காதையிலும் அயோத்தியா காண்டத்தில் மந்தரை மேடையில் தோன்றியவுடன் கதை துன்பியலுக்குத் திரும்பி விடுகிறது. மந்தரையின் துர்ப்போதனையை எடுத்து, கைகேயி மனம் மாறு தலும், அவள் வரங்கள் பெற்று இராமனது முடி சூட்டு விழாவைத் தடுத்து அவனைக் காட் டுக்கு அனுப்புதலும், அதைத் தொடர்ந்து தயரதன் மடிவதும், இராமனது வனவாசத்தில் சூர்ப்பனகை, இராவணன் தோன்றி, சீதை சிறைப்படுதலும் நிகழ்கின்றன. மந்தரை தோன்றி முடி சூட்டு விழா நின்று போகாம லிருந்தால் கதையே மாறியிருக்கும். அவதார இலட்சியம் கூட நிறைவேறியிருக்காது. இன்று இராமாயணமாகிய அமுதம் நமக்குக் கிடைத் திருக்காது. இதனைக் கம்ப நாடனே இரண்டு பாடல்களில் சொல்லுகிறார்.

''தீய மந்தரை இவ்வுரை செப்பலும், தேவி
தூய சிந்தையும் திரிந்தது, சூழ்ச்சியின் இமை
யோர்
மாயையும் அவர் பெற்ற நல்வரம் உண்மையா
லும்
ஆய அந்தணர் இயற்றிய அருந்தவத்தாலும்.

''அரக்கர் பாவமும், அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க நல் துறந்தனள் தூமொழி மடமான்
இரக்கம் இன்மையன்றே இன்று இவ்வுலகங்கள்
இராமன்
பரக்கும் தொல் புகழ் அமுதினைப் பருகுகின்
றதுவே''

தீய மந்தரையின் துர்ப்போதனையால், கைகேயியின் தூய சிந்தையும் திரிந்தது என்று முதலில் சொல்லுகிறார். அடுத்து, தேவர்கள் மாயமும் அவர்கள் பெற்ற வரங்களும், அரக்கர் பாவமும், அல்லவர் அறமும், முனிவர்களின் தவமும் அப்படி கைகேயியின் மனம் மாறிய தற்குக் காரணங்கள் என்கிறார். இருந்தாலும்,

அப்படி கைகேயி மனம் மாறியதாலன்றே இன்று இராமாயணமாகிய அமுதம் நமக்குக் கிடைத்தது என்கிறார். எனவே, மந்தரையின் தோற்றம் இராம காதையில் திருப்பு முனையின் நுனி என்பதில் ஐயமில்லை. இன்னும் ஆழ்ந்து

பார்க்கப் போனால் இராம காதையில் மைல் கற்களாக இருப்பவர்களே பெண் பாத்திரங்கள் எனலாம். சீதை, மந்தரை, கைகேயி, தாடகை, சூர்ப்பனகை என்ற பாத்திரங்கள் கதை ஓட்டத் திற்குப் பெரிதும் துணை செய்கின்றன. இராமா யணக்கதைக்கே பெண்ணைதானே அச்சாணி யாகத் தோன்றுகிறது. இராவணன் சீதை மீது வைத்த ஆசை மட்டுமல்ல. தயரதன் கை கையியின் மீது வைத்த ஆசையையும், இராமன் சீதையின் பால் வைத்த நேசத்தால் இலக்குவன் மொழி கேளாது மாரீச மாய மானைப் பின் தொடர்ந்து போனதையும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். ''பெண்கள் பால் வைத்த நேயம் பிழைப்பரோ சிறியர் பெற்றால்''. இதை யும் கம்பன் வசிட்டன் வாயால் சொல்லுகிறான். முடி சூட்டு விழா நடப்பதற்கு முன் வசிட்டன் இராமனுக்கு அரச நீதிகளை உரைக்கும் போது இந்தக் கருத்தை மறைமுகமாகச் சுட்டுகிறான்.

''தூமகேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கையால் வரும்
காமம் இல்லை யெனில் கடுங்கேடு எனும்
நாமம் இல்லை நரகமும் இல்லையே''

என்பது; வசிட்டரின் அறிவுரை. இந்த முன் னுரையுடன், இராம காதையில் முதற் கொடி யோளாகிய மந்தரையைப் பார்க்கலாம்.

களத்திலே மந்தரை தோன்றுவதே தீமைக்கு அறிகுறி என்று கம்பர் காட்டுகிறார். ''இன்னல் செய் இராவணன்'' இழைத்த தீமை போல் துன்னருங் கொடு மனக் கூனி தோன் றினாள்'' என்பது கம்பன் வாக்கு. இராவணன் இழைத்த தீமையெல்லாம் ஒருருவங்கொண்டு வந்தது போல் இருக்கிறாளாம் கூனி. அதாவது இராவணன் இழைத்த தீமையெல்லாம் ஒன் றாகத் திரண்டு கூனியாகிய வடிவம் கொண்ட தாம். இராவணனின் முடிவுக்கு வித்திடுபவளே மந்தரைதானே! அதனால் தான் இராவணன் இழைத்த தீமையைக் கூனியின் தோற்றத்துக்கு ஒப்பிடுகிறார். பின்னும் ''துன்னருங்கொடுமைக் கூனி'' என்று இன்னொரு அடைமொழி கொடுக் கிறார். பிறிதோரிடத்தில் ''உள்ளமும் கோடிய கொடியாள்'' என்கிறார். அதாவது அவள் உடலைப் போல உள்ளமும் வளைந்தது. அப்படி வளைந்த மனம், அடுத்தவர் நல்ல மனதையும் கோணுவித்து விடும் ஆற்றல் பெற்றது. ஆற்றல் மிகுந்த பொருள், ஆற்றல் குறைந்த பொருளைத் தொடுகையில் தன் வயமாக்கி விடு கிறது. நல்ல ஆற்றலாக இருந்தால் அது நன் மையை விளைவிக்கும். தீய சக்தி மிக அதிகமாக இருந்தால் அது நல்லதையும் அடக்கித் தன் வயப்படுத்தித் தீயதாக்கிவிடும். அதுபோல, அடுத்தவர் நல்ல மனதையும் கோணுவிக்கும் ஆற்றல் படைத்தது மந்தரையின் தீய உள்ளம்.

''நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றால்'' —குறள்

எனவே, ''துன்னருங் கொடு மனக் கூனி'' என்கிறார். இப்படி இயல்பாகத் தீமை முற்றிய மந்தரை, இராவணன் இழைத்த தீமை போல: அவன் முடிவிற்கு வித்திடுபவளாக, நாடக அரங் கிலே தோன்றுகிறாள். அவளது தோற்றம் தீமைக்கு அறிகுறி. நல்லவர் வரவு நன்மை பயப்பதும், தீயவர் வரவு தீமை பயப்பதும் அனுபவத்தில் கண்ட உண்மை. உடலும் உள்ளமும் கொடிய மந்தரையின் வரவு எப்படி நன்மை பயக்கும்? சூர்ப்பனகை காமவல்லியாக இராகவன் எதிரில் வந்த போது அவள் வரவு தீமை பயக்கும் என்பதை உள்ளுணர்வால் அறிந்த இராகவன் ''நும் வரவு நீதில் வரவாக'' என்று கூறுவதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கன.

இப்படித் தோன்றிய மந்தரையின் மெய்ப் பாடுகளையும் செய்கைகளையும் கம்பன் மேலும் சொல்லோவியமாகத் தீட்டுகிறான் :

''தோன்றிய கூனியும் துடிக்கும் நெஞ்சினள் ஊன்றிய வெகுளியாள், உலைக்கும் உள்ளத்தாள் கான்று எரி நயனத்தாள், கதிக்கும் சொல்லினள் மூன்றுலகினுக்கும் ஓர் இடுக்கண் மூட்டுவாள்.

தன் கூன் முதுகின் மீது உண்டி வில் எறிந்த இராமனின் முடி சூட்டு விழாவுக்காக நகர் அலங்கரிக்கப்படுவதைக் கண்டு நெஞ்சந் துடிக்கிறாள். அவளுடைய அடிமனத்திலிருந்து கோபம் பொங்கியெழுகிறது. அக் கோபத்தி னால் கண்கள் நெருப்புத் துண்டமெனச் சிவக் கின்றன. ஆத்திரத்தில் அறிவிழந்து மனம் குழம்புகிறாள். மூன்று உலகத்துக்கும் துன்ப மாகிய நெருப்பை மூட்டவந்தவளாய்க் கேகயன் மடந்தை கோயிலை விரைந்தடைகிறாள். அங்கே, பாற்கடலில் தோன்றிய ஒரு பவளக் கொடி போலும், கடலில் உண்டான மணிக ளோடு ஒரு தாமரை பூத்தது போலவும், கடைக்கண் கருணை பொழியப் படுத்திருந்த கைகேயியினுடைய அருமையான பாதங்களைத் தீண்டி எழுப்புகிறாள். இங்கு கம்பர் ஒரு அரு மையான உவமை சொல்லுகிறார்.

கடைக்கண் கருணை பொழியப் படுத்திருந்த கைகேயியின் பாதங்களை மந்தரை தொட்டு எழுப்பினாள் என்பதை, ''செம்பொற் சீறடி கைகளில் தீண்டினள் காலக் கோள் அனுள்'' என்று கம்பர் பாடுகிறார். காலக்கோள் என்பது தீங்கு பயக்கும் கேது என்னும் கோள். அது பாம்பு. பாம்பின் குணம் தீண்டுவது. அப்படித் தீண்டப்பட்டால், தீண்டப்பட்ட இடம் காயாக இருந்தாலும் அந்த உடலில் நஞ்சு தலைக்கேறி, உயிர்க்கிறுதி ஆகும். அத்துடன் நன்றாக இருந்த உடல் முழுவதும் நஞ்சு பரவி அந்த உடலை நஞ்சாக்கிவிடும். மந்தரை கைகேயியை எழுப்பி இராமன் முடிசூட்டு விழாவைத் தெரி வித்து அதை எப்படியும் தடுத்து விடக் கைகே யியை உடன்படச் செய்து அவளுடைய தூய சிந்தையைத் திரிய வைத்து, தன் கருத்துக்கு இசைய வைக்கிறாள். தூயவளாக இருந்த கைகேயியைக் கெடுத்தவள் மந்தரைதான். அப்படி மந்தரை கெடுக்கப் போகிறாள் என் பதும், கைகேயி கெடுக்கப்படப் போகிறாள் என் பதும் அவளைக் கெடுக்க வந்த நச்சுப் பாம்பைப் போல் கொடியவள் என்பதும் விளங்க, ''செம் பொற் சீறடி கைகளில் தீண்டினாள் காலக்கோள் அனுள்'' என்று அருமையாக விளக்குகிறார் கம்பர்.

கைகேயியைத் தீண்டி எழுப்பி, உரையாடலை மந்தரை துவக்குகிறாள். ''தன்னை விழுங்க வரும் இராகு கேதுக்கள் நெருங்கி வரும் வரை ஒளி வீசிக் கொண்டிருக்கும் சந்திரனைப் போல, உனக்கு வரவிருக்கும் தீமையை அறியாது மகிழ்வுடன் உறங்கிக் கொண்டிருக்கிறாயே'' என்று கைகேயியைப் பார்த்து மந்தரை கூறுகிறாள். இவள் மனதை அறியாத கைகேயி ''தெவ்வடு சிலைக்கை என் சிறுவர் செவ்வியர், அவ்வவர் துறை தொறும் அறந் திறம்பலர் எவ்விடர் எனக்கு வரும்?'' என்றும், ''விராவரும் புவிக் கெலாம் வேதமே அன இராமனைப் பயந்த எற்கு இடருண்டோ'' என்றும் வினவுகிறாள். ''நாளை இராமன் முடி சூடப் போகிறான், கோசலைக்கு வாழ்வு வரப் போகிறது'' என்று மந்தரை பதிலிறுக்கிறாள். இது மகிழ்ச்சியான செய்தி தானே என்று மந்தரையின்உள் மனதை அறியாத கைகேயி அவளுக்கு ''சுடர்க்கு எலாம் நாயகம் அனைய'' ஒரு முத்து மாலையைப் பரிசாகத் தருகிறாள். மந்தரை அம்மாலையை வாங்கி நிலங் குழியும்படி ஓங்கி வீசி எறிகிறாள். பிறகு தன் கருத்தை விளக்குகிறாள். கோசலை, இராமன், சீதை ஆகியவர்களுக்கு ஏற்றம் வந்து விடுமென்றும், தான் கோசலைக்கு ஏவல் செய்ய நேருமென்றும், அப்படி இராமனே நாட்டை ஆள்வதென்றால், பரதனைக் காட்டுக்கு அனுப்பி விடலாமென்றும், அல்லது இறந்து விடலாமென்றும் கூறுகிறாள். மேலும், முடிசூட்டு விழா நிகழ்ச்சி தீர்மானிக்கப்படுவதற்கு முன்னமேயே பரதன் தன் பாட்டனார்வீட்டுக்குச் சென்றதைத் திரித்து, ஏதோ முன் கூட்டியே திட்டமிட்டு, பரதனைக் கோசலத்திலிருந்து கேக நாட்டுக்கு தசரதனும் மற்றவர்களும் அனுப்பிவிட்டார்கள் என்றும், அப்படி அவர்கள் அனுப்பியதன் நோக்கம் இப்பொழுது தான் புரிகிறது''— ''சேணிடைப் போக்கிய பொருளெனக்கின்று போந்ததால்'' என்றும் திரித்து சமத்காரமாகப் பேசுகிறாள்.

தாயும் தந்தையுமாகிய தசரதனும் கைகேயியும் உனக்கு நல்லது செய்யவில்லையே, ஐயோ! என் அப்பா பரதா நீ என் செய்வாய்'' என்று ஏதோ தான் ஒருத்திதான் பரதனைக் காப்பாற்றப் பிறந்தவள் போல் புலம்புகிறாள், பரதனுடைய இளமை, கல்வி, வீரம், அழகு, மற்ற நல்ல குணங்கள் எல்லாம், 'புல்லிடைச் (அங்ஙனம்) சிந்திய அமுதம்'' போல் வீணாகிப் போகின்றதே என்றும் அங்கலாய்க்கிறாள். கைகேயிக்குப் பரிந்து பேசுபவளைப் போல், ''அரச குடியிற் பிறந்து அரச குடியில் வாழ்க்கைப்பட்டு பட்டத்தரசியாக இருந்தும், துன்பப் படப் போகிறாயே, நான் சொல்லியும் நீ உணராமலிருக்கிறாயே?'' என்றும் கூறுகிறாள். இப்படியெல்லாம் ஏதோ, தன்னுடைய தலைவியாகிய கைகேயிக்கும் அவள் மகனாகிய பரதனுக்கும் பெரிய தீங்கு வருவது போலவும், அவர்களுக்கு எதிராகப் பெரிய சூழ்ச்சியும் சதியும் நடப்பது போலவும், அதைத் தான் ஒருத்தியே அறிந்து அவர்களைக் காக்க வந்தது போலவும் பேசுகிறாள். உண்மையில், அவளுக்கு இராமனிடத்திலே வெறுப்பும் குரோதமும். இராமன் தம் சிறு வயதில் மந்தரையின் கூன் முதுகில் உண்டை வில்லால் அடித்ததை மந்தரை மறக்கவில்லை. மன்னிக்கவுமில்லை. அதையே மனதில் நினைத்து வன்மம் கொள்கிறாள். இராமனைப் பழி வாங்குவதற்காகவே அவன் முடி சூட்டு விழாவைத் தடுக்கத் திட்டமிடுகிறாள்.

தன்னுடைய குறிக்கோளை வெளியில் காட்டாமல் ஆனால் அதையடையக் கைகேயியைக் கருவியாகப் பயன்படுத்துகிறாள். கைகேயியைத் தன் பக்கம் இழுக்க அவளுடைய தாய்மை உணர்வைத் தூண்டிப் பரதனுக்குத் தீமை வருகிறது. அவனைக் காக்க வேண்டும் என்று ஒரு கற்பனையை அவிழ்த்து விடுகிறாள். தன்னுடைய எண்ணத்தையும் நோக்கத்தையும் மறைத்துக் கைகேயிக்கும் பரதனுக்கும் நல்லது செய்ய வந்தவள் போல் நடிக்கிறாள். ஆனால் இதையெல்லாம் கேட்டுக் கைகேயியின் மனம் மாறவில்லை. மந்தரையின் வார்த்தைகளை அவள் வெறுக்கிறாள். மந்தரையைக் கோபிக்கிறாள். 'சூரிய குலத்தவரின் வாய்மையையும், மரபையும் குலைக்கும் சிறுமதி படைத்தவளே' என்றும், தனக்கும் தன் மகன் பரதனுக்கும், அவள் நல்லவளில்லை என்றும் மந்தரையைக் கடிந்துரைக்கிறாள். 'ஏதோ ஊழ்வினைத் தூண்டலால் எக்காரணத்துக்காகவும், புகழ் கெடுமாறு சூரிய குலத்துக்குரிய வரம்பு முறையிலிருந்து மாறுபட முடியாது என்று பதிலிறுக்கிறாள். அத்துடன் அமையாது, 'அறிவில்லாதவளே, நீ இத்துடன் அடங்கு, இப்படிக் கீழ்த்தரமாகப் பேசிய உன் நாவை அறுக்காது பொறுத்தருளுகிறேன். உன் எண்ணத்தைப் பிறர் அறிந்தால் உன் மீது இராஜத் துரோகக் குற்றம் சாற்றுவார்கள். நீ என் முன் நில்லாது போய் விடு' என்று கடுமையாகப் பேசுகிறாள். ஆனால், மந்தரை இதற்கெல்லாம் அசையவில்லை. அவள் ஆழ்ந்த சதித் திட்டத்துடன் வந்திருப்பவள். கடுமொழிக்குப் பயந்தால் அவள் காரியம் நடக்குமா? எனவே, இத்தனை வசவுகளையும் பொறுத்துக் கொண்டு, நின்ற இடத்தை விட்டு அசையாமல், மேலும் கூறத் தொடங்குகிறாள்.

''என் புகலிடமே, வஞ்சிக் கொடி போன்றவளே, நீ வெகுண்டாலும் உனக்கு நல்லதைச் சொல்லுவது என் கடமை. அதைச் செய்யாது விட மாட்டேன்' என்று பீடிகை போட்டுக் கைகேயியின் பாதங்களில் வீழ்கிறாள். தன்னுடைய காரியத்தை நிறைவேற்றிக் கொள்ள எந்த வசையையும் எந்தக் கொள்கையையும் எவ்வளவு தாழ்மையாகப் போக முடியுமோ அவ்வளவு தூரம் தாழ்மையாகப் போகவும் மந்தரை தயங்கவில்லை. தன் வெற்றிக்காகவே அவள் பணிகிறாள் (She stoops to conquer). தொடர்ந்து அவள் பேசுகிறாள், கைகேயி மறுத்துச் சொன்ன வாதங்களைத் திரித்துத் தன் கட்சிக்கு ஆதரவாகக் காட்டுகிறாள்.

'தக்கவர்க்கே அரசு என்றால், தசரதனிருக்க இளவல் இராமனுக்கு எப்படி அரசுரிமை வரும்? அப்படி இராமனுக்கு அரசுரிமை வரலாம் என்றால் அது ஏன் பரதனுக்கு வரக்கூடாது? பரதனுக்குத் தான் வரட்டுமே' என்று மந்தரை வாதிக்கிறாள். பரதனுக்கு அரசுரிமை கேட்ப

தில் தவறு ஒன்றுமில்லை; அது மரபுக்கு முரணு வது இல்லை என்று கைகேயியின் மனதில் பதிய வைக்கிறாள்.

அடுத்து சக்களத்திப் பொறுமையைத் தூண்டுகிறாள்—'இராமன் அரசனுனால், இப்பூத லமெல்லாம் ''விரியும் சிந்தனைக் கோசலைக்கே'' உரியது. உனக்கும் உன் புதல்வற்கும் அவள் கொடுத்து உதவும் ஒரு சிறு பொருள் தவிர வேறு என்ன இருக்கிறது'' என்று கேட்கிறாள். இப்படிச் சொல்லுகையில், கோசலையை, ''விரிந்த சிந்தனையுடையவள்'' அதாவது முன் யோசனைக்காரி, அந்த முன் யோசனை உனக் கில்லை என்று குத்திக் காட்டுகிறாள். அவள் அரச மாதாவாகிவிட்டால், அவள் இடும் பிச்சை தானே உனக்குக் கிடைக்கும் என்றும் குத்திக் காட்டுகிறாள். அடுத்து, கைகேயியின் மிக நுட்ப மான உணர்வுகளைத் தூண்டி விடுகிறாள். 'வறு மையினுல் வாடி உன்னிடம் வந்து இரப் போர்க்குக் கோசலையிடம் கேட்டுப் பொருள் வாங்கிக் கொடுப்பாயோ, அல்லது அவளிடம் சென்று கேட்க நாணிக் கேட்காமலேயே இருந்து விடுவாயோ, அல்லது இரப்பார்க்கு ஈய முடி யாது இருக்கும் உன் நிலையை எண்ணி எண்ணி வெம்பி மாண்டு போவாயோ அல்லது இரப்ப வர்க்கு 'இல்லை' என்று ஒரே சொல்லைச் சொல்லி விடுவாயோ? தங்கள் வறுமையையும் தாழ்வையும் உன்னைக் கொண்டு போக்கிக் கொள்ள எண்ணி உன்னைத் தேடி வரும் உன் சுற்றத்தார், அயோத்தியில் வந்து காண்பது உன் சக்களத்தியின் ஏற்றத்தையும் செல்வத்தை யுமா?'', என்று சொல்லி கைகேயியின் ஈகைக் குணத்தைச் சுட்டிப் பேசுகிறாள். இன்னும் ஒரு படி சென்று கைகேயியின் தந்தைக்கும் ஜனக னுக்கும் உள்ள பழைய பகையைச் சுட்டிக் காட்டுகிறாள். ''உன் கணவன் சக்கரவர்த்தி யாக இருப்பதாலன்றோ, சீதையின் தந்தை யாகிய ஜனகன் உன் தந்தை மீது போர் தொடுக்காமல் அடங்கியிருக்கிறான். இராம னுக்கு முடி சூட்டி வாழ்வு வந்து விட்டால், அவன் மாமனாராகிய ஜனகன் கை ஓங்கிவிடும். அதன் பிறகு உன் தந்தைக்கு வாழ்வு ஏது! அதன்றியும் உன் தந்தைக்கு வேறு பகைவர் களும் இருக்கின்றனர். அவர்களுக்கு எதிராகக் கோசலப் படை துணை போகாவிட்டால் உன் தந்தை நிலை என்னுகும்? இராமன் முடி சூடிய பின் உன் தந்தையின் உதவிக்குக் கோசல நாட்டுப் படைகள் வருமா? இராமனுக்கு முடி சூட்டி விட்டால், இராமனுக்குப் பின் அவன் புதல்வருக்கும் இலக்குவனுக்கும் அரசுரிமை போய் விடும். உன் மகனுகிய பரதனுக்கு ஒரு வாழ்வுமில்லை. இதையெல்லாம் உணராமல், நீயும் உன் சுற்றமும் துயரக் கடலில் வீழ முடிவு செய்து விட்டாயே?'' என்று தன்னுடைய உரையை முடிக்கிறாள்.

மந்தரையின் வாதம் இப்படிப் படிப்படி யாக மேலேறிக் கைகேயியினுடைய உள்ளத் தைத்தொட்டு நஞ்சாக்கி விடுகிறது. ஒரு சிறந்த வில் வீரன் தன்னுடைய கணைகளை மாற்றி மாற்றி இடைவிடாது தொடுத்துப் பகைவ னுடைய உடலைச் சல்லடைக் கண்களாகத் துளைப்பதைப் போல, மந்தரை தன்னுடைய வாதங்களைத் தொடுத்து கைகேயியின் மனத் தை மாற்றி விடுகிறாள். 'கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்', 'எறும்பூரக் கல்லுந் தேயும்' என்பதைப் போல எவ்வளவோ பரதனுக்காகப் பரிந்து பேசியும், கைகேயி மசியாததைக் கண்டு தன்னுடைய வாத முறையை மாற்றுகிறாள். கைகேயியின் பெண்மைக்குணத்தைத் தொட்டுக் காட்டுகிறாள். அவளுடைய பிறந்தகத்துக்குத் தீங்கு வந்து விடுமென்கிறாள். அரச குடும்பத் திலே பிறந்து வள்ளல் தன்மையில் சிறந்து விளங்கிய கைகேயிக்குக் கடைசி இரண்டு வாதங் களும் மனதில் ஆழமாகத் தைத்து விடுகின்றன. அவள் மனம் மாறிவிடுகிறது. அவளுடைய தூய சிந்தையும் திரிந்து விடுகிறது. தன் மகன் பரதன் அரசனுக வேண்டும் என்ற ஆசை பிறந்து விடுகிறது. எனவே, ''வினை நிரம்பிய கூனியை'' ஆசையுடன் பார்த்துத் தன் மகன் பரதனுக்கும் இராஜ்யம் கிடைக்க வழி சொல்லு மாறு கைகேயி கேட்கிறாள். இங்கே கவிஞனின் வாக்கு சற்றுச் சிந்திக்கத் தக்கது.

''வினை நிரம்பிய கூனியை விரும்பினள்
நோக்கி எனை உவந்தனை,
இனியை என் மகனுக்கும் அனையான்
புனையும் நீள்முடி பெறும்படி புகலுதி''

என்றாள் என்பது கம்பர் வாக்கு. அதாவது, மனம் திரிந்த கைகேயி தன் மகன் பரதனும் முடி சூட வேண்டும் என்று நினைக்கிறாள். இரா மனுக்கு இராஜ்யம் இல்லாமல் செய்ய வேண் டுமென்றோ, அவனைக் காட்டுக்கு அனுப்ப வேண்டும் என்றோ கைகேயி நினைக்கவில்லை. அவள் விரும்பிய தெல்லாம், தனக்கும் தன் பிறந்தகத்துக்கும் ஏற்றம் தேடிக் கொள்ளத் தன் மகன் பரதனும் நாடாள வேண்டும் என்பதே. ஆனுல் மந்தரை தன்னுடைய சொல்படி நடந் தால் ''உலகம் ஏழும் ஏழும் உன் ஒரு மகனுக்கே ஆக்குவேன்'' என்று சம்பரன் யுத்தத்தையும் அப்போது கைகேயி தயரதனுக்குச் செய்த உதவியையும், தயரதன் அப்போது அவளுக்கு அளித்த இரண்டு வரங்களையும் நினைவுபடுத்தி, அந்த வரங்களில் ஒன்றினுல் பரதனுக்கு அர சாட்சியும் மற்றென்றினுல் இராமனுக்கு வன வாசமும் கேட்கும்படி போதிக்கிறாள். கைகேயி கேட்டது தன் மகனுக்கும் அரசாட்சி அதாவது பாதி ராஜ்யம். ஆனுல் மந்தரை சொல்லிக் கொடுத்தது முழு ராஜ்யமும் அடையும் வழி. இதைக் கேட்ட கைகேயி உவகைக் கடலிலே விழுந்து மந்தரையைத் தழுவிக் கொள்கிறாள். முன்பு, ''எனக்கு நல்லையுமல்லை நீ, என் மகன் பரதன் தனக்கும் நல்லையுமல்லை, அத் தருமமே நோக்கின் உனக்கு நல்லையும் அல்லை, வந்து ஊழ்வினை தூண்ட மனக்கு நல்லன சொல்லினை'' என்று மந்தரையை வைததை மறந்து,

''நிரைத்த மாமணி
ஆரமும் நிதியமும் நீட்டி
இரைத்த வேலை சூழ் உலகம்
என் ஒரு மகற்கு ஈந்தாய்
தரைக்கு நாயகம்தான் இனி நீ''

என்று போற்றுகிறாள். அதுமட்டுமல்ல, அதோடு நிற்காமல், ''நன்று சொல்லினை நீண்ட நளிர் முடி சூட்டல், துன்று கானகத்தில் இராமனைத் துரத்தல் இவ்விரண்டும் அன்று அது ஆம் எனின், அரசன் முன் ஆருயிர் துறந்து பொன்றி நீங்குதல் புரிவல் யான், போதி நீ'' என்று மந்தரையை அனுப்பி வைக்கிறாள். மந்தரை வரங்களைக் கேட்கும்படி தான் சொன்னாள். ஆனால் அவள் போதனையால் மனம் திரிந்த கைகேயி அதை அடையும் வழியையும் உடனே தீர்மானித்து விடுகிறாள். அப்படி அவள் அடைந்ததையும் கதைப் போக்கிலே காண்கிறோம்.

இப்படிக் களத்திலே சினத்துடன் தோன்றிய கூனி தன்னுடைய எண்ணத்தை மறைத்து ஏதோ கைகேயிக்கும் பரதனுக்கும் நன்மை செய்ய வந்தவளைப் போலப் பேசித் தன்னுடைய வாக்கு வன்மையினால் கைகேயியின் தூய சிந்தையைத் திரித்துவிடுகிறாள். கைகேயியின் மனத்தை மாற்றிவிட்டுக் களத்தை விட்டு நீங்கிய கூனியை நாம் மீண்டும் தனியாகப் பார்ப்பதில்லை. கதைப் போக்கிலே ஓரிரண்டு இடங்களிலே கைகேயியுடன் அவள் தோழியாக மந்தரை வருவதைக் காண்கிறோம். மந்தரையின் தோற்றம் முதல் அவள் களத்தை விட்டு நீங்குவது வரையில் கவிஞன் அவளுக்குவசையே பாடுகிறான். கவி வாயிலாகக் கூறும் போதெல்லாம் ''காலக் கோளனாள்'', ''சூழ்ந்த தீவினை நிகர் கூனி'', ''கொடிய கூனி'', ''தீயமந்தரை'' ''வினை நிரம்பிய கூனி'', ''உள்ளமும் கோடிய கொடியாள்'' என்று தான் வருணிக்கிறார். தூய சிந்தையளாக இருந்த கைகேயியின் வாய் மொழியாகக் கூறும் போது கூட ''தீயோய்'', ''அறிவிலி'', ''மதியிலா மனத்தோய்'' என்று தான் கூனியை அழைக்கிறாள். உண்மையில் மந்தரையின் குறிக்கோள் இராமனைப் பழி வாங்குவதே. ஆனால் அதைச் சிறிதும் வெளிக் காட்டாமல் மறைத்து ஏதோ கைகேயியையும் அவள் பிறந்த வீட்டையும் பரதனையும் காப்பதற்கேத் தான் தோன்றியது போலவும், 'இராமன் முடி சூடினால் அவைகள் எல்லாம் அழிந்து விடும் போலவும் பேசி, தன்னுடைய குறிக்கோளை அடைகிறாள். இராமன் தனக்குத் தீமை செய்தவன். ஆகவே அவனுக்கு ஏதாவது தீங்கு செய்ய வேண்டும் என்ற உண்மை நிலையை வெளிப்படையாகச் சொல்லி மந்தரை தன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்தால், அங்கு சூழ்ச்சி ஏதுமில்லை. தன் குறிக்கோளை வெளியே சொல்லாமல் மறைத்து, அதே சமயத்தில் அதை அடைவதில் எள்ளளவும் கவனப் பிசகில்லாமல், அதை அடைவதற்காக வேண்டி உண்மைகளை யெல்லாம் திரித்து, பொய்யைத் தாராளமாகக் கூட்டிப் பேசி குறிக்கோளை அடைவது தான் மந்தரை செய்த சூழ்ச்சி. தான் எடுத்துக் கொண்ட நிலைக்கு ஆதரவு தேட இராமன் மீது பழி போடவும் மந்தரை தயங்கவில்லை. இராமன் தன் மீது உண்டை வில்லால் அடித்தவன் என்ற பழி சொல்லாமல், தாடகை என்ற பெண்ணைக் கொன்று பெண் கொலை புரிந்தவன் என்று இராமனைத் தூற்றுகிறாள். அந்தப் பழியைப் பெரிதாக்கிக் காட்ட 'ஆடவர் நகையுறு ஆண்மை மாசுறத் தாடகை எனும் பெயர்த்தையலாள் படக் கோடிய வரிசிலை இராமன்'' என்று தாடகை வதையைச் சித்தரிக்கிறாள். ஏதோ தாடகை ஒரு நற்குண நங்கை போலவும் அவனைக் கொன்றதாலே இராமன் பெண் கொலை புரிந்து வில்லறம் துறந்தது போலவும், இராமனுடைய அந்தச் செய்கை ஆண்மைக்கே இழுக்கு என்றும், ஆண்குலமே அதைக் கண்டு நகைக்கிறது என்றும் பெரிது படுத்திப் பேசுகிறாள்.

கைகேயியின் உளப் பாங்கை அறிந்து, எதைச் சொன்னால் அவள் மனம் மாறும் என்பதை அறிந்து அதையே சொல்லி, கைகேயியைத் தன் வழிக்குக் கொண்டு வருகிறாள். 'அறிவிலி', 'அடங்குதி', 'நின் நாவைச் சேதியாது பொறுத்தனம்'' என்றெல்லாம் திட்டிய வளை ''நிரைத்த மாமணி ஆரமும் நிதியமும் நீட்டி'', ''தரைக்கு நாயகம் தான் நீ'' என்று சொல்ல வைக்கிறாள். ''தெவ்வடு சிலைக்கை என் சிறுவர் செவ்வியர், அறம் திறம்பலர் எவ்விடர் எனக்கு வந்து அடுப்பது? புவிக்கெலாம் வேதமே அனைய இராமனைப் பயந்த எற்கு இடர் உண்டோ?'' என்றெல்லாம் இறுமாப்பும் வீராப்பும் பேசி ''எனக்கு நல்லையுமல்லை, நீ என் மகன் பரதன் தனக்கு நல்லையுமல்லை'' என்று சொல்லிய கைகேயியை, ''எனை உவந்தனை இனியை'' என்று போற்றும்படி செய்கிறாள். இப்படி தன் சொல்லாற்றலால் கைகேயியை மந்தரை மாற்றுகிறாள். அதுவே மந்தரை செய்த சூழ்ச்சி. அப்படியிருந்தும், அவதார லட்சியத்தின் காரணமாகக் கைகேயியின் மனம் திரிந்தது என்றுமுதலிலே சொல்லிய இரண்டு பாடல்களிலும்கம்பர்கூறி முடிக்கிறார்.

முதல் நூலாகிய வான்மீகத்தில், இராமன் மந்தரையின் முதுகில் உண்டை வில்லால் அடித்ததாகக் கூறப்படவில்லை. அப்படியானால், மந்தரைக்கு இராமன் மீது 'குரோதம் ஏற்படக் காரணம் இல்லாது போய்விடுகிறது. ஷேக்ஸ்பியரின் ''ஒதெல்லோ'' நாடகத்தில் வரும் இயாகோ என்ற கொடியோன் போன்று காரணமில்லாத குரோதம் (Motiveless Motivity) கொண்டவளாக மந்தரை காணப்படுகிறாள். இராமன் மந்தரையின் முதுகில் உண்டை வில்லால் அடித்ததாக ஆழ்வார்கள் பாடுகிறார்கள். ஆழ்வார் பாசுரங்களில் தினைத்திருந்த கம்பருக்கு, இது தக்க சமயத்தில் கை கொடுக்கிறது. அதைச் சரியாகப் பயன்படுத்தி ''பண்டை நாள் இராகவன் பாணி வில்லுமிழ் உண்டை உண்டதனைத் தன் உள்ளத்து உள்ளுவாள்'' என்று மந்தரையின் குரோதத்துக்கு ஒரு காரணமும் கற்பித்துக் கொள்ளுகிறார். வால்மீகத்தினின்று மாறுபட்டு மும்மூர்த்திகளுமே தம் இருக்கையும் ஆயுதங்களையும் விட்டு, இராமனாக அயோத்தி வந்ததாகக் கதையை அமைத்த கம்பருக்கு, இதுவும் போதவில்லை. மந்தரையின் சூழ்ச்சியால் மட்டும் அந்தப் பரம்பொருள் வனம் போனதாகக் கதையை அமைக்கக் கம்பர் மனம் இடந்தரவில்லை போலும்! எனவே இராமவதார இலட்சியத்திலும் கைகேயியின் சிந்தை திரிந்தது என முடிக்கிறார். ***

* குருலிங்கசங்கமம் *

-: சிவநேசன் :-

முன்னுரை :

எல்லாம் வல்ல பேரருட் பெருங்கடவுளாகிய சிவபெருமான், குரு இலிங்கம் சங்கமம் என்னும் மூவகை வடிவங்களில் உயிர்களையெல்லாம் ஆட்கொண்டு காத்தருள்கின்றான் என்று, சைவ சமய நூல்கள் சாற்றுகின்றன. இம் மூவகை வடிவங்களிலும் சிவபெருமான் திகழ் தலைச் சீர்காழிக் கோயிலில், நாம் கண்டுணரலாம். சீர்காழிக் கோயிலில், இலிங்கவடிவில் மூலத்தானத்திலுள்ள பிரமபுரீசுவரரும், குரு வடிவில் கட்டுமலையில் உள்ள தோணியப்பரும், சங்கமர் எனப்படும் அடியார் வடிவில் சட்டைநாதரும், எழுந்தருளி விளங்குகின்றனர்.

மும்மலங்களும், முக்கரணங்களும் :

இலிங்கம் குரு சங்கமம் என்னும் மூவகை வடிவங்களும், இறைவனுக்கு முறையே மனம் வாக்கு காயம் என்னும் முக்கரணங்களாக அமைந்து திகழ்கின்றன. இலிங்க வடிவம் இறைவனுக்கு மனமாகவும், குரு வடிவம் வாக்காகவும், சங்கம வடிவம் உடம்பாகவும் விளங்குகின்றன. மனமாகிய சிவலிங்க வடிவம், உயிர்களின் ஆணவ மலத்தைப் போக்குகின்றது. வாக்கு ஆகிய குரு வடிவம் மாயா மலத்தை நீக்குகின்றது. உடம்பாகிய சங்கம வடிவம், நல்வினை தீவினைகளாகிய இருவினைகளையும் அகற்றுகின்றது. இங்ஙனம் உயிர்களின் ஆணவம் மாயை கன்மங்களாகிய மும்மலங்களையும் அழித்தொழிப்பதற்கே, இறைவன் குருலிங்க சங்கம வடிவங்கள் கொண்டருள்கின்றான். இம் மூன்றனுலன்றி, வேறு வகைகளில் உயிர்களைப் பற்றியுள்ள மும்மலங்கள் எளிதில் அழியமாட்டா. இக்கருத்தினைப் பின்வரும் பாடல் தெளிவுற விளக்குதல் காணலாம்.

''ஏத்தரிய லிங்ககுரு சங்க மம்தான்,
ஏகபரன்மனம் வாக்குக் காயம் ஆகும்;
வாய்த்தமனம் சிவலிங்கம் ஆகும்; மூல
மலம்அகற்றும்; குருவருள்சேர் வாக்கு,மாயை
தீர்த்தருளும்; சங்கமமாம் மேனி தன்னுல்
தீராத இருவினையாம் கன்மம் நீங்கும்;
ஆர்த்தமலம் மூன்றகற்றும் குறியீ தாகும்;
அல்லதுமற் றொன்றுலும் அகன்றி டாதே''

பசுவின் முகமும் மடியும் :

குரு லிங்க சங்கம வடிவங்களின் சிறப்பினைப் பின்வருமாறும் உருவகம் செய்து நூல்கள் உணர்த்துகின்றன. சிவபெருமான் ஒரு சிறந்த பசுவைப் போன்றவன். அவன் நமக்குத் திருவருள் ஆகிய தீம்பாலைப் பொழிந்தருள்கின்றான். அதனுல் சிவபிரானை ஒரு வகையில் ஒரு சிறந்த பசுவுக்கு ஒப்பிடலாம். சிவபெருமான் ஆகிய சிறந்த பசுவுக்கு மடி இலிங்கம் ; உடம்பு குரு ; முகம் அல்லது வாய் சங்கமம். பசுவின் மடிதான் நமக்குப் பாலைத் தருகின்றது. அதனுல் நாம் மடியினிடம் சென்று புல்லையுண்ணக் கொடுத்தால், மடி அதனை ஏற்றுக் கொள்வதில்லை. அவ்வண்ணமே பசுவின் உடம்பில் உள்ள வேறு எந்தப் பகுதியும் புல்லை ஏற்றுக்கொண்டு பாலைத் தரமாட்டா. பசுவின் முகம் அல்லது வாயில் புல்லைக் கொடுத்தால், அஃது அதனை ஏற்று உண்டு, உடம்பு முழுவதற்கும் நல்ல வளத்தைப் பெருக்கி, மடியின் வாயிலாக நமக்குப் பால் சுரந்து கிடைக்கச் செய்கின்றது. இதனுல் நாம் ஒரு பேருண்மையை உணர்கின்றோம். இலிங்கத்திற்கோ, குருவுக்கோ, நாம் நேரே வழிபாடு செய்ய முற்படாமல், சங்கமர்களாகிய அடியார்களின் வாயிலாக, அவர்களின் துணைகொண்டு, நாம் குருவையும் சங்கமத்தையும் அணுகுவேமாயின், நாம் எளிதாகவும் இனிதாகவும் இறைவனின் திருவருளைப் பெறலாம். அடியவர்களின் வழிபாட்டால் குரு வழிபாடும், குரு வழிபாட்டால் இலிங்க வழிபாடும், படிமுறையே சிறப்புற்றுப் பெரும் பயன் அளிக்கின்றன. இதனைப் பின்வரும் சிறந்த பாடல் தெளிவுற விளக்குகின்றது.

''கோதனத்தின் மூலஇலிங்கம்; குருவாம் மேனி;
கூறியசங் கமம்முகமாம்; குலவும் கீரம்
போதமுலை பொழிந்திடும்என்று அதற்கன் பாதப்
புல்லளித்தால் அருந்தியிடா; உடலும் கொள்ளா;
நீதியினுல் அறிந்துமுகத் தளித்தால் எங்கும்
நிறைவாகும்; முத்திசிவ லிங்கத் தேனும்
ஏதமில்சங் கமத்தைவழி படுவோர்க் கன்றி
எய்தரிய சிவானுபவம் எய்தொ ணுதே.''

முடிவுரை :

இவ்வாற்றுல், நாம் அனைவரும் குருலிங்க சங்கம வழிபாட்டின் முறைமையும், திறமும் உணர்ந்து, செவ்விதிற் போற்றி உய்ய முயலுவோமாக!

ஸ்ரீகிருஷ்ண அந்தாதி

கவிஞர் கண்ணதாசன்

தெய்வதம் மானிடம் தெய்வதம் உள்மனம்
தெய்வக் கோயில்
மெய்யெனும் ஒன்றுதான் மேனிலை பெறுவதால்
மேனி என்றோம்
நெய்வதால் ஆடையாய் நிகழ்ந்ததால் மேனியாய்
நிற்கும் ஒன்றைப்
பொய்வதை செய்வரும் போய்ப்புகல் தேடினுல்
பொருள் தராதே!

தருவிலே கற்பகம் தணலிலும் பனிமழை
தாய் படைத்த
கருவிலும் காவலன் காட்டிலும் சேவகன்
கருத் தெழுந்த
இருளிலும் ஒளியவன் இரப்பவர்க் கினியவன்
இவனே அண்டி
ஒருவரம் கேட்டால் ஒருவரும் கெட்டிலர்
உண்மை யன்றே!

அன்றவன் வந்ததும் அரக்கரை வென்றதும்
அனைத்தும் பொய்மை
அன்றவன் பூமியில் அவதரித் தானவை
அனைத்தும் உண்மை
நின்றவன் காட்டுவான் நினைத்தவன் கூட்டுவான்
நீல மேகம்
என்றவன் தோற்றுவான் எவ்விடம் என்பிரேல்
இடரில் என்பேன்!

என்பிலும் தோலிலும் இழைவிடும் சதையிலும்
இதயம் காட்டும்
அன்பிலும் அறிவிலும் அடங்குவா ரைவிலும்
ஆழ நின்று
தன்பெரும் தோள்களை விஸ்வரூ பமெனத்
தழைக்கின் றுனுல்
உன்பெரும் சுமைகளை ஒருபெரும் தாங்கியில்
உறைசெய் வாயே!

வாய்வழிச் சொற்களால் வருகநீ என்பதால்
வருவ தில்லை
தாய்வழிப் பண்புளோர் தருகநீ என்பரேல்
தயக்க மில்லை
ஆய்வழிப் பொருளவன் ஆய்வதால் வருமவன்
அகன்ற கைகள்
மாய்வழிச் சொல்வதை வாழ்வழிச் சொல்விரேல்
வளங் காண்பீரே

காண்பவர்க் காகவா கல்லீயும் மணியையும்
கண்ணன் தந்தான்.
பூண்பவர்க் காகவே பூனபவர்க் காகவே
பொருள்கள் வைத்தான்
மாண்பவன் ரகசியம் வரையிலா தென்பதை
மறந்த பேரை
நாண்பெறும் கணிகள்போல் நம்மிடம் வாவென
நயக்கின் றனே!

நயம்படப் பாடுவீர் நலம்படப் பாடுவீர்
நாளும் நாளும்
செயம்பெறப் பாடுவீர் திறம்படப் பாடுவீர்
தேவ மைந்தன்
புயம்பெறப் பாடுவீர் புகழ்பெறப் பாடுவீர்
பூமி உங்கள்
வயம்பெறப் பாடுவீர் வழிபெறப் பாடுவீர்
வாசல் தேடி!

தேடினுற் கடுகிலும் சிறுமலீ காணலாம்
தேடித் தேடி
ஓடினுற் புல்லிலும் ஒருபழம் காணலாம்
ஓடி ஓடி
நாடினுற் கல்லிலும் நறவினைக் காணலாம்
நாடி நாடி
வாடினுற் பின்புதான் வருமவன் மணிரதம்
வாழ்த்துப் பாடி!

பாடுநீ பட்டதும் கேடுநீ கெட்டதும்
பார்த்தவன் தான்
வீடுநீ விட்டதும் வெந்தணல் உற்றதும்
விலீத்தவன் தான்
ஓடுநீ கனியவன் ஓட்டினை நீக்கினுல்
உள்ளி ருப்பான்
கோடு நீ ஓவியம் கோகுலம் திருமகள்
கோவிந் தனே!

கோவிந்து கன்றுகக் கொடிவிந்து மலராகக்
கொடுத்த மாலீ
பூவிந்து பிஞ்சாகப் பொருள்விந்து கவியாகப்
பொலிந்த தாயை
ஓர்விந்தில் உருவான உன்சிந்தை அளவாது
ஊமை யாகிச்
சேர்விந்தன் கோவிந்தன் சேய்போல உனைக்கொள்வான்
திருக்கை யாலே!

—[தொடரும்]

திருவாசகம்

"திருவாசகம் என்பதில் அடைமொழியாய் நின்ற திரு என்னும் சொல், கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கமாகிய அழகினை உணர்த்தவே, பேரின்பப் பேற்றைக் காதலிப்பார் எல்லாராலும் விரும்பப்படும் அழகினையுடையது, இவ்வாசகம் என்பது பெற்றும். எல்லாரும் ஒன்றனை விரும்புதல் அது பிறிதொன்றற்கில்லாத அழகினை உடைமையினுலேயாம். தன்னைக் கற்பார் உள்ளத்தை உருகச் செய்து, அவரைப் பேரின்பப் பெருக்கின்கண் ஆழ்த்துதற்கட் பிறிது எந்நூலுக்கும் இல்லாத அழகினை, இத்திருவாசகநூல் பெற்றிருத்தலால், இதனினும் மேலான அழகினைப் பெற்ற வேறெரு நூல் இல்லை என்பது தேற்றமாம்".

—அருட்டிரு. மறைமலையடிகளார்.

திருவண்வண்டூர்த் திருமகள் கொழுநன்

திரு டாக்டர் ந. சுப்புரெட்டியார், M.A., Ph.D.

வேதாந்தங்களில் குறிப்பிடப்பெறும் பக்தி ஆழ்வார்களிடம் காதல் முறையில் பரிணமித்து நிற்கும். இவர்கள் எம்பெருமான்மீது கொள்ளும் காமம் 'பகவத்விஷய காமம்' என்று வழங்கப் பெறும். இங்ஙனம் மாதவன் மீது இவர்கள் கொள்ளும் காமம் மங்கையர் மீது கொள்ளும் காமத்தினின்றும் வேறுபட்டது. ஆயினும், சிற்றின்ப அநுபவமாகிய காதலுக்குக் கூறப் பெறும் அகப்பொருள் துறைகள் யாவும் இந்தப் பகவத் விஷய காமத்திற்கும் கூறப்பெறும். சிற்றின்ப அநுபவத்திற்குக் கொங்கை முதலியன சாதனமாயிருப்பதுபோல, பகவத் விஷயாநுபவத்திற்குப் பரபக்தி, பரஞானம், பரமபக்தி இவை இன்றியமையாதனவாக இருப்பதால் அவையே கொங்கை முதலான சொற்களால் இவ்வாழ்வார்களின் அருளிச் செயல்களில் கூறப்பெறுகின்றன என்று ஆன்றோர் கொள்வர்.

காதல் சுவையின் சம்பந்தம் சிறிதுமின்றியே பக்திச் சுவையின் அடிப்படையாகவே பாசுரங்கள் அருளிச் செய்தல் கூடும். அங்ஙனமிருக்க, காதல் சுவையையும் கலந்து பாசுரங்கள் அருளிச் செய்யப் பெற்றிருப்பதற்குக் காரணம் என்ன? உடல் நலத்திற்குக் காரணமாகிய வேப்பிலை யுருண்டையை உட்கொள்ள வேண்டியவர்கட்கு வெல்லத்தை வெளியிற் பூசிக் கொடுத்து உண்பிப்பது போலவும், கொயினா மாத்திரைகட்குச் சர்க்கரைப் பாகு பூசி இனிப்புச் சுவையை உண்டாக்கித் தின்பிப்பது போலவும் சிற்றின்பம் கூறும் வகையால் பேரின்பத்தை நிலை நாட்டுகின்றனர் என்று பெரியோர்கள் கூறுவர். இது கடையாய காமத்தினையுடையவர்கட்குக் காட்டப் பெறும் உக்தி முறையாக இறையனார் களவியலிலும் கூறப் பெற்றுள்ளமை ஈண்டு சிந்திக்கத் தக்கது!

இங்ஙனம் ஆழ்வார்கள் பெண்மை நிலையிலிருந்து எம்பெருமானை அநுபவிக்கும்பொழுது அவர்களது பாசுரங்கள் தாய்ப் பாசுரமாகவும், தோழிப் பாசுரமாகவும், தலைவிப் பாசுரமாகவும் வடிவுகொள்ளும்என்பதை நாலாயிரத்தைப் படிப்போர் அறிவர். இப்படி மூவகையாகப் பாசுரங்கள் பரிணமித்துச் செல்வதற்குரிய உட்கருத்தினை ஆன்றோர்கள் எடுத்துக் காட்டி விளக்கியுள்ளனர். அவர்கள் இந்த மூன்று நிலைகளையும் மூன்று பிரஞ்ஞாவஸ்தைகள் என்று குறிப்பிடுவர்.

முதல் அவத்தையைப் பற்றிச் சிந்திக்கின்றோம். 'ஓம் நம: நாராயணாய' என்பது மூன்று வைணவ இரகசியங்களுள் (மறைகளுள்) முதலாவது; தலையாயது. இதில் மூன்று சொற்கள் அடங்கியுள்ளன. இவற்றுள் 'ஓம்' என்னும் சொல்லின் பொருளையே ஏனைய இரண்டு சொற்களும் விரிவுபடுத்துகின்றன. இந்த இரு சொற்களின் பொருளையே 'துவயம்' என்னும் இரண்டாவது மறை விரிக்கின்றது. இத்துவயத்தின் பொருளையே 'சரம சுலோகம்' என்ற மூன்றாவது மந்திரம் மேலும் விரிக்கின்றது. திருமந்திரத்திலுள்ள மூன்று சொற்களிலும் 'பிரணவம்' அறிவுடைய ஆன்மாவின் அடிமைத் தன்மையையும் (சேஷத்துவத்தையும்), 'நமஸ்ஸு' பாரதந்தியத்தையும் (ஒருவனைப் பிரதானமாகக் கொண்டிருப்பவனின் தன்மை), 'நாராயணாய' என்பது அறிவுடைய ஆன்மா இறைவனுக்குப் புரிய வேண்டிய அடிமைத் தொழிலையும் (கைங்கரியம்) உணர்த்துகின்றன. மேலும், இவற்றுள் பிரணவம் 'அ', 'உ', 'ம' என்று மூன்று எழுத்துக்களைக் கொண்டது. இம் மூன்று எழுத்துக்களும், மூன்று சொற்களாக நின்று மேற்கூறிய மூன்று பொருள்களையும் தெரிவிக்கும். அஃதாவது, அகாரம் பகவானையும், அதில் ஏறி மறைந்துள்ள வேற்றுமை அடிமைத் தன்மையையும், உகாரம் அந்த அடிமைத் தன்மை மற்றவருக்கில்லாமல் எம்பெருமானுக்கே உரியதாயிருக்கும் தன்மையையும் (அநந்யார்ஹத்துவம்), மகாரம் ஞானவானாகிய சீவான்மாவையும் தெரிவிக்கின்றன. இங்ஙனம் ஆன்மாக்கள் யாவும் ஸ்ரீமந் நாராயணனுக்கே அடிமை என்ற உணர்வுடன் கூடிய மனநிலை தோழி கூற்றாக வெளியிடப் பெறுகின்றது என்பது ஆன்றோர் துணிபாக இருப்பதை எண்ணுகின்றோம்.

இரண்டாவது அவத்தையும் நம் நினைவுக்கு வருகின்றது. பெண்பிள்ளையைப் பெற்று வளர்ப்பவள் தாய். அப் பெண் தக்க வயதை அடைந்ததும் பேராண்மைக்கு இருப்பிடமாகவுள்ள தலைவனிடம் கழிபெருங்காதலையுடையவளாகின்றாள்; அவன் இருக்கும் இடத்தைப் போய்ச் சேர வேண்டும் என்று பதறுகின்றாள். ஆனால் அவளது பதற்றத்தைத் தடுத்து நிற்கின்றாள் தாய். தலைவனே தலைவி இருக்கும் இடத்திற்கு வரவேண்டும் என்பது நடைபெற வேண்டிய ஒழுங்குமுறை என்றும், அங்ஙனமின்றித் தலைவியே தலைவனிருக்குமிடத்திற்குப் புறப்படுவது குலமரியாதைக்குச் சிறிதும் பொருந்துவதன்று என்றும் நினைக்கின்றாள் தாய். திருமந்திரத்தின் இரண்டாவது சொல்லாகிய 'நம:' என்பது இந்நிலையைக் குறிக்கின்றது. இச்சொல்லை ந+ம; என்று இரண்டாகப் பிரிக்கலாம். 'ம:' என்பது வடமொழியில் 'எனக்கு உரியவன்' என்றும், 'ந' என்பது அல்லன் என்றும் பொருள்படுகின்றன. அஃதா

வது, 'எனக்கு நான் உரியவன் அல்லன்' என்ற பொருள் கிடைக்கின்றது. இதனால் 'நான் பிறனுக்கு (ஈசுவரனுக்கு) உரியவன்' என்பது பெறப்படுகின்றது. இம்முறையில் இச்சொல் ஈசுவர பாரதந்திரியத்தைத் தெரிவிக்கின்றது. இன்னும் விளக்கிக் கூறினால், இச்சொல் ஞானத்தினால் ஏற்படும் சுதந்திரத் தன்மையை ஒழிக்கின்றது. அதன் காரணமாய் ஏற்படும் 'தன்னைத் தானே காத்துக் கொள்ள முடியும்' என்னும் எண்ணத்தையும் நீக்குகின்றது. இனி, இவனைக் காத்து இரட்சிப்பவன் ஈசுவரனே ஆகின்றான் என்ற துணிவு பிறக்கின்றது; அஃதாவது ஈசுவரனே உபாயம் என்ற பொருள் கிடைக்கின்றது. இந்த மனநிலைதான் தாய் என்று குறிக்கப் பெறுகின்றது.

மூன்றாவது அவத்தைமேலும் நம் எண்ணம் பாய்கின்றது. பெற்றோர் அல்லது உறவினர் கூட்டாமையிலேயே தலைவனுடன் இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து தலைவனுடைய ஒப்புயர்வற்ற வனப்பு முதலியவற்றில் ஈடுபட்டு இருப்பவள் மகள்; குடியின் கட்டுப்பாட்டையும் பாராமல் 'அவனைக் கிட்டியல்லது நான் உயிர் வாழ்ந்திருக்க மாட்டேன்' என்னும் பதற்றத்தை யுடையவள் இவள்; காலக் கழிவினை இவளால் பொறுக்க முடிவதில்லை. திருமந்திரத்தில் பிரணவத்தாலும் நமஸ்ஸாலும் எல்லோருக்கும் சேஷியாய் (தலைவனுய்) அறுதியிடப் பெற்றவன் எம்பெருமான்; எல்லோருக்கும் புகலிடமானவன் அவனே. பிரணவத்தாலும் நமஸ்ஸாலும் இவை உணரப்பட்ட பின்பு 'நாராயண' என்ற சொல்லினால் கூறப்பெற்றுள்ள எம்பெருமானுடைய சொரூபம், உருவம், குணம், விபூதி முதலியவற்றின் சேர்க்கையாலுள்ள பெருமையை நினைந்து மகிழ்ந்திருப்பவள் இவள். எம்பெருமான் சாத்தியோபாயமாக இருந்தால், தான் செய்யும் சாதனங்கள் முடிவுற்ற பிறகே சாத்தியமாகிறபேறு கிடைக்கக் கூடும் என்று பொறுத்திருக்கலாம். ஆனால் அவன் சித்தோபாயமாக இருப்பவன். ஆதலால் அவனைத் தாமதித்து அநுபவிப்பதற்குக் காரணம் இல்லை; 'அவனே உபாயம்' என்ற கோட்பாட்டையும் மீறித் தான் நினைத்த பேற்றினை உடனே பெற வேண்டும் என்ற பதற்றத்தையுடையவளாக இருக்கின்றாள். இந்த மனநிலைதான் 'மகள்' (தலைவி) என்று குறிப்பிடப் பெறுகின்றது.

இந்த மூன்று நிலைகளும் (அவத்தைகளும்) நம்மாழ்வாருக்கு எல்லாக் காலங்களிலும் இருந்தன. இதனால் தான் 'ஞானவத்தைகள்' (ஞான நிலைகள்) என்று கூறாமல் 'பிரஞ்ஞாவத்தைகள்' (உணர்வு நிலைகள்) என்று குறிப்பிடப் பெற்றுள்ளது என்பதையும் நினைத்துப் பார்க்கின்றோம். திருவெட்டெழுத்தின் மூன்று சொற்களாலும் குறிப்பிடப் பெறும் பொருளைப் பற்றிய ஞானம் ஆழ்வாருடைய திருவுள்ளத்தில் எப்பொழுதும் நிலைத்தே இருக்கும் என்பதை உணர்த்தவே இவ்வாறு குறிப்பிடப் பெற்றது என்பதையும் சிந்திக்கின்றோம்.

இந்த எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றுகக் குமிழியிட்ட வண்ணம், திருவல்லவாழிலிருந்த வண்ணம், திருவண்வண்டுருக்குப் பேருந்து மூலம் புறப்படுகின்றோம். பேருந்தில் சென்றாலும் அது செல்லும் வழியெல்லாம் இயற்கைக் காட்சிகளுக்குக் குறைவில்லை. சாலையின் இரு புறமும் தோட்டங்களும் வயல்களும் கண் கவர்விருந்தாக அமைகின்றன. அவற்றைக் கண்டுகளித்த வண்ணம் எம்பெருமானுடைய அசித்தும், அவனுடைய சித்திற்கு ஆனந்தத்தை அளிக்கும் தத்துவத்தை எண்ணி எண்ணி வியப்புக் கடலில் ஆழ்ந்த வண்ணம் திருவண்வண்டூரை அடைகின்றோம். நேராகத் திருக்கோயிலுக்கே வந்து விடுகின்றோம். மாலை நான்கு மணிக்கே வந்துவிட்டோமாதலால் திருக்கோயில் திருக்காப்பிடப் பெற்றிருக்கின்றது. ஆகவே, அருகில் புதிதாகக் கட்டப் பெற்றிருக்கும் மண்டபத்தில் தங்குகின்றோம். திருவண்வண்டூர் எம்பெருமான்மீது நம்மாழ்வார் மட்டிலுமே மங்களா சாசனம் செய்துள்ள பதிகத்தைச் சிந்திக்கின்றோம். இது தூது விடும் பதிகமாக உள்ளது. இதற்கு முன்னுள்ள பதிகத்தில் ''உன்னை என்றுகொல் சேர்வதுவே'' ''உன்னை என்று தலைப்பெய்வனே'' ''உன்னை என்று கொல் கூடுவதே'' என்றெல்லாம் கதறி எம் பெருமான் பக்கலிலே கடுகச் சேர வேண்டும் என்று பாரித்திருக்கும் ஆழ்வார், எம்பெருமான் திருவண்வண்டூரில் சந்நிதி பண்ணிக்கொண்டு தனக்குச் சேவை சாதிக்கச் சித்தமாக இருப்பதை நோக்குகின்றார். அங்குச் சென்று சேர முடியாத நிலையில் தன் நிலையை அந்த எம் பெருமானுக்குத் தெரிவிக்குமாறு சில பறவைகளைத் தூது விட்டதை நினைத்துப் பார்க்கின்றோம்.

இங்கு ஆழ்வார் தாமான தன்மையை விட்டுப் பராங்குசநாயகி நிலையை அடைந்து தூது விடுகின்றார். குருகினங்கள், கருநாரை, புள்ளினங்கள், அன்னங்கள், பூங்குயில்கள், கிளி, பூவை, வண்டினங்கள் இவற்றைத் தூது போகும்படி வேண்டுகின்றார். இங்ஙனம் பறவைகளைத் தூது விடுவதற்கு உட்பொருள் உண்டு. ஆசாரியஹிருதயம்,

''சேர்ப்பாரைப் பட்சிகளாக்கி, ஜ்ஞாத
கர்மங்களைச் சிறகு என்று, குரு ஸ்ப்ரம
சாரி புத்ர சிஷ்ய ஸ்தானே பேசும்''

என்று குறிப்பிடுகின்றது. ''விண்ணோர் பிரானார், மாசு இல் மலர் அடிக்கீழ் எம்மைச் சேர்விக்கும் வண்டுகளே'' என்று ஆழ்வாரே அருளிச் செய்துள்ளமையால், பகவத் விஷயத்தில் கொண்டு சேர்க்குமவர்கள் பறவைகளாகக் கொள்ளப்படுவர். இரண்டு சிறகுகளைக் கொண்டு பறவைகட்கு எங்ஙனம் விசும்பில் பறந்து செல்லுதல் இயலுகின்றதோ அங்ஙனம் ஞானம், ஒழுக்கம் (அநுட்டானம்) என்னும் இரண்டாலும் இறைவன் அடையப்படுகின்றான் என்பது ஆன்றோர் கொள்கை. எனவே, ஞானத்தையும் ஒழுக்கத்தையும் சிறகுகளாகக் கொள்ளல் வேண்டும். ஆசாரியர்களும், ஒரு சாலை மாணாக்கர்களும், புத்திரர்களும் இறைவனை அடையும் பேற்றுக்குத் துணையாக இருப்பவர்கள் என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரின் கருத்து. இந்தப் பறவைகளிலும் அன்னம், வண்டு முதலியவையாகச் சொல்லப் பெறுபவர்கள் இன்னார் இன்னார் போன்றவர்கள் என்றும் அருளிச் செய்யப் பெற்றுள்ளது. ஆழ்வாரின் பாசுரங்கள் ஒவ்வொன்றாக நம் சிந்தையில் எழத்தொடங்குகின்றன.

(தொடரும்)

ஆண்டாள் நாச்சியாரின் ஆற்றுமை

திரு. தே. வீரராகவன், M. A.,

மார்கழி மாதம் என்றவுடன், ஆத்திகர்களின் நினைவுக்கு உடனே வருவது, ஆண்டாள் அருளிய திருப்பாவையும், மாணிக்கவாசகர் திருவாய் மலர்ந்த திருவெம்பாவையுமேயாம். இவையிரண்டும் சமயச்சார்பால் வேறுபாடு உடையவேனும், சாற்றும் பொருளால் ஒற்றுமையுடையன. எம்பெருமானுடைய குணக் கடலிலே நீராடி, நம் பிறவி மலங்களைக் கழுவிக் கொண்டு, அவனது அடியார்களுடன் கூடி, அவனுக்கு ஆட்செய்ய வேண்டுமென்ற பெருநோக்கினையே இருபாவைகளும் வற்புறுத்துகின்றன!

சூடிக் கொடுத்த சுடர்க் கொடி எனப் பாராட்டப் பெறும் ஆண்டாள், திருப்பாவை என்னும் திவ்வியப் பிரபந்தத்தை அருளிச்செய்ததுடன் ஞான, பக்தி, வைராக்கியங்களின் கொடுமுடியான ''நாச்சியார் திருமொழி'', என்னும் நல்லமுதக்கடலையும் அருளியுள்ளாள். அதன் ஒவ்வோர் அடியிலும், சீரிலும் அசையிலும், அவளுடைய அதிதீவிர பக்தி, வெள்ளமிட்டோடும். இப்படிப்பட்ட மனிதாதீதமான ப்ரேமபக்தி ஆண்டாளிடம் அமைந்ததற்கு அடிக் காரணம், அவள், ''அல்லிநாள் தாமரை மேல் ஆரணங்கின் (பெரிய பிராட்டியின்) இன்துணைவி (பூதேவி) ஆனதேயாகும். அதனாலேயே, ''மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்'' என்று சூளுரைத்தாள். ''அவரைப் பிராயம் (விதைப்பருவம்) தொடங்கி, அச்சுதனையே ஆதரித்தாள். அவள் வாழ்ந்த ஒவ்வொரு கணத்திலும், அவள் மனம், ''கோல்-தேடியோடும் கொழுந்து போல், மால் தேடி'' ஓடிற்று. இவ்வளவுக்கும் மேலாக, அவள் பிறப்பினால், பெண்பாலாகத் தோன்றியதால், பெண்மைக்கு இயல்பான ப்ரேமபக்தியின் உச்சியில் நின்று, அதன் நுணுக்கங்களையெல்லாம் சோடையில்லாமலும், விரசமில்லாமலும் சொல்லால் சொல்ல முடிந்தது. ''புருஷன், புருஷனைக் கண்டு காமுறுவதைக் காட்டில், ஸ்திரீ, புருஷனைக் கண்டு ஸ்நேகிக்கை, பள்ளமடையாகையாலே, ஆழ்வார்களுடைய பக்தியைக் காட்டில், பதின்மடங்கு அதிகமான, அன்புடைய வளாயினள். பதின்மருடைய ஞானமும், ஸ்திரீதனமாக இவள் பக்கலிலேயிறே குடி கொண்டது. பத்துப் பேருக்கு ஒரு பெண் பிள்ளையிறே'' என்று இவள் பக்தியை முன்னோர்கள் வியந்தனர்.

இத்தகைய பகவத் ப்ரேமை, முதிர முதிர ஆண்டாள், தன்னை மறந்தாள், தன் நாமம் கெட்டாள்; தன்னையும் இழந்தாள். தன்னை யிழந்த அந்நிலையில் எம்பெருமானுக்கும், மதி நலம் அருளத் தொடங்கியதுடன், சம்சார உறக்கத்தினின்றும் நம்மையெழுப்பும் சர்வேசுவரனையும், ''உம்பியும் நீயும் உறங்கேல்'' என்று பள்ளியெழுப்பும் துணிவைப் பெற்றதுடன், ''பெண்மையைத் தலையுடைத்தாக்கும்'' தின்மையுமுற்றுள்.

ஸ்ரீகிருஷ்ணாவதாரம் நிகழ்ந்த காலத்துக்கும், ஆண்டாள் அவதரித்த காலத்துக்கு மிடையே ஆயிரமாயிரம் ஆண்டுகள் இடைவெளியுண்டு. எனினும் அவள், தன் பாவனா முதிர்ச்சியினாலே, மனத்தைப் பின்னோடச் செய்து, தான் பிறந்த திருவில்லிப்புத்தூரைத் திருவாய்ப்பாடியாகவும், அங்குள்ள பெண்களை, ஆயர்மாதர்களாகவும், அவர்களுள் தானும் ஒருத்தியாகவும், வடபெருங்கோயில், ஸ்ரீநந்த கோபர் திருமாளிகையாகவும், உள்நிற்கின்ற வன் ஸ்ரீகிருஷ்ணனாகவும் அநுஸந்தித்து, ஆய்ப்பாடியிலே அவை தானேயாய் ''இடைநடையும், இடை முடியும், இடைப் பேச்சும் முடை நாற்றமும்'' பெற்றவளாய்க் ''கண்ணனுடன் கலந்து, சுகானுபவம் எய்தும் வகை எவ்வகை' யென்றெண்ணி, உள்ளம் நெகிழ்ந்தும், உறக்கம் நீங்கியும் உணவு தவிர்ந்தும், அனலிற் பட்ட மெழுகாய் உருகினாள்; குழல் சோர்ந்தாள்; கைவளை கழலப் பெற்றாள். தன்னுசையினை நிறைவேற்றிக் கொள்ளப் பூர்வத்தில், கண்ணனையடையக் கோபியர்கள் நோற்ற ''மார்கழி நோன்பு'' நோற்றாள். அதற்குமிரங்கி, எம்பெருமான் முகம் காட்டாது விடவே, காமனை வேண்டியும், சிற்றில்செய்தும், கூடலிழைத்தும், கோவிந்தனைக் கூவுமாறு குயிலை வேண்டியும், மேகத்தைத் தூது விட்டும், இவை போன்ற பல உபாயங்களை மேற்கொண்டாள். அப்படியும் மணவாளன் அவளுக்கு அருள் செய்யத் தாமதிக்க அவளுடைய வேதனையும், சோதனையும் எல்லை மீறவே, அதனால் இகபரநிலைகள் இரண்டும் கெட்டொழிந்து விட்டதையும் ஆற்றுமை மீதூர்ந்துவிட்டதையும், அவன், தன்னைத் தரிப்பிக்கச் செய்ய வேண்டுமாயின், அவன் செய்ய வேண்டிய கருமத்தையும் ஒரு பாசுரத்தின் மூலமாக முடிவாக வெளியிட்டுக் கொள்ளுகிறாள். பின்வருவதுதான் அப்பாசுரம்.

''கோங்கலரும் பொழில் மாலிருஞ்சோலையில்,
கொன்றைகள் மேல்
தூங்குபொன் மாலைகளோடு உடனாய் நின்று
தூங்குகின்றேன்;
பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலியும்
சார்ங்கவில் நாணொலியும் தலைப்பெய்வது எஞ்
ஞான்றுகொலோ''

''கோங்குமரங்கள் மலரப் பெற்ற சோலை களையுடைய திருமாலிருஞ்சோலைமலையில், கொன்றை மரங்களின் மேலே தொங்குகின்ற பூமாலைகளோடு சமமாய், வீணைக்கிடக்கிறேன். அழகுபொருந்திய திருப்பவளத்திலே (உதட்டில்) வைத்து, ஊதப்படுகின்ற ஸ்ரீபாஞ்சசந்ய மென்னும் சங்கினெலியும், சார்ங்கமென்னும் வில்லின் நாணெலியும் அடியாளையணுகுவது என்றோ?'' என்பது மேற்கண்ட பாசுரத்தின் பொருள்.

இப்பாசுரத்தில், ஆண்டாள், ஓர் அற்புத உவமானத்தின் வாயிலாகத் தன் ''இரண்டும் கெட்ட'' நிலையினை, மானிடரையும் ஏற்கமாட்டாது; மாயவனையும் அடையமாட்டாது, இகநலமும் கெட்டு, பரசுகமும் கெட்டு-அவதியுறு நிலையினை விளக்குவது நினைந்து, நினைந்து இன்புறத்தக்கது. அவலச்சுவையினூடே இன்பச் சுவையும், பாசுரத்தில் இழைந்தோடுவது, பாசுரத்தின் தனிச் சிறப்பு.

இனி, மேற்கண்ட பாசுரத்துள் அமைந்துள்ள உவமேயத்தின் விளக்கத்தினைப் பார்க்கலாம்.

திருமாலிருஞ்சோலை மலைமீது 'அழகனுகிய' திருமால் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கின்றன். திருமாலுக்குரிய அம்மலைமீதுள்ள கொன்றை மரங்களில், பொன்னிறமான கொன்றைப் பூக்கள் மலர்ந்துள்ளன. கொன்றை மலர்கள் சிவபிரானுக்குரியனவாதலால், வைணவர்கள் அவற்றைத் தீண்டார். அக்கொன்றை மலர்கள் மலர்ந்துள்ள இடமோ, திருமாலுக்குரிய மலைமீதாதலால், சைவர்கள், அம்மலைமீதேறி, அம்மலர்களைக் கொய்யார். இக்காரணங்களால், இருதிறத்தாராலும் புறக்கணிக்கப் பெற்ற கொன்றை மலர்கள், எடுப்பாரும் முடிப்பாருமின்றி வீணில் அழிகின்றன. அதுபோல், ஆண்டாள், தான், பெரியாழ்வார் பெண்ணாய்ப் பிறந்தும், உலகத்துக்கும் பயன்படாது உலகளந்தானுக்கும் பயன்படாது, இருதிறத்தாலும் பயன் பெறுது வீணில், தன் வாழ்வு அழிவதனையெடுத்துணர்த்துகிறாள். அவள் காட்டும் உவமைச் சுவையும், கவியின்பமும் கற்பவர்க்கு விருந்தாகும். ''பகவதங்கீகாரமுமின்றிக்கே, பகவத் ஸம்பந்தமே ஹேதுவாக ஸம்ஸாரிகளுக்கும் கூட்டின்றிக்கே இப்படி க்லேசப்படுவதே'' என்பது, இங்குப் பெரியவாச்சான் பிள்ளை எழுதும் உரை.

அதே உணர்ச்சியில், தன் இரண்டுங்கெட்ட நிலை நீங்க வேண்டுமாயின், எம்பெருமான், தன்மாட்டு, என்ன செய்தருள வேண்டுமென்பதனையும், தப்பாமல் குறிப்பிட்டு விடுகிறாள்.

சிசுபாலன் சுயம்வரத்திலே வந்தபோது, உருக்குமிணிப் பிராட்டி, ''இவ்வளவிலே கண்ணன் வந்து முகம் காட்டிலனுகில் நான் வாழேன்'' என்று கலங்கினபொழுது, புறச்சோலையிலே நின்று ஸ்ரீகிருஷ்ணன், ''நான் ஆட்கொள்ள வந்து விட்டேன்'' என்பதனையறிவிக்கப் பாஞ்சஜன்யத்தை முழக்கினான். அவ்வொலிகேட்டு உருக்குமிணி உயிர்தரித்தாள். இது நிகழ்ந்தது கிருஷ்ணவதாரத்தில்.

இராவணன் மாயாசிரசைக் காட்டிச் சீதையை மருட்ட, ''உரும்ஏறு வெஞ்சிலை நாண் ஒலிதான் வருமே'' (கம்.ரா. சுந். உருக். பட. 3) என்று பிராட்டி வருந்தியபோது ஸ்ரீ இராமபிரான் செய்த வில்லின் நாணொலி செவிப்படப் பிராட்டி, உயிர்தரித்தாள். இது நிகழ்ந்தது இராமாவதாரத்தில்.

உருக்குமிணி, சீதை ஆகிய இருவரது தாபங்களையும், தானொருத்தியே ஒரு சேர அனுபவிப்பதால், அவ்விரு அவதாரங்களிலும் எழுப்பப்பட்ட சங்கம், சார்ங்கம் ஆகிய இரண்டின் ஒலிகளையும், ஒருகாலேதான் பெற்றுல்தான், உயிர்வாழ முடியுமென்பதனை ஆண்டாள் குறிப்பிடும்போது, அவளது ஆற்றுமையும் தெளிவாய்ப் புலனுகின்றது.

''இரண்டவதாரத்தில் இரண்டு பிராட்டிமார்க்கு உதவினது, தனக்கொருத்திக்குமே வேண்டும்படியாய்த்து இவள் தசை. இவர்கள் அளவல்ல வாய்த்து இவளாற்றுமை'' என்று இவ்விடத்தில் உரையிட்டுள்ளார் பெரியவாச்சான்பிள்ளை.

''நாச்சியார் திருமொழி'' என்னும் அமுதசாகரத்தில் மேற்கண்ட பாசுரம் ஒரு துளி— மேலும் நுகர விரும்புவோர், அத்திருமொழிக் கடலை அணுகவும்.

**

◆◆ ◆◆ ◆◆ ◆◆ ◆◆ ◆◆ ◆◆ ◆◆ ◆◆ ◆◆ ◆◆ ◆◆ ◆◆ ◆◆ ◆◆

இந்து சமயத்தின் விரிந்த தன்மை

''இந்தியநாட்டில் தொன்றுதொட்டு வழங்கிவரும் சாருவாகம், பௌத்தம், சமணம், மாயாவாதம், வைஷ்ணவம், சைவம் என்றொடக்கத்துச் சமயங்களிலெல்லாம், இந்துசமயக் கொள்கைகள் சிலபல குறைந்தும்-மிகுந்தும்-வேறுபட்டும் நிற்றல், இனிதறியப்படும். இனி உலகம் உள்பொருளாதல் சாருவாகத்தானும், அறிவுஞ் சடமும் வேறு வேறுதல் பௌத்தத்தானும், உயிரும் இருவினையும் உளவாதல் சமணத்தானும், கடவுள் அருவநிலையினராய் நிற்றல் மாயாவாதத்தானும், கடவுள் உருவத்திருமேனியுமுடையராதல் வைணவத்தானும் பெறப்படுகின்றன வாகலின், இவையனைத்தும் இந்துசமயப் பிரிவுகளாதற்கு இயைந்தனவேயாகும். மற்று இக்கொள்கைகளெல்லாம் தன்கண் முழுதும் அடங்கக்கொண்டு விளங்கும் இந்துசமயம், தான் சிறிதாயினுஞ் சுருங்கும் இயல்பிற்றுதலின்றித், தன்கட்பிரிந்த சமயங்களுமாய், அவற்றின் வேறுமாய் மேற்பட்டுத் தோன்றல் பெரிதும் உற்றுநோக்கற்பாலதொன்றுகும்; இது தன்னிற் பிரிவான மதங்களில் உள்ள குறைகளையெல்லாம் நிரப்பித், தான் எல்லா நிறைவும் உடைத்தாய்ப் பொலிகின்றது.'' — **அருட்டிரு மறைமலையடிகளார்.**

பாம்பன் சுவாமிகள்

பாடல் நலன்

[பாம்பன் அடிகள் பக்தன்]

முன்னுரை

''ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் யான் வாழும் ஊரே'' என்று, சங்க காலப் புலவர் பெருந்தகையாராகிய பிசிராந்தையார் பாடிச் சென்றார். அதற்கு ஏற்ப, நம் தமிழ் நாட்டில் தொன்று தொட்டுத் தோன்றி வந்துள்ள சான்றோர்கள் பற்பலர். வாழையடி வாழையாக அங்ஙனம் தோன்றி வந்தருளிய சான்றோர்களின் வரிசையில், அண்மைக் காலத்தில் விளங்கியிருந்த பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் (கி.பி. 1880—1929) அவர்களும், ஒருவராவார்.

திரு. வி. க.

பாம்பன் சுவாமிகள் முருகனை வழிபடு கடவுளாகக் கொண்டவர். இவருடைய கனவிலும் நனவிலும் முருகப் பெருமானின் அருளைக் காட்டும் நிகழ்ச்சிகள் பற்பல நிகழ்ந்தன. தமிழ்த் தென்றல் திரு. வி. கல்யாணசுந்தரனார், சுவாமிகளின் அருள் பெற்ற மாணவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார்.

''பாம்பன்எனும் பதிமுளைத்த பவளக் குன்றே!
பழம்பாண்டித் தமிழ்ப்பொழிலே! பண்பார் இல்லத்
தீம்பயிரே! அன்புகொழி திரையே! தெய்வத்
திறங்கண்ட அறநிலையே! செகத்தில் உற்ற
கூம்பல்அற எழுகதிரே! குழந்தை வேலன்
குகன்நெறியே நெறிஎன்ற குருவே! நீதி
ஓம்புகஎன் றுரைத்தொழுகி உலகில் வாழ்ந்த
உயர்குமர குருதாச ஒளியே! போற்றி!''

என்பது, செந்தமிழ்ப் பெரும்புலவரும், தலை சிறந்த தேச பக்தருமாகத் திகழ்ந்திருந்த திரு. வி. கல்யாணசுந்தரனார், சுவாமிகளைக் குறித்துப் பாடிய சிறந்ததொரு துதிப் பாடலாகும். இப் பாடலால் சுவாமிகளின் அருமை பெருமைகளை, அனைவரும் உணரலாம். சுவாமிகள், தகராலய ரகசியம், பரிபூரணானந்த போதம், குமார சுவாமியம், குமரவேள் பதிற்றுப் பத்தந்தாதி, திருப்பா, திருவலங்கற்றிரட்டு முதலிய பல நூல்களை அருளிச் செய்துள்ளார். சுவாமிகள் இயற்றிய ''சண்முக கவசம்'' என்னும் துதி நூல், பல்லாயிரக் கணக்கான முருகன் அடியார்களால் நாள்தோறும் பாராயணம் செய்து போற்றப்பெற்று வருகின்றது.

திருவலங்கற்றிரட்டு

பாம்பன் சுவாமிகள் பாடியருளிய திருவலங்கற்றிரட்டு என்னும் பாடற்றொகுதி, முருகன் அடியார்கள் பெரிதும் போற்றிப் பயின்று பயனடைவதற்குரிய நூலாகும். இரண்டு காண்டங்களாக அமைந்துள்ள இந்நூல், 1263 பாடல்களாலாகிய 74 பிரபந்தங்களையுடையது. இவற்றுள் சில, பல தலங்களைப் பற்றிப் பாடப் பெற்றவை. எஞ்சியவை யெல்லாம் பல்வேறு அரும்பெரும் பொருள்களை விளக்கி, கற்பவர்களின் அறிவையும் அன்பையும் வளர்க்கவல்லவைகளாகும். இந்நூலின் இறுதிப் பிரபந்தமாக அமைந்துள்ள ''திருவுருமலைக் கோமகன்'' என்பது பஞ்சவிம்சதியதிக சதபங்கியாய் அமைந்துள்ளது. 64 சீர்கள் கொண்ட கலைச் சீர்கழி நெடிலடியாசிரிய விருத்தமாய் எழும் இவ்வொரு செய்யுளே, 21 வஞ்சி விருத்தங்களாகவும், 24 வஞ்சித் துறைகளாகவும், 3 தரவு கொச்சகங்களாகவும், 14 கலி விருத்தங்களாகவும், 14 கலிநிலைத் துறைகளாகவும், 3 கட்டளைக் கலித்துறைகளாகவும், 4 வெண்பாக்களாகவும், ஒரு நிலைமண்டில ஆசிரியப்பாவாகவும், 2 அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தங்களாகவும், 12 எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தங்களாகவும், 4 எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தங்களாகவும், 2 எண்பதின் சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தங்களாகவும் கூடிநின்று, மொத்தம் 125 பாக்களாய் விரிந்து பொருள் பயப்பது, பெருவியப்பைத் தருகின்றது.

பல்சந்தப் பரிமளம்

மேலும், இத்திருவலங்கற்றிரட்டின்கண் உள்ள பதிகங்கள் யாவும், தேவாரத் திருப்பதிகங்களிற் காணப்படும் பண்டைத் தமிழ்ப் பதிகங்களான் இயன்ற இன்னிசைப் பாக்கள் ஆகும். சிவபிரானைத் துதித்து மகிழ்தற்குப் பண் சுமந்த தேவாரப் பாசுரங்கள் அமைந்தாற் போல, முருகப் பெருமானைத் துதித்துப் போற்றுதற்கு இப்பதிகங்கள் பெரிதும் சிறந்தனவாக விளங்குகின்றன. அன்றியும் இதன் இரண்டாம் பகுதியில் உள்ள ''பல்சந்தப் பரிமளம்'' என்னும் நூல், யாப்பிலக்கண இலக்கியங்களில் ஏற்படுகின்ற ஐயப்பாடுகளையெல்லாம் தீர்க்க வல்லதாக உள்ளது; சந்த பேதங்களையும், எதுகை மோனை முதலிய நயம் தவறாமல் சித்திரகவிகள் இயற்றும் முறைகளையும், இனிது உணர்த்துகின்றது. முருகன் திருவருளே உய்தி பெறுவார்க்கெல்லாம் உயிர்த்துணை என்பதை உபதேசிக்கின்றது. இதனை,

''யாப்பின் இலக்கணமும் யாத்த இலக்கியமும்
யாப்பொலிபல் சித்திரமும் நச்சியல்போய்—மூப்போது
அலங்கற் றிரட்டின்இரண் டாங்கண்டம் பார்உன்
விலங்கைத் தரித்து விடும்.''

என்னும் செய்யுளால், சுவாமிகள் அவர்களே விளக்கிக் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

சுவைமிகு பாடல்கள்

இந்நூலின்கண் வரும் பாடல்கள் யாவும் உயரிய இனிய கருத்துக்களை நமக்குச் செவ்வி தின் உணர்த்துகின்றன. பெறுதற்கரிய மனிதப் பிறவியைப் பெற்ற நாம், காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் முதலிய தீய குணங்களால் அழிந்து போகாமல், அவற் றையெல்லாம் விலக்கிக் கொண்டு, இறைவனின் இன்னருளைப் பெற்று உய்ய முயலுதல் வேண் டும் என்பதனைச் சுவாமிகள் சுவை மிகவும், அழகுறவும் நமக்கு அறிவுறுத்துகின்றார். இத் தீய குணங்களால் யார் யார் அழிவுற்றனர் என்பதைப் பின்வருமாறு, இனிது எடுத்துக் காட்டியருள்கின்றார்.

இராவணன் பிறன் மனைவியை விழைந்து அழிந்தான். இரணியன் துவேஷத்தால் அழிந் தான். நரகாசுரன் காமத்தால் மடிந்தான். பகாசுரன் குரோதத்தினால் இறந்தான். துரியோ தனன் உலோபத்தால் ஒழிந்தான். தசரதன் மோகத்தால் உயிர் துறந்தான். கார்த்தவீரி யன் மனச்செருக்கால் உயிரிழந்தான். சிசு பாலன் பொறுமையால் ஆவி நீத்தான். அரு ணாட்சன் தனக்கு வரும் துன்பம் பிறருக்கும் வருக என்று எண்ணி அழிந்தான். இவ்வாறே புண்டரீகவசுதேவன் என்பவன் பிறர் இன்புற் றிருப்பதா? என்ற தீய நினைவால் மடிந்தான். அம்பரீஷன் ஆடம்பர குணத்தால் அழிந்தான். சலந்தராசுரன், எவரும் எனக்கு இணையில்லை என்னும் இறுமாப்பால் அழிந்தான். மதுகயிட வர்கள் அகங்காரத்தினால் அழிந்தொழிந்தார்கள்.

பரதார நசையால் இராவணன் பட்டனன்;
பற்றிய துவேஷம் அதனாற்
பாறினன் இரணியன்; படர்காமம் உற்றிறப்
பண்ணினன் நரகாசுரன்;
மருவிய குரோதத்தி னாலே பகாசுரன்
மடிந்தனன்; உலோபம் அதனால்
மாண்டனன் அகித்துவசன்; மோகம் ஒன்றால்
இராமன் தந்தை சென்றான்; மதப்
பிரமையிற் கார்த்தவீ ரியன்உயிர் இழந்தனன்;
பிழைமலி பொறுமை ஒன்றுற்
பீடுகெழு சிசுபாலன் உள்ளாவி பொன்றினன்;
பேசுஇவை எலாம்உள்ள என்
சரிதை ஏதாமோ? எனத்துரால்கூர் எனது
தாபம் என்றுஇரியும்? எந்தாய்!
சலனம்அறும் மெய்ஞ்ஞான! நிமலசுக சன்னியாச
சரவண பவானந்தனே! (1)

தனக்குவரு கின்றதுயர் பிறருக்கு வருகென்று
சந்ததம் நினைந்த அருணாட்
சன், சடம்இழந்தான்; அதேவிதம் பிறர்சுகம்
சார்வதோ? என்னும் இயல்பின்
மனம்மிஞ்சி ஒரு புண்ட ரீகவசு தேவனும்
மடிந்தனன்; இடம்பம் ஒன்றால்
வாழ்விழந்தான் அம்பரீடன்; இவண் எற்குஎவர்
சமானம்? என்னும் குணத்தாற்
கனம்உள சலந்தரா சுரன்உயிர் துறந்தனன்;
கதழ்வு அகங்காரம் அதனாற்
கறுவும் மதுகைடவர் அழிந்தனர்; வரத்தொடு
கதித்த பலமும் பெருத்தும்;
தனகுஅற்ற இக்குணம் எலாம்உள்ள எற்குனது
சரணம் எப்படி எய்துமோ?
சலனம்அறும் மெய்ஞ்ஞான நிமல! சுக சன்னியாச!
சரவண பவானந்தனே! (2)

வழிபடுநெறியிற் பலபடிகள்

நாம் இறைவனை வழிபட்டு உய்வதற்குப் பெரிதும் முயலுதல் வேண்டும். இறைவனை வழிபட்டு அவன் அருளைப் பெற்று உயர்தற்கு ஏழு வகையான படி நிலைகள் உள்ளன. அப் படி நிலைகளில் நாம் ஈடுபட்டுப் பழகி நலம் பெற்று வாழ்தல் வேண்டும் என்று விரும்பி, சுவாமி கள் அவற்றைக் குறிப்பிடுகின்றார். சிற்றினம் ஆகிய தீயவர்களின் சேர்க்கையை விலக்கி விடுவது முதற்படி. அறிவை வளர்க்கின்ற நல்ல நூல்களைப் பயின்று உணர்தல், இரண்டா வதுபடி. மண் பெண் பொன் என்னும் மூவகை ஆசைகளையும் நீக்கிக் கொள்ளுதல், மூன்றாவது படி. நல்லவருடன் சேர்தல் முதலியனவற்றால் உயரிய உணர்ச்சிகளும் குறிக்கோள்களும் நம் உள்ளத்தில் மலரப்பெறுதல், நான்காவது படி. புலால் உணவை ஒழித்துப் பொறிபுலன்களை அடக்கி நல்லொழுக்கம் கடைப்பிடித்தல், ஐந் தாவது படி. காண்போன் காட்சி காணப்படு பொருள் என்னும் பேதபாவனைகளை அகற்றிப் பேதமற்ற ஐக்கிய அத்துவித பாவனை உணர்வு எய்துதல், ஆறாவதுபடி. தற்பர சிவானந்தப் பொருளாகிய முழு முதற் பெரும்பொருள் நிலை பெற்றிருத்தல் போல, அதனுடன் நாமும் ஒன்றி இயைந்து நின்று இன்புறுதல், ஏழாவது படி. இந்த ஏழாவது படியை அணுகி அடைந்து இன்புற்று நிற்றலே, நம் வாழ்க்கையின் முடிந்த முடிவான பயனாகும்.

''துர்ச்சங்க வர்ச்சிதம் முதற்றலம்; விவேகம்நுவல்
சுவடிகள் பயின்று பழகல்
துவிநிலம்; முவேடணை துமித்திடுதல் மூன்றுஎனச்
சொலும்நிலம்; உணர்ச்சி மலர்தல்
பொற்புறும் சதுர்நிலம்; பிசி மறுத்தே தவம்
புரிதல் ஐந்தாவது நிலம்;
போதநிகழ் திரிபுடி அவித்து, அத்து விதமதர்வு
பூப்பது ஆறுவது நிலம்;
தற்பர சிவானந்த வத்து நிலைநின்றவா
தானும் நின்றிடுவது ஏழாம்
தலம், என உணர்ந்தநான் ஏழ்என்னும் நிலையினே
சாருமாறு உனை நம்பினேன்!
சற்சனர்கள் அடிகளே! அத்தைஅடை விழியைநீ
தரஎன்று கண்டுவப்பேன்
சலனம்அறும் மெய்ஞ்ஞான! நிமலசுக சன்னியாச!
சரவண பவானந்தனே!'' (3)

எனவரும் இனிய நல்ல பாடலில் சுவாமிகள் இக்கருத்தை இனிதெடுத்து விளக்கியருளியிருக் கின்றார்.

முடிவுரை

இத்தகைய இணையற்ற எழில்மிக்க பாடல் கள் பலப்பல, பாம்பன் அடிகளின் நூல்களில் பெரிதும் நிரம்பியுள்ளன. அவற்றையெல்லாம் ஊன்றிக் கற்றுப் போற்றியுணர்ந்து உய்ய முயலுவோமாக.

**

ஸ்ரீ வைணவ மதத்தின் சிறப்பு

(முன்னாள்) நீதிபதி N. கிருஷ்ணசாமி ரெட்டியார், B.A.,B.L.

மதத்தின் இலக்கணம்:

ஒரு மதம் மூன்று அமிசங்களைக் கொண்ட தாய் இருத்தல் வேண்டும். இல்லையானால், அந்த மதம் பூர்ணமானதாகாது. முக்கோணத்தில் ஒருகோணம் குறைந்தாலும், முக்கோணமாகா தது போல! வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு என்னும் மூன்றில் ஒன்று சேராவிடினும் சிவப்பு நிறம் ஏற்படாதது போல!

ஒரு மதத்திற்கு முதன்மையாய் இருக்க வேண்டிய அமிசம்-மேலோங்கியிருக்க வேண் டிய அமிசம்—தத்துவமேயாகும்!

தத்துவம் என்பது ஆதாரம். எது எல்லா வற்றையும் ஆள்கிறதோ; எது இல்லாமல் எது வும் இயங்காதோ; எது தனித்து இயங்கக் கூடியதோ; அதுவே தத்துவம்! அதுவே பரம் பொருள்! கடவுள்! தத்துவம், பரதத்துவம் எனவும் கூறலாம்.

ஒருமதத்திற்குத் தத்துவமே முதன்மை யான அமிசம்-அவசியம் என்பதை ஒப்புக்கொண் டால், அம்மதம் அத்தத்துவத்தை அடைவதற் கான வழியையும் காட்ட வேண்டும். அடையும் வழிதான் இதம்! அப்படி அடையும் வழி அல் லது இதத்தை ஒரு மதம் அல்லது சமயம் காட்ட வில்லையானால், அது சமயமாகாது! அது மதம் அன்று! அடையும் வழிஇல்லையானால். அந்தத் தத்துவத்தைப் பற்றி நாம் கவலை கொள்ள வேண்டுவதில்லை! அந்தத் தத்துவத்திற்கும் நமக்கும் தொடர்பு இராது!

நாம் அடையவேண்டிய வழியைக் கடைப் பிடித்துத் தத்துவத்தை அடைந்தால், அதனால் ஏற்படுவதே புருஷார்த்தம். புருஷார்த்தமே-பேறு-பலன்-நன்மை!

எனவே, (1) தத்துவம் அல்லது கடவுள், (2) இதம் அல்லது அடையும் வழி, (3) புரு ஷார்த்தம் அல்லது பேறு என்ற இவை மூன் றும், ஒழுங்காகவும், வரிசையாகவும், படிப்படி யாகவும் அமைந்துள்ளதே மதம்!

வைணவம் அல்லது திருமால் நெறியில், தத்துவம், இதம், புருஷார்த்தம் என்ற இம் மூன்று அமிசங்களும், பரிபூரணமாகவும், சிறந்த முறையிலும் அமைந்துள்ளன, இம்மூன்றிற்கும் வைணவம் தரும் விடைகள் என்ன என்பதைக் காண்போம்:

வைணவம் தரும் விடைகள்! வரங்கள்!

வைணவத்தின் தத்துவம் நாராயணனே! தத்துவம் அல்லது பரம் பொருளின் குணங்களை நாராயணபதம் மிகப் பொருத்தமாகவும் அழ மாகவும் விவரிக்கின்றது.

நாரம்-அயனம் என்னும் இரண்டு சொல்லும் சேர்ந்தது நாராயணம். நாரம் என்னும் சொல்; உலகில் உள்ள அனைத்துப் பொருள்களையும் உயிர்க் கூட்டங்களையும் குறிக்கின்றது. அயனம் என்னும் சொல் இவ்வனைத்துப் பொருள்களுக் கும்-உயிர்க் கூட்டங்களுக்கும் ஆதாரமாய் இருப்பவனைக் குறிக்கின்றது.

நாராயணம் என்ற சொற்றொடர் இதே கருத்தை வேறு விதமாகவும் விளக்கிக் காட்டு கிறது. நாரம் என்ற சொல்லுக்கு உலகில் உள்ள அனைத்துப் பொருள்கள் அதாவது அசித்து; உயிர்களின் கூட்டம் அதாவது சித்து என்று பொருள் கொண்டு; அயனம் என்ற சொல்லுக்கு இவைகளுள் ஊடுருவி அமைந்து இவைகளை இயக்குபவன் ஈசுவரன் என்றும் பொருள் கொள்ளலாம்.

நாராயண தத்துவத்தை அடைவதற்கு உண்டான வழி அல்லது இதம் என்ன? நாரா யணனை அடைவதற்கு அவன் திருவடிகளே, வழி அல்லது இதம் என்பதே, ஸ்ரீ வைணவத் தின் தெளிந்த துணிபு! உபேயனை (குறிக் கோளான) நாராயணனை அடைவதற்குரிய உபா யமும் சாதனமும் அவனுடைய திருவடிகளே!

தத்துவனை, நாராயணனை அடைவதற்கு, ஞான மார்க்கம், கர்ம மார்க்கம், பத்தி மார்க் கங்கள் உண்டு. எனினும் இவைகளைவிட உயர்ந்த சிறந்த-எளிய இதம் அல்லது வழி பிரபத்தி மார்க்கமே! அதாவது சரணாகதி மார்க் கமே! நம்முடைய, ஞான, கர்ம பக்திகளையே நம்பியிராமல், நாராயணனுடைய திருவடி களையே தஞ்சமாகக் கொண்டு அவனை அடை வதே, உயர்ந்த எளிய வழி அல்லது இதம்.

நாராயணனுகிய தத்துவத்தை உணர்ந்து, அறிந்து, அவன் திருவடிகளைப் பற்றுகிற சரண் கதியாகிய இதம் அல்லது வழியைப் பின்பற்றி னால், நாம் அடைகிற சிறந்த புருஷார்த்தம் அல்லது பலன் என்ன? அதுவே, அவன் திரு வடிகளில் புரியும் கைங்கரியம் குற்றேவல் அல்லது தொண்டு!

இவ்விதமாக, ஸ்ரீ வைணவ மதம்:
தத்துவத்திற்குத் தரும் விடை நாராயணன்.
இதத்திற்குத் தரும்விடை அவனது திருவடிகள்.
புருஷார்த்தத்திற்குத் தரும் விடை; கைங்கரியம்.

எனவே, தத்துவம், இதம், புருஷார்த்தம் என்னும் மூன்று அம்சங்களும் வரிசையாகவும், முறையாகவும் பூரணமாகவும், பொருத்தமாகவும் ஸ்ரீ வைணவ மதத்தில் அமைந்துள்ள அழகு தான் என்னே!

தத்துவம், இதம், புருஷார்த்தம்-வகுள பூஷணரின் வாக்கிலே !

ஸ்ரீ வைணவ சமுதாயத்தின் நாதராய் விளங்குபவர் நம்மாழ்வார். நம் குலநாதரான நம் மாழ்வார் அருளிய ஆயிரம் பாசுரங்கள் கொண்ட திருவாய்மொழியில் முதற் பாசுரத்திலே, நாராயணனே தத்துவம் என்றும், அவன் திருவடிகளே அடைவதே இதம் என்றும், அவனுக்குக் கைங்கரியம் புரிதலே புருஷார்த்தம் என்றும், பரம கருணையுடன் அமைத்து உபதேசிக்கின்றார்! இதோ அத்தலைப் பாசுரம்: தலைமைப் பாசுரம்!

உயர்வற உயர்நலம் உடையவன் யவன்அவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவன்அவன்
அயர் வறும் அமரர்கள் அதிபதி யவன்-அவன்
துயர்அறு சுடர் அடி தொழுதுஎழுஎன் மனனே!

தத்துவமான நாராயணனின் தன்மையாது?

அவன்:

நலம் உடையவன் !

எத்தகைய நலம் உடையவன்?

உயர்நலம் உடையவன்!

அந்த உயர்வு எத்தகையது ?

(மற்றைத் தெய்வங்களின் உயர்வுகள் அறும்படியான)

உயர்வற உயர்நலம் உடையவன்!

அந்த நாராயணனே அடையும் வழி—இதம் யாது?

அவனுடைய திருவடிகளே அடைவதுதான் இதம்—வழி!

அடிதொழுது எழு என் மனனே!

ஆழ்வார் முதலில் அவனுடைய கல்யாண குணங்களே உபதேசித்தருளினார்!

உயர்வு அற உயர் நலம் உடையவன்! என்று!

அவனுடைய திருவடிகளின் கல்யாண குணத்தையும், அடுத்து உபதேசித் தருளுகிறார்!

துயரறு சுடரடி!

எனவே தன் மனதிற்கு அவனே அடையும் வழியையும் உபதேசித்தருள்கிறார்!

அவன்

துயர் அறு சுடர் அடி!

தொழுதுஎழு! என் மனனே!

அவனே அடையும் வழியாக அவர் உபதேசித்தருளுவது, ஞான மார்க்கம் இல்லை. கரும மார்க்கம் இல்லை. பக்தி மார்க்கமும் இல்லை. பிரபத்தி மார்க்கம் தான்! சரணாகதி மார்க்கமே!

நாராயணனுடைய திருவடிகளைத் தொழுதால், நாம் பெறுகிற பேறு-புருஷார்த்தம்தான் என்ன?

நாராயணனுக்குக் கைங்கரியம் புரிவதே புருஷார்த்தம் என்பதை அறிந்து கொள்ளும் மதிநலத்தைப் பெறவேணும் என்பதை :

மயர்வற மதிநலம் அருளினன்!

என்ற சொற்றொடர் குறிப்பாகச் சுட்டிக் காட்டுகிறது!

நலம் அந்தம் இல்லதோர் நாடாகிய வைகுந்தப் பெருநாட்டில் விளங்குபவர்கள் நித்திய சூரிகள் எனப்படும் அமரர்கள்! அமரர்களின் அதிபதி நாராயணனே! அத்திருநாட்டில் அமரர்கள் பெறும் புருஷார்த்தம் அமரர்கள் அதிபதிக்குப் பல்லாண்டு பாடும் கைங்கரியமே!

எனவே, உலகில் உடலுடன் வாழும் பக்தன், 'வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே!' என்னும் கோட்பாட்டின்படி உடலை விட்டு அக் கலங்காப் பெரு நகரம் புகின்-அங்கே அவனுக்குக் கிடைக்கும் புருஷார்த்தம்; பேறு-மறதி இல்லாமல் இடையறாது அமரர்கள் அதிபதியான நாராயணனுக்குப் பல்லாண்டு பாடுதலே!

இவற்றைச் சுட்டுக்காட்டுவதற்கே!
அயர்வு அறும் அமரர்கள்!

என்று திருவாய் மலர்ந்து அருள்கிறார் நம் மாழ்வார்! எனவே, 'மாறன் பணித்த மறை' புகட்டுவது:

உயர்வற உயர்நலம் உடையவன்—தத்துவம்!
துயர்அறு சுடர்அடி தொழுது எழுவது—இதம்!
கைங்கரியம் புரிவதே புருஷார்த்தம் என்னும்
மயர்வறும் மதியை அவன் தர அடைந்து,
அதன்படிக் கைங்கரியம் புரிதலே,

மண்ணுலகிற் புருஷார்த்தம்!

அமரர்கள் அதிபதியான அவனுக்கு இடையறாது பல்லாண்டு பாடுதலே விண்ணுலகிற் புருஷார்த்தம்!

பரதத்துவத்தை நிலை நாட்டிய பட்டர் பிரானுக்குப் பல்லாண்டு!

மின்னுர் தட மதிள் சூழ் வில்லிபுத்தூரில் திருவவதரித் தருளிய பெரியாழ்வார், வல்லப தேவன் எனப்பட்ட பாண்டியன் சபையிலே பரதத்துவத்தை நிலை நாட்டியருளிப் பொற் கிழியைப் பெற்ரூர்!

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று
ஈண்டிய சங்கம் எடுத்தூத—வேண்டிய

வேதங்கள் ஓதி, விரைந்து கிழி அறுத்த விஷ்ணு சித்தரின் தாள் பணிந்து மேலும் கவனிப்போம்!

சார்ங்கம் என்னும் வில்லாண்டான்!

இந்த இருள் தரும் மா ஞாலத்தில் அவ தார காலத்தில் அவன் ஸ்ரீ சார்ங்கமாகிற வில்லை ஏந்தியருளுவதால், அவன் நம்மைக் கடைத் தேற்றப் பிறவி அஞ்சிறை நீங்கிப் பரமபதம் புகும் சேதனனை வரவேற்று மறு பிறவி தவிரத் திருத்தி, பரிசுத்தனுக்குபவன், நம்மைப் பரி சுத்தமாக்கியருளுவதால் அவன் பவித்திரன்!

பரமபதத்திலே தனிச்செங்கோல் செலுத் தியருள்பவன், பரமேட்டி!

தத்துவமாகிற நாராயணனை அவன் திரு வடிகளைப் பற்றுகையாகிற இதத்தைக் கடைப் பிடித்து உய்ந்த பத்தர்கள் மண் உலகில் சார்ங் கம் என்னும் வில்லாண்டானுக்கும், விண்ணுல கில் பவித்திரனுக்கும்-பரமேட்டிக்கும் பல் லாண்டு பாடுவதான புருஷார்த்ததைப் பெறு வார்கள்! இதோ, பெரியாழ்வார் சாதித்தருள் வதைச் சேவியுங்கள்!

பல்லாண்டு என்று பவித்திரனைப்
பரமேட்டியைச் சார்ங்கமென்னும்
வில்லாண்டான்தன்னை
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல்
நல்லாண் டென்று நவின்றுரைப் பார்
நமோ நாராய ணாயவென்று
பல்லாண்டும் பரமாத்மனைச்
சூழ்ந்திருந் தேத்துவர் பல்லாண்டே!

பாவை செய்யும் சேவை!

அன்ன வயல் புதுவையிலே அவதரித்தரு ளிய ஸ்ரீ ஆண்டாள் தன் வேயர்குடித் தலைவரும் திருத்தகப்பனுருமாகிய பெரியாழ்வார் அருளி யதையும், ஸ்ரீ வைணவக்குலநாதரான நம் மாழ்வார் அருளியதையும், தன் திருவுள்ளத் தில் கொண்டு ஓரிரு அடிகளிலே அமைத்தருளு கிறார்!

பாதகங்கள் தீர்க்கும்!
பரமன் அடிகாட்டும்!
வேதம் அனைத்துக்கும் வித்தாகும்
கோதை தமிழான

30 பாடல்களைக்கொண்ட சங்கத்தமிழ் மாலை யானதிருப்பாவையிலே பரத்துவத்தைக் காட் டும் நாராயண பதத்தை மூன்று பாசுரங்களில் அமைத்தருளுகிறார்!

முதல் பாசுரம்:

''மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்! போதுமினோ! நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந்தொழிலன், நந்தகோபன் குமரன்
ஏராந்தகண்ணி யசோதை யிளஞ்சிங்கம்!
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத் தான்!
நாராயணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்!''

இப்பாசுரத்தில்:

நாராயணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்து
என்று சுமார் இரண்டு அடிகள் உள்ளன.

ஸ்ரீ ஆண்டாள் இங்கு:

'நாராயணன்!' என்ற சொல்லால் தத்து வத்தை அல்லது பரத்துவத்தை அருளிச் செய் கிறார்.

பாரோர் புகழப் படிந்து!

என்ற சொற்றொடரால், பரத்துவமான நாராயணனை அடையும் வழியை-அல்லது இதத்தை அருளிச் செய்கின்றார்.

'நமக்கே பறைதருவான்'

என்ற சொற்றொடரினாலே நாராயணனு டைய திருவடிகளை அடைந்து பெறும் புரு ஷார்த்தத்தை-அதாவது பறை அல்லது கைங் கரியமாகிற பலனை-அருளுகிறார்.

அடுத்தபடியாக ஏழாம் பாசுரத்தைச் சேவிப் போம்:

''கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத் தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப் பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபோந்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாரா யணன்மூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ!
தேச முடையாய்! திறவேலோ ரெம்பாவாய்!''

இப்பாசுரத்தில் கவனிக்க வேண்டிய பகுதிகள்:

''நாராயணன் மூர்த்தி!
கேசவனைப் பாடவும்
தேசமுடையாய்!''

என்பனவே.

இங்கு 'நாராயணன் மூர்த்தி' என்பதனால் தத்துவத்தைக் குறிப்பிட்டார்.

'கேசவனைப் பாடவும்' என்பதனால் அவனை அடையும் வழி அல்லது இதத்தைக் குறிப்பிட்டார். பாடுவது (திருவடிகளைப்) பணிவதன் அடியாக ஏற்படுவதே!

'தேஜஸ்' என்பது வடமொழிச்சொல். அதாவது, முகப்பிரகாசம் என்பது பொருள்.

'தேஜஸ்' என்னும் வடசொல் 'தேசம்' எனத் திரிந்தது.

'பாசம்' என்பது 'பாயம்' என வழங்கப் பட்டது போல 'நாசகம்' என்பது 'நாயகம்' என்பதன் போலி. இது பாசுரத்தின் எதுகை நோக்கியது.

தேசமுடையாய்! என்பதற்கு மகிழ்ச்சியின் பெருக்காலே உண்டான ஒளி நிறைந்த முகத் தவளே! என்பது பொருள்.

அதாவது, கைங்கரியமாகிற புருஷார்த் தத்தை (பேற்றை) அடைந்ததால் ஏற்பட்ட ஒளி பெற்றுத் திகழ்தல்-வேறு விதமான மகிழ்ச்சி முகஒளி தராது!

எனவே 'தேசம் உடையாய்!' என்பதாலே புருஷார்த்தத்தைக் குறிப்பிட்டார் என்று கொள்ளலாம்!

மூன்றும் முறையாக,
நாராயணபதம் பொதிந்துள்ள பத்தாவது
பாசுரம்!

''நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ! வாசல் திறவாதார்!
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொரு
நாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கருணனும்
தோற்று முனக்கே பெருந்துயில்தான்
தந்தானே?
ஆற்ற அனந்த லுடையாய்! அருங்கலமே!
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய்!''

இங்கே நாம் சேவிக்க வேண்டிய பாகம்:
நாற்றத் துழாய்முடி நாராயணன்!
நம்மால் போற்றப் பறைதரும்!

ஸ்ரீ ஆண்டாள் இப்பாசுரத்திலே

'நாற்றத்துழாய்முடி நாராயணன்'
என்பதாலே தத்துவத்தை-பரத்துவத்தை
அருளிச் செய்கிறார் !

'நம்மால் போற்ற' என்பதாலே நாராயணனே தத்துவம் என அறிந்து அவனை அடையும்வழி அல்லது இதமாகிற அவனது திருவடிகளை அடைந்து போற்றினால், நாம் பெறுவது புருஷார்த்தம்-அதாவது, பறை. இதுவே கைங்கரியம்-குற்றேவல் அல்லது தொண்டு எனப் படும். எனவே, பறை என்பதனால் புருஷார்த் தத்தை-பயனைப் பெறுகிறோம் என்பதைத் தெரிவித்தருள்கிறார்!

நமது திருமால் திருநெறியில், பரத்துவம் என்பது நாராயணன் என்றும், இதம் என்பது அவன் திருவடிகள் என்றும், புருஷார்த்தம் என் பது அவன் திறத்தில் ஆற்றப்படும் கைங்கரியம் என்றும், நம் பிரபன்னஜன கூடஸ்தரான நம் மாழ்வாரும், பரத்துவத்தை நிலைநாட்டியருளிய பட்டர் பிரானும், வேதம் அனைத்திற்கும் வித் தாக்கித் தந்த வில்லிபுத்தூர் வியன் கோதையும் அருளியுள்ளார்கள்.,

பகுத்தறிவு ஏற்கும் முறையிலும்,
படிப்பறிவு உவக்கும் முறையிலும்,
பக்தி அறிவு போற்றும் முறையிலும்,
ஞான அறிவு புகழும் முறையிலும்,
குதர்க்க அறிவு தலை குனியும் முறையிலும்

திருமால் திருநெறியின் அமைப்பு-முப்பாகங்கள்-மதம் என்பதின் பூர்ண அம்சங்கள்-அமைந்துள் ளதை உணர, உணர ஆனந்தம் அதிகரிக்கின் றது!

வாழ்ந்துகாட்டிய வைணவப் பெருமகன்!

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருமால் திரு நெறி ஒரு காலத்தில் தோன்றியது அன்று. இது தோன்றிய காலத்தைச் சுட்டிக்காட்டல் இயலாது. இது அநாதியான மதம்; சனாதன மதம்.

அனாதிகாலந்தொட்டு இயங்கிவரும் இத் திருமால் திரு நெறி, இக்காலத்தில் அனுஷ்டிக் கக்கூடியதா? இம்மதம் நம் வாழ்க்கை முறைக்கு உதவுமா? என்ற கேள்விகளை எழுப்பி னால்; அக்கேள்விகளை நியாயமானதே என்று ஒப்புக் கொண்டு அவைகளுக்கு விடையளித்துத் திருமால் திருநெறியின் மேன்மையையும், உப யோகத்தையும் நிலைநாட்ட வேண்டுவது நமது பெருங்கடமையாகும்.

திருமால் திருநெறியின் உயர்ந்த கொள்கை களைத் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்து, நமக் கும் வழிகாட்டியாய் விளங்குபவர், உலகம் இன்றும் என்றும் போற்றும் உத்தமராகிய மகாத்துமா காந்தியடிகளே! மகாத்மாவின் வாழ்க்கையே, திருமால் திரு நெறியின் கொள் கைகளின் மேன்மையை விளக்குவதாய் அமைந் துள்ளது; மேற் கூறிய வினாக்களுக்கு விடை அளிக்கும் முறையில் அமைந்துள்ளது.

தமிழ் நாட்டின் ஆஸ்தானக் கவிஞராய் விளங்கிய நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை மகாத்மாவின் வாழ்க்கை எவ்விதம் அமைந்துள் ளது என்பதை அழகாகப் பாடுகிறார்.

ஏட்டில விருந்த வேதம்
இதுவென எடுத்துக் காட்டி
எழுத்தில விருந்த கீதம்
செய்கையில் ஏந்தி நின்று
வீட்டில விருந்த காதல்

விருந்தொடு விரியச் செய்து
விருந்தள விருந்த நேசம்
வியன்பெரு நாட்டிற் காக்கி
நாட்டள விருந்த அன்பை
நானிலம் முழுதும் நீட்டி
நானிலத் தெவர்க்கும் அன்பே
நாதனைக் காண்ப தென்று
காட்டினை சொல்லால் அல்ல.
ஒழுக்கத்தால்! கருணை வாழ்வின்
காந்தியே வீசும் சாந்தக்
காந்தியே! வாழ்க! வாழ்க!

காந்தியடிகள் :

உலகின் ஆதாரம்—பரத்துவம்—கடவுள் என்பதை மகாத்துமா காந்தி தம் வாழ்க்கையில் ஒவ்வொரு விநாடியும் அறிந்திருந்தார்; நமக்கு அறிவித்தும் வாழ்ந்தார்! நாள்தோறும் இறை வழிபாடு நடத்துவதை அவர் எந்த நிலைமையிலும் கைவிட்டதில்லை. கடவுளின் நாதமான கீதையே அவர் ஏற்றுக்கொண்ட வாழ்க்கை விளக்கு! ஏழைகளும் அவருக்குத் தரித்திர நாராயணர்களே! இவர்கள் மேம் பாட்டிற்காகவே இலட்சுமி நாராயணனிடம் பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்! கடவுள் இல்லாமல் உலகம் இல்லை என்பதே அவர் கொண்ட கொள்கை. தற்செயலாக உயிரையேவிட நேர்ந்த போதும், தம் திருவாயால் ஏ! ராம்!' என்று தாரக மந்திரத்தை உச்சரித்தவண்ணமே பரமபதம் எய்தினர்!

சரணாகதி மார்க்கமே சிறந்த இதம் அல்லது கடவுளை அடையும் வழி என்பதற்குக் காந்தியடிகளின் வாழ்க்கை முழு எடுத்துக்காட்டாய் விளங்குகிறது! அவரது மனம், மொழி செயல்கள் அனைத்தையும் கடவுளிடம் ஒப்படைத்து விட்டுக் கவலையின்றி வாழ்ந்தார்! தம் கருத்தாகவோ, தம் சொல்லாகவோ, தம் செயலாகவோ அவர் என்றும் தம்பட்டம் அடித்துக் கொண்டதில்லை.

'பனிக்கடலில் பள்ளிகோளைப்
பழகவிட்டு ஓடிவந்தேன்
மனக்கடலில் வாழவல்ல
மாய மணாளா!'

என்று, தம் மார்வம் என்பதோர் கோயிலிலே மாதவன் என்னும் தெய்வம் வாழ்ந்தருளியதாக அருளுகிறார் மெய்ந்நாவர், மெய்யடியார் விஷ்ணு சித்தர்!

உலகம் வணங்கிய உத்தமர் காந்தியடிகளும் அவ்விதமே ஒங்கி உலகளந்த உத்தமனும், தம் உள்ளத்தில் அடங்கி வீற்றிருந்து உள்குரல் (Inner Voice) அருளித் தம்மை நடத்தியருள்வதாகப் பலமுறை பகிரங்கமாகக் கூறியுள்ளார். இதனை ஒப்புக்கொள்ளாத உள்ளமும் உண்டோ!

தம்மைக் கொலை செய்ய முயற்சிகள் நடத்தப்படுகின்றன என்றும், அதற்காகத் தமக்குத் தற்பாதுகாப்புகள் செய்ய உத்தேசம் என்றும், தேசத் தற்பாதுகாப்பு அமைச்சரான சர்தார் வல்லபாய் பட்டேல் கூறியபோது, தம்மைக் கடவுளின் திருவடிகளில் ஒப்படைத்து விட்டதாயும், தம்மைக் காப்பது அவன் கடமையே என்றும், அதனால் ஆயுதத் தற்காப்பு தேவையில்லை என்றும் கூறியதும், சரணாகதி மார்க்கத்தைப் பின்பற்றியதும், மகாத்மாவின் மனத்துணிவேயாகும்!

பகவத் கைங்கரியம் புருஷார்த்தம். பகவத் கைங்கரியத்தின் எல்லை நிலம் பாகவத கைங்கரியம். எனவே, புருஷார்த்தத்தின் எல்லை நிலமும் பாகவத கைங்கரியமேயாகும். பகவத் கைங்கரியம் பாகவத கைங்கரியமாய் மிளிர்ந்தால்தான் மணம் பெறும்! பாகவத கைங்கரியமாக வள்ராத பகவத் கைங்கரியம், மலராத மொட்டு! மணக்காத மலரே!

பரத்துவமாகிற திருவெட்டெழுத்தின், நாராயண மந்திரத்தின் பொருளை நன்கு இறைவனுலேயே தன் திருச்செவியில் திரு ஆலிநாட்டில் உபதேசிக்கப் பெற்ற திருமங்கை மன்னன்; திருக்கண்ணபுரம் வந்து தொழுகையில், பகவத் கைங்கரியத்தின் எல்லை நிலம் பாகவத கைங்கரியம்தான் என்பதை வெளியிட்டருள்கிறார். திருக்கண்ணபுரம் திருமாலிடம் அவனது அடியவர்கட்கு அடிமைத்தொழில் செய்து உய்வதே, திருவெட்டெழுத்தாகிய நாராயண மந்திரத்தின் உட்பொருள் என்பதை விண்ணப்பித்து நிற்கிறார்.

திருமங்கை மன்னன், திருமாலை நோக்கி விண்ணப்பிப்பது; திருமாலே! நீ அன்று எனக்குத் திருவாலித் திருநாட்டில் உபதேசித்தது நாராயண என்னும் நலம் தரும் சொல்லை! இச் சொல்லின் பொருளை நான் உணர்ந்து உனக்கு இப்போது திருக்கண்ணபுரத்தில் உபதேசிக்கின்றேன். நாராயண மந்திரத்தின் முடிவான பொருள் பாகவத கைங்கரியமே! உனக்கும் இந்தப் பொருளைக் கற்க விருப்ப முண்டாகில் ஆகா! கற்கலாமே! என்று சமத்காரமாக அருளுகிறார், நம் நாலுகவிப் பெருமாளாகிற திருமங்கை மன்னன்!

''மற்றும்ஓர் தெய்வம்உளது!'' என்று இருப்பாரோடு
உற்றிலேன்! உற்றதும் உன்அடி யார்க்குஅடிமை
மற்றெல்லாம் பேசிலும், நின்திரு எட்டெழுத்தும்
கற்றுநான்! கண்ண புரத்துஉறை அம்மானே!

பாகவத சேவையே பகவத் சேவை என்பதைத் தெளிவாக நிரூபித்துக் காட்டியவர் மகாத்துமா காந்தியடிகளே! வாமனன் மண்ணிது! என்று உலகை மதித்தார்! வசிஷ்ட சண்டாள விபாகமறத் திரிவிக்ரமனை இறைவன் தன் திருவடிகளையிட்டுக் கடாட்சித்தருளிய மனித குலத்தையே பாகவத குலமாக ஏற்று, கைங்கரியம் புரிந்தவர்களில் மகாத்மாவினும் ஒப்பாரும் உண்டோ! பாகவத கைங்கரியமே மகாத்துமா அடைந்த புருஷார்த்தம்! பேறு! தன் தவற்றை உணராத எதிராளியைத் துன்புறுத்தாமல் அவனைத் திருத்துவதற்காக அவன் அளித்த தண்டனைகளை எல்லாம் கடவுள் திரு

வருள் துணைகொண்டு மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டான் மனித குலத்தின் முதல் சத்தியாக் கிரகியான பிரகலாதாழ்வான்! அவன் காட்டிய சத்தியாக்கிரக வழியையே பின்பற்றினர், இந்திய நாட்டின் விடுதலையை அடையப்பாடு பட்ட மகாத்மா!

மூவுல கொருங்கே யாண்டு
முடிவிலாச் செல்வ மெய்தி
ஏவலில் மமதை கொண்ட
இரண்யன் உய்யு மாறு,
தாவிய தூணி லன்று
தனியுருத் தாங்கி வந்த
சேவகன் மெச்சு கின்ற
சிறுவனே அன்ன சீலா!

என்று காந்தியடிகளைப் பிரகலாதனுடன் ஒப் பிட்டு நமது நாமக்கல் கவிஞரும் போற்றுகின் றார்!

ஆலயம் தொழுவது அனைவருக்கும் நன்றே!

இந்நாவலந் தீவினில் வாழும் மக்களில் ஆறில் ஒரு பகுதியினரைத் தீண்டத்தகாதவர் என ஒதுக்கிக் கொடுமைப் படுத்தியதை ஸ்ரீ உடையவரும் அன்று ஒப்புக் கொள்ளவில்லை. 'திருக்குலத்தினர்' என அவர்கட்குத் திருநாம மிட்டுத் திருநாராயணபுரம் சந்நிதியில் ஆலயப் பிரவேசமும் செய்து வைத்தார். லோகசாரங்க முனிவர், திருப்பாணழ்வாரைத் தம் திருத் தோள்களின்மீது சுமந்து கொண்டு திருவரங் கனைச் சேவித்து வைத்த வைபவத்தை அவர் மறந்திருக்க இயலாதே!

ஆயிரம் ஆண்டுகட்கு முன், திருநாராயண புரம் சந்நிதியில் இராமானுசர் ஏற்படுத்தியதை திவ்ய ஆக்ஞையாம் ஆலயப் பிரவேசத்தை, இந்திய நாட்டின் எல்லாச் சந்நிதிகளிலும் ஏற் பட வித்திட்ட பெருமை மகாத்துமாவினு டையதாகும்! திருக்குலத்தினருக்கு ஹரி ஜனங்கள், என்ற பட்டப் பெயரைக் காந்தி யடிகள் அளித்தது எவ்வளவு பொருத்தமாய் உள்ளது! மிக ஆழமான கருத்தல்லவா! இத் திக்கற்றவர்கட்குத் தெய்வந்தானே துணை!

அரிசனங்களை இந்து மதத்தில் சமமாக இணைத்திராவிடின், இன்று ஏற்பட்டிருக்கக் கூடிய அபாயங்களை எண்ணிப் பார்த்தலே போதும், மகாத்துமாவின் மகாமதி நுட்பத்தை ஒப்புக்கொண்டு போற்றுவதற்கு!

மக்களில் ஒரு பகுதியினரை ஆலய இறை வழிபாட்டு உரிமை யற்றவர்களாக்க வேதத்தில் கோட்பாடுகள் இல்லை. தமிழ் மறையாம் ஆழ் வார்கள் பாடலில் தான் இதற்கு ஆதாரம் உண்டோ?

கொஞ்சம் பார்க்கலாமே!
நம்மாழ்வார் திருவுள்ளம்!

பாற்கடல் சேர்ந்த பரமனை எவர் பணிந் தாலும், அவர் இந்தப் பிறவியல்ல; இன்னும் எத்தனை பிறவிகள் உண்டானாலும் அத்தனை பிறவியிலும் தம்மை ஆட்கொள்ளும் பரமர் களாம்!

''பயிலும் சுடர்ஒளி மூர்த்தியைப் பங்கயக்
கண்ணனைப்
பயில இனியநம் பாற்கடல் சேர்ந்த
பரமனைப்
பயிலும் திருவுடையார் யவரேலும் அவர்
கண்டீர்
பயிலும் பிறப்பிடை தோறெம்மை ஆளும்
பரமரே!''

பொதுவாக-சாதியைக் குறிப்பிடாமல் அருளியதையே-மேலும் வெளிப்படையாக அருளுகிறார்!

''குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழ்இழிந்து
எத்தனை
நலந்தா னிலாத சண்டாள சண்டாளர்கள்
ஆகிலும்
வலந்தாங்கு சக்கரத்து அண்ணல் மணி
வண்ணற்கு என்றுஉள்
கலந்தார், அடியார்தம் அடியார்
எம்மடிகளே.''

இவ்விதமாக மொத்தம் பத்துப் பாசுரங் களில் விவரமாக நம்மாழ்வார் அருளியதைப் பொய்யில்லாத மணவாள மாமுனிகள் சட்ட மாக்கித் தந்தருளுகிறார்! ஒரு நேரிசை வெண் பாவிலே!

'பயிலும் திருமால் பதந்தன்னில் நெஞ்சம்
இயலுண்டு நிற்கும் ததியர்க்கு-இயல்வுடனே
ஆளானர்க்கு ஆளாகும் மாறன் அடியதனில்
ஆளாகார் சன்மம்முடி யா!

இவைகளைக் கடலோசை யாக்காமலிருப்பது நம் கடன் என்று விண்ணப்பித்து விரிவஞ்சி இத் துடன் அமைகின்றேன்!

ஆசையுடையோர்க்கெல்லாம் கூறுமின்!
ஆசையுடையோரெல்லாம் கூறுமின்!

இறை ஞானம் பொது. பக்தி உடையவர்கள் யாவராயினும் இறை ஞானம்பெற உரிமை உண்டு. ஆலயப் பிரவேச உரிமை மட்டும் அளித்தால் போதாது. மக்களிடையே பக்தியும் இறை ஞானமும் பரவச் செய்வது பெரிய கைங் கரியமாகும்.

ஓராண் வழியாய் உபதேசித்தார் முன்னோர்! ஏரார் எதிராசர் இன்னருளால்-பார் உலகில் ஆசையுடையோர்க்கு எல்லாம் ஆரியர்கள்
கூறும் என்று
பேசிவரம்பு அறுத்தார் பின்!

எம்பெருமானர் திருக்கோட்டியூர் சந்நிதி யின் உச்சிக்கு உயர்ந்து, திருமந்திரார்த்தப் பொருளை ஆசையுடையோர்க்கெல்லாம் கூறி யருளியதைச் சாசனமாக்குகிறது இது. இந்த

எதிராஜ-மணவாள மாமுனிகளின் திருவாக்கை நாம் சிரமேற்கொண்டு மக்கள் அனைவர்க்கும் இறை ஞானம் அளித்தல் வேண்டும்.

முற்காலத்தை விடத் தற்போது மக்கள் தொகை அதிகரித்து விட்டது! முன்பு இறை ஞானம் பரப்பச் சிலரே சாலும்! உலகம் ஓய்ச்ச லில்லாமல் ஓடிக்கொண்டிருக்கிறது. இறை ஞானத்தைப் பரப்பப் பல்வேறு சாதனங்களையும் தற்காலத்தில் கைக்கொள்ள வேண்டும். இறை ஞானம் போதிக்கும் கைங்கரியத்தையும் எல் லோரும் மேற்கொள்ள வேணும். ஆசையுடை யோரெல்லாம் கூறவும் முன்வர வேண்டும். இதில் தடைகள் இருத்தலாகாது. முன்பு இறை ஞானம் பரப்புவதையே தலைமுறை தலைமுறை யாகச் செய்து கொண்டிருந்த குடும்பங்களின் வழி வந்தோர், தற்போது பல அலுவல்களை யும் ஏற்றுக்கொண்டுள்ளனராதலால்; இறை ஞானம் பரப்பும் பணியை இயன்றபோதெல் லாம், இயன்றவர்கள் எல்லாம், புரிதல் வேண் டும். ஆழ்வார்கள் பதின்மரும் ஒரு குடும்பத்தை யோ, ஒரு தனிக் கூட்டத்தையோ சேர்ந்த ''வர்களல்லரே!

—தெரித்தெழுதி

வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும்
பூசித்தும்
போக்கினேன் போது!''

என்று திருமழிசைப்பிரான் அருளியதை ஸ்ரீ வைணவர்கள் அனைவரும் தமது குறிக்கோ ளாகக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொருநாளும் பொதுமக்கள் இடையில் கடவுளைத் தொழுத காந்தியடிகளை நாம் உதா ரணமாகக் கொள்ள வேணும்!

நமது ஸ்ரீ வைணவ மகா சங்கம் இவ்வுயரிய கொள்கைகளின்படி 50 ஆண்டுகளாகப் பணி புரிந்து வருவது போற்றத்தக்கதாகும்!

தொண்டக் குலத்திடைத் தாழ்வு தவிர்ப் போம்!

பொதுப்பணிகளில் மகாத்துமா காந்தி யடிகள் ஒளிவுமறைவில்லாமலும், பாகுபாடு இல்லாமலும், சுத்தமாகவும் நடந்துகொண்டு, தன்னைப் பின்பற்றிய மற்றவர்களையும் அப் படியே நடந்து கொள்ள வேண்டும் என்று நியமித்தார். ஆலயங்கள் சமூகத்தின் பொது வாழ்வின் முன்னேற்றத்திற்காகவும் மேம்பாட் டிற்காகவும் ஏற்பட்டவை. ஆலயங்களில் வழி பாடும் நிருவாகமும் குறைபாடுகளுக்கும் மனத் தாங்கலுக்கும் இடம் இல்லாமல் நடைபெறு வது, மதத்தை வளர்ப்பதற்குதவும். இறைவனின் திருவோலக்கத்தில் அவனுடைய பக்தர்களை அர்த்தமற்ற பாகுபாடுகட்கு உட்படுத்துவதும் உள்ளம் கருகச் செய்வதும் தவறு! தவறு! இப்போதுள்ள இந்து அறநிலையப் பரிபாலனச் சட்டப்படி தீர்த்தம் சடாரி, பிரசாத வினி யோக வழிபாட்டு முறைகளைப் பிசகாமல் அமல் நடத்த வேண்டும்.

வாழாட்பட்டு நின்றீர் உள்ளீரேல் வந்து மண்ணும் மணமும் கொண்மின்!

என்ற விஷ்ணு சித்தர் திருவாக்கில் வித்தியாசம் காண முடியவில்லை!

ஆலய நிருவாகத்தை ஒரு கைங்கரியமாகக் கருதி, மிகப் புனிதமாக நடத்த வேண்டும். பத்தியும் நிருவாகத் திறமையும் உடையவர் களைத்தான் இக்கைங்கரியகட்கு நியமிக்க வேண் டும். மற்ற காரணங்கட்கு இடந்தரலாகாது. அது பயிரையே மேய வேலி இட்டதாகும்!

மணிப்பிரவாளம் தமிழிலும் மணக்க வேண்டும்!

வடமொழியும் தென்மொழியும் சமமாகப் பரவியிருந்த காலத்தில் ஆழ்வார்களுடைய திவ் வியப் பிரபந்தங்களுக்கு வடமொழியும், தென் மொழியும் கலந்த மணிப்பிரவாள நடையில் ஆச்சாரியர்கள் வியாக்கியானம் சாதித்தருளி னர். ஆச்சாரியர்களுடைய இவ்வியாக்கியா னங்கள் ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களை விட மிக ரசமானவை எனக் கருதப்படுகின்றன.

பிற்காலத்தில் வடமொழி பல காரணங் களால் வளரவில்லை. அதன் காரணங்களை இங்கு ஆராய வேண்டுவதில்லை. வடமொழியை மறுபடியும் பரவச் செய்தல் நலமே. எனினும், அந்நாள் வரும் வரையில் தென்மொழியாம் தமிழ் மொழியை மட்டும் பயின்றவர்கள் மிகப் பெரும்பாலோராக இருப்பதால், இப்பெரும் பான்மையான மக்களின் நலத்திற்காக வட மொழி கலந்துள்ள ஆச்சாரியர்களின் வியாக்கி யானங்களை, தமிழாக்கம் செய்வது சீரிய திருப் பணியாகும்! இம்முறையில் திருவாய்மொழி ஈடு, ஆச்சாரிய இருதயம், ஸ்ரீ வசன பூஷணம் என்னும் அரிய நூல்களைத் தமிழாக்கம் செய்வ தில் பெரும்பங்கு ஏற்றுக்கொண்ட இச்சங்கத் தின் பாகவத பண்டிதர்கட்கு ஸ்ரீ வைணவ உலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது!

ஸ்ரீமத் நாதமுனிகள் திவ்யப் பிரபந்தப் பாசுரங்கட்குப் பண்ணும் தாளமும் அமைத்து, தேவகானத்தில் பின்புள்ளாரும் இசையில் பாட உதவியருளினர். ஆனால் காலப்போக் கில் திவ்யப் பிரபந்தத்தைப் பண் முறையில் பாடும் பழக்கம் அருகிவிட்டது. இந்தப் பெரிய நஷ்டத்தை நாம் ஈடு செய்ய வேண்டும். இக் காலச் சூழ்நிலைகளும் இதற்கு உதவியாய் அமைந்துள்ளன.

''ஏதமில் தண்ணுமை எக்கம் மத்தளி
யாழ்குழல் முழவமோடு இசை திசை கெழுமி''

திவ்விய பிரபந்தக் கீதங்களைப் பண் முறையில் பாடப் பொருள் வருவாயுள்ள பெரிய ஆலயங் களும், அற நிலையங்களும், மடங்களும் ஏற்பாடு செய்தால் திவ்வியப் பிரபந்த கானம் பரவி நிலை பெறும். முக்கியமாக வளமையான இளமைக் குரல்களிலிருந்து இந்த இசை-அமுத வெள்ளம் பெருக்கெடுத்தால் தேன் வந்து பாயுமே காதினிலே!

இளைஞர்கள் எழுக!

எதிர்காலம் இளைஞர்களைப் பொறுத்துள்ளது. இளைஞர்களிடையே இறைஞானம் ஏற்படுத்த வேண்டுவது மிகவும் முக்கியமாகும். சுதந்தர உணர்ச்சியைப் பரப்புவதற்காக மகாத்துமா காந்தியடிகள் அந்நாளில் ஆரம்பித்த ஏட்டிற்கும் 'இளமை இந்தியா' (Young India) என்றே மகுடம் இட்டார். நடைமுறையில் உள்ள தலைமுறைக்குப் பிறகு நாம் இப்போது கடைப்பிடிக்கும் மதம், இறைஞானம், வழிபாட்டு முறை ஏற்பாடுகள் நிலைத்து நீடிக்க இளைஞர்களை இத்துறைகளில் பயிற்றக் கூடிய வழிமுறைகளைக் கையாள வேண்டும். கண்ணனும், நம்மாழ்வாரும் ஸ்ரீ ஆண்டாளும் அலங்கரித்த இளஞ்சமுதாயம் எழுவதாக!

பிரசாரப்பணி பெருகுக!

நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தைப் பொது மக்களுக்குக் கிடைக்கும் வகையில் அடக்க விலையில் ஆயிரக்கணக்கில் வழங்க அறநிலையப் பாதுகாப்புத் துறையினரும், ஏனைய மடங்களும், கோயில்களும் அறநிலையங்களும் உதவ வேண்டுவது அவர்களுடைய கடமையாகும். பல்வேறு ஸ்ரீ வைணவ அரிய நூல்கள் அச்சிடப்பட்டுப் பற்பல ஆண்டுகளாகிவிட்டன. அவைகளை எல்லாம் செம்மையாகவும், தென்மொழி விளக்கங்களுடனும் பதிப்பிப்பது பெரிய பணியாகும்.

வானொலி நிலையத்தினர் பத்திப் பாடல்களுக்கும், இலக்கியச் சொற்பொழிவுகட்கும் பெருவிழா நேர்வர்ணனைகட்கும் அஞ்சல் திட்டத்தில் இடந் தருவதற்கு வந்தனம்! எனினும் வானொலி நிலையத்தார் இச்சங்கத்தைப் போன்ற அமைப்புகளின் ஒத்துழைப்புடன் மேலும் ஆற்ற வேண்டிய பணிகளும் உள்ளன. இந்திய அரசியல் திட்டத்தின்படி அமைந்துள்ள நமது அரசு முறை, மதச்சார்பற்றதே ஆயினும் மத எதிர்ப்பானதன்று! அரசினர் தரும் பல்வேறு மதச்சார்புடைய விடுமுறைகளும் இதற்குச் சான்று! முக்கியமான பண்டிகைத் தினங்களில் அப் பண்டிகைகள், விழாக்கள், அவைகளின் முக்கியத்துவங்களை ஒட்டி மேலும் நிகழ்ச்சிகளை ஏற்படுத்துதல் நலம். மக்கள் படித்து அறிய வேண்டிய நூல்களை விளக்கத்துடன் அஞ்சல் செய்ய வேண்டும். தலைசிறந்த அறிஞர்களுடைய காலட்சேபங்கள், சொற்பொழிவுகளை அஞ்சல் செய்வது அரிய செல்வத்தைச் சேமித்து, வரும் சந்ததிகளும் பயனடையச் செய்வதாகும்!

வைணவ வாழ்க்கை விளக்கு!

மகாத்துமா காந்தியடிகள் வைணவத்தை வாழ்ந்து காட்டினார்! மதம் அவரது பொதுப் பணிக்கு உதவி செய்தது; தடை செய்யவில்லை. தெய்வீகம் பெருக்கியதே அவருடைய அரசியல். மக்களுக்கு உணவும், உடையும், உறையுளும் அமைந்த பொருளாதார விடுதலையை மட்டும் அவர் விரும்பவில்லை. சம உரிமை கொண்ட அரசியல் விடுதலை மட்டும் அவரது குறிக்கோளன்று, ஆன்மீகத் துறையில் அனைவரும் வளர்ந்து சச்சரவின்றி ஒருமைப்பாடு அடைய வேண்டுமென்பதே அவருடைய பெருநோக்கம்!

ஆச்சாரிய வினோபாபாவே நம் நாட்டின் பல பிரச்னைகளை ஆழ்ந்து சிந்திக்க, ஓராண்டுக்காலம் பேசாவிரதத்தைக் கடைப்பிடித்து இருதினங்களுக்கு முன்பு தம் விரத முடிவில் வெளியிட்ட கருத்தும் இதுவே!

மகாத்துமா எவ்விதமான பக்தனுக வாழ வேண்டுமென்று விரும்பி அவர் அடிக்கடி பாடிக் களித்த பாடலைச் சேவித்து இவ்வுரையை முடிக்கின்றேன்.

பக்தனின் இலக்கணம் கூறும், இலக்கியமாக அமைந்துள்ள இப்பாடலே நமக்கும் வழிகாட்டி விளக்கு! கலங்கரை விளக்கம்!

சொல்லுவோம் வைணவன் யாரெனக் கேளீர்!
சோர்ந்தவர் பீடையை அறிவானே!
எல்லோர்தம் துக்கத்தை எரிப்பவ னெனினும்
எள்ளள வும்கர்வம் அடையானே!
மன்னுயிர் மக்களை வந்தித்து நிற்பான்
மாசுறு நிந்தனை மொழியானே!
சொல்மனம் உடலதில் சுத்தம தானவன்
சோதியுன் முள்பெற்ற தாய்மாரே

(சொல்லுவோம்)

பாவப்பே ராசையற்றுப் பார்வைசத் துவ
முற்றுப்
பரஸ்திரீயைத் தாயெனப் பணிவானே!
நாவினல் பொய்மொழி நவிலவும் மாட்டான்
நாளும் பிறர்செல்வம் தீண்டானே!

(சொல்லுவோம்[

மாயையும் மோகமும் மாயும் அவன்பால்
மனத்தில்வை ராக்கியம் உறுவானே!
ஓயாமல் ராமனை உள்ளம் நினைத்திட
உண்டுபுண் ணியப்புனல் உடலதிலே!

(சொல்லுவோம்)

காமமும் லோபமும் கபடமும் கோபமும்
கனவிலு மில்லாத கனவானே!
பாமரர் பார்த்திடப் பற்பல தலைமுறை
பாவனம் அடைந்திடச் செய்வானே!

(சொல்லுவோம்)

வாழ்க! வைணவம்! வாழ்க! வையகம்! *

சென்னை ஸ்ரீவைணவ சங்கத்தின் 50 ஆண்டு நிறைவுப் பொன்விழாவின் தலைமையுரை, இங்கு வெளியிடப் பெறுகின்றது. —ஆசிரியர்.

திருவாசகத்தில் சைவசித்தாந்தம்

—ந. ரா. முருகவேள், M.A.,M.O.L.

முன்னுரை :

தமிழ்மொழிக்கண் உள்ள தலைசிறந்த சமய ஞானப் பக்திப்பெரும் பனுவல்களுள், திருவாசகம் மிக்க சிறப்புடையது என்பதை, நாம் அனைவரும் அறிவோம். அங்ஙனமே தமிழகத்தில் உள்ள சமய தத்துவக் கொள்கை வகைகளுள் ஒன்றுகச் சிறந்து திகழ்வது, சைவ சித்தாந்தம் என்பதனையும், நாம் அனைவரும் நன்கறிவோம். ஆதலின், இங்குத் தனியாகத் திருவாசகம் பற்றியோ, சைவசித்தாந்தம் பற்றியோ ஏதும் விரித்துரைக்க வேண்டுவதில்லை. கொடுக்கப்பட்டுள்ள தலைப்பிற்கு ஏற்ப, சைவசித்தாந்தக் கொள்கைகள் உருவாகி வரையறை பெறுவதற்குத் திருவாசகம் எவ்வாறு துணை புரிந்துள்ளது; திருவாசகத்திற் காணப்பெறும் குறிப்புகள், சைவசித்தாந்த சந்தான ஆசிரியர்களால் எவ்வாறு நுண்ணிதின் உணர்ந்து போற்றிக் கொள்ளப்பட்டுள்ளன என்பதனை மட்டும், இயன்றவரை இங்கு ஒரு சிறிது ஆராய்ந்தறிய முயலுவோமாக!

கவிதையும் தத்துவமும் :

கவிதைக்கும் தத்துவத்திற்கும் மிகமிக நெருங்கிய தொடர்பு உண்டு. மனித வாழ்க்கை படிப்படியே முன்னேறி, வளர்ந்து சிறந்து ஓங்குவதன் மூலம் நாகரிகம் தழைக்கின்றது. நாகரிகத்தின் செழிப்பும் சிறப்புமே பண்பாடாக மலர்கின்றன. வாழ்க்கையின் வளமும், பண்பாட்டின் மாட்சிமையும், வளர்ந்து ஓங்குந் தோறும், சிறந்த கவிதைகள் தோன்றுகின்றன. கவிதைகள் பல்கிப் பெருகுவதனால் இலக்கியங்கள் தோன்றுகின்றன. இலக்கியங்களின் பிழிவும் சாரமுமாக ஒருங்கு திரண்டு உருவாகும் அறிவு அனுபவக் கொள்கைகளே, தத்துவம் என்னும் பெயரால் வழங்கப்படுகின்றன.

எனவே கவிதைக்கும் தத்துவத்திற்கும் மிக மிக நெருங்கிய இயைபும் தொடர்பும் உண்டு எனலாம். ''சிறந்த தத்துவ ஞானியாக இல்லாத எவனும் இதுவரையில் ஓர் உயர்ந்த கவிஞனாக விளங்கியதில்லை'' (''No man was ever yet a great poet without being at the same time a profound philosopher'' --S. T. Coleridge) என்பது, அறிஞர்கள் கண்ட முடிவு. ஆதலின் திருவாசகம் ஒரு சிறந்த கவிதை நூல் என்பது மட்டுமேயன்றி, மிகச் சிறந்த ஒரு தத்துவஞான நூலும் ஆகும் என்று, நாம் கூறுதல் பொருந்தும்.

சைவசித்தாந்தம் என்னும் அரிய பெரிய தத்துவக் கொள்கையினை வகுத்து விளக்கிய நம்முடைய சைவப் பெருஞ் சான்றோர்கள், திருவாசகத்தை நன்றாக ஓதி உணர்ந்தவர்கள்; அதன்கண் பெரிதும் தோய்ந்து ஈடுபட்டுத் தினைத்தவர்கள். திருவாசகத்தின் ஒவ்வொரு சொல்லையும் சொற்றொடரையும், அவர்கள் பெரிதும் நுனித்து நுனித்து ஆய்ந்துணர்ந்து அவற்றின் அடிப்படையிலும், அவற்றிற்கு ஒரு சிறிதும் மாறாத வகையிலுமே, சைவசித்தாந்தக் கொள்கைகளை வகுத்து வரையறை செய்திருக்கின்றனர் எனத் தெரிகின்றது.

சமய ஞானத் தத்துவக் கொள்கைகளில் தெளிவு ஏற்படாதபொழுதும், சிக்கல்கள் நேரும்பொழுதும், இன்னதுதான் ஏற்புடைத்து என்று எண்ணித் துணிந்து முடிவு செய்வதற்கு, நம் முன்னோர்கள் திருவாசகத்தினை ஒரு மேல்வரிச்சட்ட நூலாக மேற்கொண்டிருந்திருக்கின்றனர் எனலாம்.

நச்சினார்க்கினியர் :

தமிழ்நூல் உரையாசிரியர்கள் பலருள் தலைசிறந்த ஒருவர் நச்சினார்க்கினியர். 'உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர்' என்றும் 'நச்சினார்க்கினியன் எச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்' என்றும், தமிழறிஞர்கள் அவரைப் பெரிதும் போற்றிப் பாராட்டிப் புகழ்வர்.

(1) அவர் திருமுருகாற்றுப் படையில், 'சேவடிபடரும் செம்மல் உள்ளம்' என்னும் தொடருக்குப் பொருள் விளக்குங்கால், திருவாசகத்தினையே மேற்கோள் காட்டுகின்றார்.

---

* திருக்குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் 28-ஆம் ஆண்டு விழாவில், அருள்மிகு கும்பேசுவரர் திருக்கோயிலில், ''முத்தமிழ்க் காவலர்'' **திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்** அவர்கள் தலைமையில், நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது (2-1-76).

''திருவடியே வீடாய் இருக்கும் என்றூர்; அது, 'தென்னன் பெருந்துறையான் காட்டாதன எல்லாம் காட்டிச் சிவம் காட்டித் தாட்டாமரை காட்டித் தன் கருணைத் தேன்காட்டி' என்பதனாலும், பிறரும் திருவடியைக் கூறுமாற்றாலும் உணர்க.''

என்று அவர் எழுதியிருத்தல் காணலாம்.

(2) இங்ஙனமே அவர், கந்தழி என்னும் சொற் பொருள்பற்றி விளங்குங்காலும்,

''கந்தழியாவது ஒரு பற்றும் அற்று அருவாய்த் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள்; இதனை, 'உற்ற ஆக்கையில் உறுபொருள் நறுமலர் எழுதருநாற்றம்போல், பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்' என அதனை உண்மையான் உணர்ந்தோர் கூறியவாற்றான் உணர்க''

என வரைந்திருத்தல் அறிந்து மகிழ்தற்குரியது. தமிழ் நெறியியல் அறிந்த சான்றோராகிய நச்சினார்க்கினியர், இவ்விரண்டு இடங்களிலும், வேறுபிற எத்துணையோ நூல்களினின்று மேற்கோள்கள் காட்டலாமாயினும், திருவாசகத்தினையே சிறப்புற விதந்தெடுத்துக் காட்டியிருத்தல் கருதி மகிழ்தற்குரியது.

இவ்வாறே சைவசித்தாந்தப் பெருஞ் சான்றோர்களும், தத்துவக் கொள்கைகளை வரையறை செய்து உணர்த்துவதற்குத் திருவாசகத்தையே, மிகச் சிறந்த பிரமாண நூல்களுள் ஒன்றாக மேற்காண்டுள்ளனர். இவ்வுண்மையைத் தெள்ளிதின் விளக்குகின்ற, இரண்டொரு சான்றுகளை மட்டும் ஈண்டுக் காண்போம்.

குருவும் சிவமும்:

(1) இறைவனே குருவடிவமாக மானுடச் சட்டை தாங்கி எழுந்தருளி, உயிர்களை யெல்லாம் ஆட்கொண்டருளுகின்றான் என்பது, சைவசித்தாந்தக் கொள்கை. மாணிக்கவாசகரின் அருள் வாழ்க்கையையும், திருவாக்கையும் அடிப்படையாகக் கொண்டே, இக்கொள்கை வரையறை செய்யப் பெறுவதாயிற்று. எல்லாம் வல்ல சிவபெருமான், திருப்பெருந்துறையிற் குருந்தமர நிழலில் குருவடிவம் கொண்டு போந்து, மணிவாசகரை ஆட்கொண்ட திறத்தினை நினைந்தே, மெய்கண்டார் பெருமான்,

''ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத் தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே''

எனச் சிவஞான போதத்தின் எட்டாம் சூத்திரத்தினை அருளிச் செய்தனர். அருவநிலையில் உள்ள இறைவன் உருவம் கொண்டு வருதல் இயலுமோ? எனச் சிலர் ஐயுற்றுவினவலாம். அதற்குத் திருக்களிற்றுப் படியாரில், திருக்கடவூர் உய்யவந்த தேவர் விடை கூறுகின்றார். உவர்ப்பு என்னும் சுவை அருவமேயாயினும், அது உப்பு என்னும் உருவப் பொருளாகத் திரண்டு குவிந்து நிற்றலைக் காண்கின்றோம். ஆதலின் இறைவன் அருவநிலையில் இருப்பினும், தனது அன்பர்களை ஆட்கொண்டு காத்தருள உருவம் கொண்டு போதருதல் இயலும் என்பது, அவர் கூறும் விளக்கம். இவ்வுண்மையை வலியுறுத்துவதற்கு அவர்,

''கண்ணுல் யானும் கண்டேன் காண்க
அருள்நனி சுரக்கும் அமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவன்என யானும் தேறினன் காண்க
அவன்எனை ஆட்கொண்டு அருளினன் காண்க''

''அருபரத்து ஒருவன் அவனியில் வந்து
குருபரன் ஆகிய அருளிய பெருமை''

என்னும் திருவாசக வரிகளையே நினைவு கூர்ந்து, மேற்கோள் காட்டியிருக்கின்றார். ''சிவன் எனவே தேறினன் யான் என்றமையால், இன்றும் சிவன் அவனி வந்தபடி செப்பில்.....'' எனவரும் திருக்களிற்றுப்படியார் செய்யுளில் திருவாசக வரியே மேற்கொள் நிலையில் வந்திருத்தல் காணலாம். திருவருட்பயன் என்னும் சைவசித்தாந்த நூலின்கண் வரும் ''அருளுருநிலை'' என்னும் தலைப்பு முழுவதும், திருவாசகத்தை அடியொற்றியதேயாகும்.

ஒளியும் இருளும்:

(2) இறைவன் 'அங்கிங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய்' நிற்கின்றான். ஆயினும் உயிர்கள் இறைவனை அறிய மாட்டாமல், பொறிபுலன்களுடன் இயைந்து மயங்கியே நிற்கின்றன. இஃது எது போலும் என்னில், சூரியன் எவ்வளவுதான் பேரொளி பரப்பித் திகழ்ந்தாலும், பிறவிக் குருடர்கள் அதனை ஒரு சிறிதும் காண முடிவதில்லை. அவ்வாறே, உயிர்களும் மலங்களினால் மயங்கி அறிவிழந்து, இறைவனை அறிய மாட்டாமல் துன்புறுகின்றன. ''இங்கும்தான் அந்தகருக்கு இரவி இருள் ஆகும்; ஈசன் அருட்கண் இல்லார்க்கு ஒளியாயே இருள் ஆவன்'' என்பது சிவஞானசித்தியார். ''எங்கும் நீர், நீரேயாயினும் பருகுவதற்கு ஒரு துளியும் இல்லை'' ('Water, water everywhere but not a drop to drink' — S. T. Coleridge) என அலமந்து ஆங்கிலக் கவிஞர் ஒருவர் பாடுகின்றார். அங்ஙனமே, இறைவனது திருவருள் வெள்ளம் எங்கும் பரவிப் பெருகிக் கிடப்பினும் அதனை உயிர்கள் அறியமாட்டாமல் அலமந்து உழலுகின்றன என்கின்றார் உமாபதிசிவம். இந்நிலையை உன்னும்போது, அவருக்குத் திருவாசகமே நினைவிற்கு வருகின்றது. ''வெள்ளத்துள் நாவற்றி யாங்கு உன் அருள் பெற்றுத் துன்பத்தினின்றும் விள்ளக்கிலேன்'' எனவரும் நீத்தல் விண்ணப்ப வரிகளை நினைவு கூர்ந்தே,

''வெள்ளத்துள் நாவற்றி எங்கும் விடிந்திருளாம் கள்ளத் தலைவர் கடன்''

எனத் திருவருட் பயனில், உமாபதிசிவம் அருளிச் செய்திருக்கின்றார். 'முன்னோர் மொழி

பொருளே யன்றி, அவர் மொழியும் பொன்னே போற் போற்றுவம் யாம்' என்பதற்கு, இஃது ஒரு நல்ல எடுத்துக்காட்டு ஆகும்.

நீரும் தீயும்:

(3) இறைவன் சடம் சித்து, உயிரில் பொருள் உயிர்ப்பொருள், ஆகிய எல்லாவற் றினுள்ளும் விரவிக் கலந்து நிற்கின்றான். ஆயினும், அவன் அவைகளின் ஒன்றல்லன்; அவற் றின் வேறுபட்டவன்! வேறுபட்ட அவன் அவை களுள் எங்ஙனம் பிரிவற இயைந்து நிற்றல் இயலும்? எனச் சிலர் வினவுதல் கூடும். இவ் வினாவுக்கு ஒரு வகையில், திருவருட் பயன் என்னும் சைவசித்தாந்த நூல், சிறந்ததொரு விளக்கம் தருகின்றது. நீர் தண்மையுடையது. தீ வெம்மை யுடையது. நீரும் தீயும் தம்முள் வேறுபட்டவை; மாறுபட்டவை. எனவே நீரும் தீயும் தம்முள் ஒன்று கலக்க மாட்டா. ஆயினும், தண்மை மிக்க நீரின்கண், ஒரோவழி தீயினது வெம்மை கலந்து நிற்றலும் உண்டு; நீரும் தீயும் தம்முள் அறவே மாறுபட்டனவா யினும், வெந்நீரின்கண் அவையிற்றின் இரண்டு தன்மையும் பிரிவற விரவிக் கலந்து நிற்கக் காண்கின்றோம். அது போலவே, சடமும், சித்தும் ஆகிய உலகியற் பொருள்களிலெல் லாம் அறவே வேறுபட்டவனாயினும், ஒரோ வழி இறைவன் அவற்றோடு கலந்து ஒன்றி உடனாகவும் நிற்கின்றான். இறைவனின் இரண் டன்மை ஆகிய இவ்வியல்பினையே 'அத்துவிதம்' அல்லது 'வேறாய் உடனாதல்' எனச் சைவ சித் தாந்த நூல்கள் சாற்றும். இறைவனின் இவ் வியல்பினையே,

> ''எங்கும் எவையும் எரியுறநீர் போல்ஏகம்
> தங்கும்அவன் தானே தனி''

எனத் திருவருட்பயன் தெளிவிக்கின்றது. இதற்கு உரிய ஆதாரமும் மேற்கோளும் ''பார்பதம் அண்டம் அனைத்துமாய் முனைத்துப் பரந்ததோர் படரொளிப் பரப்பே நீருறுதீயே நினைவதேல் அரிய நின்மலா'' எனவரும் திருவாசகப் பகுதியேயாகும்.

இருவினை ஒப்பு :

(4) இருவினையொப்பு மலபரிபாகம் சத் திநிபாதம் என்பன, சைவசித்தாந்தத்தில் அடிக்கடி வழங்கப் பெறும் குறியீடுகள். இரு வினையொப்பு என்பது, மலபரிபாகம் அடைதற் கும், சத்திநிபாதம் எய்துதற்கும், ஞானம் பெறு வதற்கும் உரிய வாயில் ஆகும்.

> ''இருவினை யொப்பில் இறப்பில் தவத்தான்
> மருவுவனும் ஞானத்தை வந்து''

என்பது சிவஞானபோதம். இருவினைகளாகிய புண்ணிய பாவங்கள் இரண்டும், சரியை கிரியை யோகம் என்னும் சிறந்த தவத்தின் பயனாகத் தராசுத் தட்டுகளைப் போல, நேராக நின்று சம நிலையை அடைதலே, இருவினையொப்பு எனப் படும். 'ஒட்டு இருவினைச்சமம், கட்டவிழ்பரு வம்' என்பது பாம்பன் சுவாமிகள் அருளிய ஞானவாக்கியம்.

ஒருபொருளில் விருப்பும், பிறிதொரு பொருளில் வெறுப்பும் கொள்ளுதல் இன்றிப் புண்ணிய பாவம் இரண்டிலும், அவற்றின் பயன்களிலும் விருப்பு வெறுப்பு இன்றிப் பொதுமை யுணர்வுடன் இருக்கப் பெறும் நிலை யையே, இருவினையொப்பு, எனக்கொள்ளுதல் பொருந்தும். இதனைச் 'செஞ்சாந்து பூசினும் செத் தினும் போழினும் நெஞ்சோர்ந்து ஓடா நிலைமை' எனத் தொல்காப்பியத்திற்கு உரை வரைந்த பேராசிரியர் குறிப்பிடுவர். இதனைச் 'சாந்தம்' அல்லது 'சமநிலை' என்றும் நூல்கள் கூறும்.

> ''ஊழால் விளையும் இன்ப துன்பங்களை எவன் இறையருளின் கொடை என்று சம நோக்கோடு ஏற்றுக் கொள்ளுகின்றானே—எவ னுடைய உணர்ச்சியும் நுண்ணுணர்வும் முரண் படாமல் நன்கினிது ஒன்றுபட்டு இணைந்து நின்று, ஊழ்த் தேவதையினுடைய விரல்களின் விருப்பப்படியெல்லாம் ஒலிப்பதற்கு ஏதுகுழ லாக இருக்கமாட்டானோ—எவன் பொறி புல னுணர்ச்சிகளுக்கு அடிமைப்படாதவனே—அத் தகையவனை எனக்குக் காட்டுக! அவனை என் இதயத்தின் ஆழத்தில், உள்ளத்தின் உள்ளுக் குள்ளே, பொன் போற் பொதிந்து வைத்துக் கொண்டு போற்றுகின்றேன். அத்தகையோர் இறையருள் பெற்ற பெரியோர்கள் ஆவர்''

என்று செகப்பிரியர் (Shakespeare), தாம் இயற்றிய ஹாம்லெட் (Hamlet) என்னும் நாடக நூலிற் கூறியிருத்தலும், ஈண்டு நாம் சிந்தித்து மகிழ்தற்கு உரியது. இந்நிலையினையே, சைவசித்தாந்த நூல்கள் 'இருவினையொப்பு' என இயம்புகின்றன.

> ''உணக்கி லாததோர் வித்துமேல் விளையாமல்
> **என்வினை ஒத்தபின்**
> கணக்கிலாத் திருக்கோலம் நீவந்து
> காட்டினாய் கழுக்குன்றிலே''

எனவரும் திருவாசக வரிகளில், இருவினை யொப்புப் பற்றிய சைவசித்தாந்தக் கருத்திற்கு அடிப்படைமூலம், அமைந்திருத்தல் காணலாம்.

உருமூன்று :

(5) இறைவனைப் பல்வேறு சமயங்களும் பலப்பல வகையிற் கூறுகின்றன. ஒரு சில சமயங்கள் கடவுளை அருவம் என்றே கொள் கின்றன. ஒருசில சமயங்கள் கடவுளை உருவம் என்றே உரைக்கின்றன. இங்ஙனம் இவ்விரு திறநிலைகளுள் ஒவ்வொன்றனையே பற்றிக் கொண்டு, சமயங்கள் பலவும் தம்முள் இகலிக்

" A man that Fortunes buffets and rewards
Has taken with equal thanks ; and blest are those
Whose blood and judgment are so well commingled
That they are not a pipe for fortune's finger
To sound what stop she pleases...
Give me that man,
That is not passion's slave and I will wear him
In my heart's core, ay, in my heart of heart,
As I do thee..." — SHAKESPEARE,
Hamlet.

கலாம் விளைத்து நிற்க, இவ்விருதிற நிலைகளையும் ஏற்று உடன்பட்டுக் கொள்வதுடன், இவற்றின் வேறுக உருவாருவம் என்னும் ஒரு நிலையும் இறைவனுக்கு உண்டு எனச் சைவசித்தாந்தம் சாற்றுகின்றது. இதனை,

''அருவமும், உருவா ரூபம்
ஆனதும், அன்றி நின்ற
உருவமும் மூன்றும் சொன்ன
ஒருவனுக்கு உள்ள வாமே''

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுள் கொண்டு தெளியலாம். பிரமன் திருமால் உருத்திரன் மகேசுவரன் ஆகிய மூர்த்தங்கள் நான்கும் உருவம்; விந்து நாதம் சத்தி சிவம் என்பன நான்கும் அருவம்; சதாசிவம் என்னும் சிவலிங்கத் திருமேனி அருவுருவம் (சித்தியார் 164). கண் காது மூக்கு முகம் முதலிய உறுப்புகள் காணப்படாமையால் அருவமாகவும், கண்ணுற் காணப்படுகின்ற பருவடிவப் பிழம்பாகப் புலனாகி நிற்றலின் உருவமாகவும், சிவலிங்கம் திகழ்கின்றது. ஆதலின் அதனை 'உருவாருவம்' என்றும், 'சகளநிஷ்களம்', என்றும் நூல்கள் நுவலும்.

''காணுத அருவினுக்கும்
உருவி னுக்கும் காரணமாய்
நீள்நாகம் அணிந்தார்க்கு
நிகழ்குறியாம் சிவலிங்கம்''

என்பது பெரியபுராணம். இங்ஙனம் இறைவன் அருவம் உருவம் அருவுருவம் என்னும் மூன்று நிலைகளிலும் விளங்கின்றான் எனச் சைவசித்தாந்தம் கூறுவதற்கு,

''உருமூன்றும் ஆகி
உணர்வரிதாம் ஒருவனுமே
புரம்மூன்று எரித்தவா
பூவல்லி கொய்யாமோ''

எனவரும் திருவாசகப் பகுதியே, மூலமும் ஆதாரமும் ஆகும் எனத் துணிந்து மொழியலாம்.

மறக்கருணை :

(6) உலகில் உள்ள சமயங்கள் பலவும், இறைவன் பாவிகளைச் சபிக்கின்றான்; தீயவர்களைத் தண்டிக்கின்றான் எனப் பல செய்திகளைக் கூறக் காண்கின்றோம். இறைவன் கோபங் கொள்கின்றான், கோபம்கொண்டால் தண்டிக்கின்றான், அழிக்கின்றான் என்றே பல சமயங்கள் கருதுகின்றன. ஆனால் சைவசித்தாந்தமோ, கடவுள் ஒரோவழி தண்டிக்க நேரினும், அத் தண்டனையும்கூட, அவர்தம் அளவற்ற பெருங் கருணைத் திறத்தினாலேயே நிகழ்கின்றது என விளக்குகிறது.

தந்தையும் தாயும், தாம் பெற்றெடுத்த மைந்தர்கள் தம்முடைய சொற்படி நடவாமல் தவறுகள் செய்வார்களாயின், ஒரோவழி அவர்களை அடித்தும் தண்டிப்பதுண்டு. அஃது, அவர்கள் தமது மைந்தர்களின்மீது வைத்துள்ள அளவற்ற அன்பின் காரணமாகவே அன்றிப் பிறிதொன்று பற்றியன்று (சித்தியார் 105).

'' தந்தைதாய் பெற்ற தத்தம்
புதல்வர்கள், தம்சொல் ஆற்றின்
வந்திடா விடின் உறுக்கி
வளாரினால் அடித்துத் தீய
பந்தமும் இடுவர்; எல்லாம்
பார்த்திடின் பரிவே யாகும்;
இந்தநீர் முறைமை யன்றே?
ஈசனார் முனிவும் என்றும் ''.

சிறந்த மருத்துவ அறிஞர் ஒருவர், ஒரு நோயாளருக்கு மிகவும் கசப்பான மருந்தை யளித்துக் கடும் பத்தியங்களை விதிக்கின்றார்; மற்றொரு நோயாளருக்கு மிகவும் சுவையான மருந்தைக் கொடுத்துப் பாலும் பழமும் உண்ணச் செய்கின்றார்; வேறொரு நோயாளருக்கு மிகவும் துயரம் தருகின்ற அறுவைச் சிகிச்சை புரிகின்றார். இஃது அம்மருத்துவரின் விருப்பு வெறுப்பு, அல்லது பரிவு சினம் என்பன பற்றி நிகழ்வதன்று! அவ்வவர்க்குள்ள நோயின் இயல்புக்கு ஏற்ப அமைவது.*

அம் முறையிலேயே, இறைவனும் உயிர்களுக்கு ஏற்றபெற்றி அருள்புரிந்து அவைகளை ஆட்கொள்கின்றான் (சித்தியார், 125). ஆதலின், ஒரோவழி இறைவன் தண்டனைகள் அளிப்பதும், அவன் நம்மீது கொண்டுள்ள அளவற்ற பேரருட் பெற்றியினாலேயே ஆகும். ''நிக்கிரகங்கள் தானும் நேசத்தால் ஈசன் செய்வது'' (சித்தியார் 105) என்பது, சைவசித்தாந்தக் கொள்கை. இதனை ''மறக்கருணை'' எனச் சைவசித்தாந்த நூல்கள் கூறும்.

''ஏற்று வந்தெதிர்தாமரைத் தாள்உறும்
கூற்றம் அன்னதோர் கொள்கைஎன் கொள்கையே'' (1)

''உடையாய் கூவிப் பணிகொள்ளாது
ஒறுத்தால் ஒன்றும் போதுமே'' (2)

''நயனங்கள் மூன்றுடைய
நாயகனே தண்டித்தால்
சயம் அன்றே வானவர்க்குத்
தாழ்குழலாய் சாழலோ'' (3)

''காமன்உடல் உயிர்காலன்
பல்காய் கதிரோன் ....
தூய்மைகள் செய்தவா
தோள்நோக்கம் ஆடாமோ'' (4)

என்பன போல வரும் திருவாசகப் பகுதிகளை, இறைவனின் மறக்கருணை பற்றிய விளக்கத்திற்கு ஏதுவாகும் எனலாம்.

---

* "A good physician, when a disease is so bad and so great that he has to cut off a hand, foot, ear, eye, or let it decay, does so in order to save the body. Looked at from the point of view of the member that he cuts off, he seems a cruel and merciless man; but when looked at from the point of view of the body, which he intends to save, it turns out that he is a fine and true man and does a work that is good and Christian, as far as it goes..."

—MARTIN LUTHER.

அடியார் உறவு :

(7) இறைவனின் அருளைப் பெறுவதற்கு அடியார் கூட்டுறவு வேண்டும் என்பதைச் சைவ சித்தாந்தம் பெரிதும் வற்புறுத்துகின்றது. ''அடியவர்க்கு அன்பில்லார் ஈசனுக்கு அன்பில் லார்'' என்பது சிவஞானசித்தியார். 'சிவபக்தர் களோடு இணங்குக; அல்லாதாரோடு இணங் கற்க' எனக் கட்டளையிடுகின்றது சிவஞான போதம். அப்பகுதிக்கு உரைவரைந்தருளும் போது, மாதவச் சிவஞான சுவாமிகள், சிவ பக்தர் அல்லாதாரோடு இணங்கியவழி விளை யும் தீங்குகளை விளக்குதற்கு,

'' தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்,
ஆறு கோடி மாயா சக்திகள்
வேறு வேறு தம் மாயைகள் தொடங்கின;

ஆத்தம் ஆனர் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும்பு ஏறினர்;
விரத மேபரம் ஆக வேதியரும்
சரதம்ஆகவே சாத்திரம் காட்டினர்
சமயவாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்...'''

எனவரும் போற்றித் திருவகவல் திருவாசகப் பகுதியையே எடுத்துக்காட்டியுள்ளார். ''உடை யாள் உன்றன் நடுவிருக்கும்; உடையாள் நடு வுள் நீ இருத்தி; அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதாலல், அடியேன் உன் அடியார் நடு வுள் இருக்கும் அருளைப் புரியாய்'' என மணி வாசகர் இறைவன்பால் வேண்டிக் கொள்வது அனைவரும் அறிந்தது.

செய்தனவே தவமாதல்:

(8) பெரியபுராணத்தில் வரும் சண் டேசுர நாயனர் வரலாறு, நாம் அனைவரும் அறிந்தது. சண்டேசுரர், வேதியரும் தமது தந்தையும் ஆகிய எச்சதத்தனின் இருகால்களை யும் தடிந்தார். அது மிகப் பெரிய குற்றமும் பாவமும் ஆகும். ஆயினும் சிவபிரான் அவ ருக்குத் திருவருளைச் சொரிந்து, அவரை அண்டர் தமக்கு அதிபன் ஆக்கித் 'தொண் டர்க்கு நாயகம்' என்னும் பேறும் அளித்துச் சிறப்பித்தார். இது பொருந்துமோ? என நம்மனோர்க்கு ஐயம் எழலாம். அதனை நுண்ணி தின் எண்ணியுணர்ந்த சேக்கிழார் பெருமான்.

''வந்து மிகைசெய் தாததைதாள்
மழுவால் துணித்த மறைச்சிறுவர்
அந்த உடம்பு தன்னுடனே
அரனர் மகனர் ஆயினர்;
இந்த நிலைமை அறிந்தார் யார்?
ஈறி லாதார் தமக்கன்பு
தந்த அடியார் செய்தனவே
தவமாம் அன்றே? சாற்றுங்கால் ''

என வினவி விடையளித்துத் தெளிவுறுத்தி முடித்தருள்கின்றார். அப்போது சேக்கிழார் பெருமான் தம் திருவுள்ளத்தில் நினைவு கூர்ந் தது, ''சித்தம்சிவமாக்கிச் செய்தனவே தவ மாக்கும் அத்தன் கருணையினல் தோள் நோக் கம் ஆடாமோ'' என்பன போன்ற திருவாசகப் பகுதிகளையே யாகும் எனலாம்.

விளையாட்டு :

(9) இறைவன் உலகைப் படைக்கின்றான்; காக்கின்றான்; அழிக்கின்றான் என்பதனை, இறை யுண்மையை உடன்படும் சமயங்கள் பலவும் கூறும். ஆயினும், இங்ஙனம் இறைவன் உலகை படைத்தலும் காத்தலும் அழித்தலும் ஏற் றுக்கு? என வினவினல், எல்லாச் சமயங்களும் ஒரே வகையில் விடை தருவதில்லை. தன் பொருட்டு என்றும், பிறர் பொருட்டு என்றும், வீணுக்கு என்றும், விளையாட்டுக்கு என்றும், வெவ்வேறு சமயங்கள் வெவ்வேறு வகையில் விடைகள் புகலும்.

(1) தன் பொருட்டு எனின், வரம்பில் இன்பமுடைய முதல்வனுக்கு இச் செய்கையால் வரக்கடவதொரு பயன் இல்லை. (2) உயிர் களாகிய பிறர் பொருட்டு எனின், உயிர்களும் இறைவனும் அபேதமோ? பேதமோ! பேதா பேதமோ? என வினு நிகழும். (3) அபேதமா யின், அது தன் பொருட்டேயாம். (4) பேத மாயின், தன்னின் வேறுபட்ட உயிர்களுக்காக அதனைச் செய்வதற்கு ஓர் இயைபும் இல்லை. (5) பேதாபேதம் எனின், ஒரு பொருட்கே இரண்டு மாறுபட்ட தன்மை கோடல் பொருந் தாது. (6) இனி, வேறு பயன் எதுவும் கரு தாமை ஆகிய வீணுக்கு எனின், அது பித்தர் செய்யும் தொழிலோடு ஒக்கும். (7) விளை யாட்டுக்கு எனின், அஃது அறிவு வளரப் பெறுத இளஞ்சிறார்களின் இயலும் செயலுமாக முடி யும். ''விளையாட்டு என்னின் சிறுமழவு இறை யது ஆகும்'' என்பது, பௌத்தர்கள் கருத்து (சித்தியார் பரபக்கம், 87). எனவே இறைவன் உலகத்தைப் படைத்தலும், காத்தலும், அழித்த லும் விளையாட்டிற்காக என்னும் கொள்கை, சைவசித்தாந்தத்திற்கும் உடன்பாடு அன்று.

ஆயினும், சைவசித்தாந்தச் சான்றோர்கள் ஆகிய அருள்நந்தி சிவமும், உமாபதிசிவமும், 'விளையாட்டு' என்னும் கொள்கையை அறவே மறுத்து விடாமலும், முற்றிலும் தழுவிக்கொள் ளாமலும், ஓரளவில் ஏற்று உடன்பட்டுக் கொள்ளக் காண்கின்றோம். ''முன்னவன் விளை யாட்டு என்று மொழிதலும் ஆம்'' என எச்ச உம்மை கொடுத்து உரைத்துத் தழுவிக் கொள் கின்றார் அருள்நந்தி சிவம். 'ஏற்ற இவை அரன் அருளின் திருவிளையாட்டாக இயம்புவர்கள்' எனக் குறிப்பிடுகின்றார் உமாபதி சிவம் (சிவப்பிரகாசம் 18).

இங்ஙனம், இறைவன் முத்தொழில் இயற்று தல் திருவிளையாட்டின் பொருட்டே என்னும் சிலர் கொள்கையினை, முழுவதும் இல்லாவிட்டா லும் ஓரளவேனும் சைவசித்தாந்த ஆசிரியர்கள் தழுவிக்கொள்ள நேர்ந்தமை,

''காத்தும் படைத்தும்
கரந்தும் **விளையாடி**''.... (1)

''ஐயா! நீ ஆட்கொண்டு
அருளும் **விளையாட்டின்**
உய்வார்கள் உய்யும்
வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்(2)

எனத் திருவாசகம் திருவெம்பாவைப் பாடல் களில் (11, 12) மாணிக்க வாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிச் செய்திருத்தலை, நினைவுகூர்ந்தமை பற்றியேயாம் எனத் துணிந்து கூறலாம்.

அற்றேல், முற்கூறிய குற்றம் என்னுவது? எனின், ''ஈண்டு விளையாட்டு என்றது 'ஐங் கலப்பாரம் சுமத்தல் சாத்தனுக்கு விளையாட்டு' என்புழிப்போல, அத்துணை எளிதிற் செய்யும் ஆற்றலுடைமை குறித்தேயாகலின், அதனை அறிவில்லாத இளஞ்சிறுர்களின் செயலோடு ஒக்கும் என்றல் பொருந்தாது'' என்று ஆசிரியர் மாதவச் சிவஞானசுவாமிகள் அரிய முறையில் அமைவுரை கூறியிருத்தல் அறிந்து மகிழத்தக் கது.

திரோதான சத்தி :

(10) சைவசித்தாந்த நூல்களில், திரோ தான சத்தி என்பதுபற்றி ஆங்காங்கே பேசப் படும். திரோதான சத்தியாவது, உயிர்களைப் பற்றி நிற்கும் மும்மலங்களும் தத்தம் தொழில் களைச் செய்யுமாறு ஏவி இயக்குவது. உயிர்கள் உலகியல் நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுத் தத்தம் வினைப்பயன்களை நுகர்ந்து தீர்த்தற்பொருட்டு, உலகியல் வாழ்வில் நேரும் நன்மை தீமைகள் ஆகியவற்றை உயிர்கள் உணராதபடி மறைத்து வைப்பது திரோதான சத்தியாகும். *

''ஏயும் மும்மலங்கள் தத்தம் தொழிலினை இயற்ற ஏவும் தூயவன் தனதோர் சத்தி திரோ தான கரியது'' என்பது சித்தியார் (57).

இங்ஙனம் மலங்களைத் தொழிற்படும்படி ஏவி இயக்கி, உயிர்களுக்கு மறைப்பினை விளை விக்கும் திரோதான சக்தியே, உயிர்களுக்கு மலபரிபாகம் தந்த பின்னர் அநுக்கிரக சத்தி யாக மாறிநின்று, எல்லா நலங்களையும் விளை விக்கும். சேயின் குற்றம் கண்டு சினந்து கடிந்து ஒறுக்கும் தாயே, பிறகு அதன் நற்றம் கண்டு உவந்து, அன்பு செய்து நலம்புரிதல் போல்வது இஃது !

---

* ''Heaven from all creatures hides the book of fate
All but the page prescribed, their present state ;
From brutes what men from men what spirits know ;
Or who could suffer being here below ?
The lamb thy riot dooms to blood to-day,
Had he thy reason, would he skip and play ?
Pleas'd to the last, he crops the flowery food,
And licks the hand just rais'd to shed his blood,
Oh, blindness to the future ! kindly given
That each may fill the circle mark'd by Heaven,
Who sees with equal eyes, as God of all,
A hero perish, or a sparrow fall.''
—ALEXANDER POPE.

இவ்வாறு இறைவனின் திருவருள் ஆகிய அம்மையே, முதற்கண் மறைப்பாற்றலாக இருந்து, பின்னர் அருளாற்றலாக மாறி நலம் விளைவித்தலை,

''முற்சினம் மருவு திரோதாயி
கருணை ஆகித்
திருந்திய சத்திநி பாதம்
திகழும் அன்றே''

எனச் சிவப்பிரகாசம் என்னும் சித்தாந்த நூல் கூறும். முதலிற் சினம்மருவித் திரோதாயி என்னும் மறைப்பாற்றலாக இருப்பதே, பிறகு அந்நிலையின் வேறுபட்டு அநுக்கிரகசத்தி என் னும் அருளாற்றலாக மாறி நிற்கும் என்னும் சைவ சித்தாந்த உண்மைக்கு மூலமும் சான்றும் ''பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை'' எனவரும் திருவாசகத் திருவெம்பாவைத் தொடரேயாகும். திரோதான சக்தி யுண்மையை விளக்குவதற்கு மதுரைச் சிவப்பிரகாசர் என்னும் பேருரையாசிரியர், இத்திருவாசகத் தொடரையே மேற்கோளாக எடுத்துக் காட்டி யிருத்தல் காணலாம்.

ஐந்தொழில்கள் :

(11) உலகமானது அறிவில்லது (அசே தனம், சடம்), அறிவுடையது (சேதனம், சித்து) என இருதிறப்படும். பிற சமயங்கள் கூறும் ஆக்கல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழில் கள், அறிவும் உயிரும் அற்ற சடவுலகுக்கு மட்டுமே பொருந்தும். சேதனப் பொருள்கள் ஆகிய உயிர்களுக்கு அவை பொருந்தா. ஏனெ னில் இறைவன் உயிர்களைப் படைப்பதும் இல்லை அழிப்பதும் இல்லை. 'என்று நீ அன்றுநான்,' எனத் தாயுமானவர் பாடுவதற்கு ஏற்ப, உயிர் களும் இறைவனைப் போலவே அநாதி நித்தியப் பொருள்களாகும். ஆதலின் அறிவுடைப் பொருள்கள் ஆகிய உயிர்களின் நலம் கருதியே, இறைவன் மறைத்தல் அருளல் ஆகிய இரு தொழில்களைச் சிறப்பு முறையிற் செய்கின்றான்.

சடவுலகத்துக்காக ஆக்கல் காத்தல் அழித் தல் என்னும் முத்தொழில்களும், சித்துலகத் திற்காக மறைத்தல் அருளல் என்னும் இரு தொழில்களும் ஆக, ஐந்து தொழில்களை இறை வன் முறையே இயற்றியருள்கின்றான் என்பது சைவசித்தாந்தம்.

ஏதேனும் ஒன்றனைக் குறித்துக் கூறுங்கால், தொகை-வகை-விரி என மூவகையாற் கூறலாம். முத்தொழில் என்பது வகை. அதுவே தொகை யாயின், பந்தம் வீடு என இரண்டாகவும்; விரி யாயின், மறைத்தல் அருளல் என்பனவற்றோடு சேர்த்து ஐந்தாகவும் கூறப்படும்.

இவ்வாறு, இறைவனின் ஐந்தொழிற்றிறம் குறித்துச் சைவசித்தாந்த நூல்கள் விளக்கு வதற்கு உரிய, அரிய சான்றாக அமைந்தது, திருவாசகத்திலுள்ள சிறந்த திருவெம்பாவைத் திருப்பதிகத்தின் இறுதிப்பாடலேயாகும்.

''போற்றியருளுகநின்
ஆதியாம் பாதமலர்;
போற்றி யருளுகநின்
அந்தமாம் செந்தளிர்கள்''

''போற்றி எல்லா உயிர்க்கும்
தோற்றமாம் பொற்பாதம் (1)
போற்றி எல்லா உயிர்க்கும்
போகமாம் பூங்கழல்கள் (2)
போற்றி எல்லா உயிர்க்கும்
ஈரும் இணையடிகள்; (3)
போற்றிமால் நான்முகனும்
காணுத புண்டரிகம்; (4)
போற்றியாம் உய்ய
ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்'' (5)

எனவரும் திருவெம்பாவைவரிகளேயே, மதுரைச் சிவப்பிரகாசர் என்னும் சைவசித்தாந்தப் பேருரையாசிரியர், இறைவனின் ஐந்தொழிற் றிறத்தினை விளக்கும் சிறந்த பெருமேற்கோளாக எடுத்துக் காட்டியருள்கின்றூர். இது போன்ற செய்திகள் பலப் பல. அவை 'விரிப்பிற் பெருகும், தொகுப்பின் எஞ்சும்'.

முடிவுரை :

இதுகாறும் 'சமுத்திரகலச நியாயம்' பற்றிக் கூறிவந்தவற்றுல், திருவாசகத்திற்கும் சைவசித்தாந்தத்திற்கும் உள்ள தொடர்பு இயைபுகளைத் 'தாலிபுலாகநியாயம்' கொண்டு ஓரளவேனும் நாம் உய்த்துணர்ந்து கொள்ளுதல் கூடும். இத்தகைய சிறப்புமிக்க திருவாசகத்தி னையும், சைவசித்தாந்தத்தினையும், தக்கவாறு போற்றிப் பயன்கோடல், அன்பர்கள் அனைவருக்குமே உரிய தலையாய கடனுகும்.

''திருவாசகத்தை ஓதியும் உருகாத ஓர் உயிர் இருக்குமாயின், அதனைக் கல் என்று கழறுதுமோ? மண் என்று வகுக்குதுமோ? இரும்பு என்று இயம்புதுமோ? சொல்மின்கள்!''

— அருட்டிரு. மறைமலையடிகளார்.

The following are the particulars regarding the ownership of "**Thirukkoil**" the monthly newspaper published, as called for by Rule 8 of the Registration of Newspapers (central) Rules. 1956.

FORM IV
(See Rule 8)

1.	*Place of Publication*	Nungambakkam, Madras-34.
2.	*Periodicity of publication*	Monthly
3.	*Printer's Name*	**Thiru. M. N. Shanmugam**, L.P.T. Assistant Works Manager, Tamil Arasu Press, Government Estate, Madras-2.
	Nationality	Indian.
4.	*Publisher's Name*	**Thiru K. S. Narasimhan**, B.A.,B.L., I.A.S., Commissioner, H. R. & C. E. (Admn.) Department.
	Nationality	Indian.
	Address	Nungambakkam, Madras-34.
5.	*Editor's Name*	**N. R. Murugavell**, M.A.,M.O.L., Editor, H. R. & C. E. (A) Dept. Madras-34.
	Nationality	Indian.
	Address	Nungambakkam, Madras-34.
6.	*Name and Address of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital.*	**Thiru K. S. Narasimhan**, B.A.,B.L., I.A.S., Commissioner, H. R. & C. E. (Admn.) Department, Madras-34.

I, K. S. Narasimhan, hereby declare that the particulars given above, are true to the best of my knowledge and belief.

Dated : 15—3—76
Madras-34.

(Sd.) **K. S. NARASIMHAN,**
Publisher.

அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில்,

சங்கரன்கோயில் :: திருநெல்வேலி மாவட்டம்.

பிற்கால பாண்டிய மன்னர்களில் ஒருவரான உக்கிரபாண்டியனால் கட்டப்பட்ட இத் திருக்கோயில் திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு புகழ்பெற்ற பிரார்த்தனைத் தலமாகும். அன்னை கோமதியின் அருந்தவத்துக்கு இரங்கி, மாநிலத்தோர் சிவன் வேறு திருமால் வேறு என்று வேறுபடுத்துவது தவறு என்று உணரும் பொருட்டுச் சிவபிரான் ''பாதி சங்கரனும் பாதி நாராயணனுமாகக்'' காட்சி கொடுத்த தலம் இது ஒன்றே!

ஆண்டுதோறும் மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில் முறையே 21, 22, 23 ஆகிய தேதிகளில் காலை 6.18 மணிக்குக் கதிரவன் சங்கரலிங்கப் பெருமானை வழிபடும் காட்சியை இன்றும் கண்டு வணங்கலாம். நாடெங்கிலுமிருந்து நோய் வாய்ப்பட்டவரும், மனநோய் உடையவர்களும், கோமதி அம்பிகையை வழிபட்டு நோய் நீக்கம் பெறுகின்றனர். வீடுகளில் நச்சுப் பூச்சிகள் வராமலிருக்கத் தங்கம் அல்லது வெள்ளியிலான பாம்பு, தேள், பூரான் இன்னபிற உருவங்களையும், நோயின்றி வாழத் தங்கம் அல்லது வெள்ளியிலான கை, கால், முகம் இன்னபிற உருவங்களையும் காணிக்கையாகச் செலுத்துகின்றனர்.

இறைவன் : அருள்திரு சங்கரநாராயண சுவாமி.
இறைவி : அருள்தரும் அன்னை கோமதி அம்பிகை.
ஸ்தல விருட்சம் : புன்னை.
தீர்த்தம் : நாகசுனை.
ஆகமம் : காமிகாகமம்.

மேலும் வழிபட வருபவர்களின் வசதிக்காக விடுதிகளும், கல்யாண மண்டபமும், நூல் நிலையமும் இத்திருக்கோயில் பொறுப்பிலுள்ளன. மேலும் இத்திருக்கோயிலாரால் ஓர் இலவசச் சித்த மருத்துவமனையும், ஓர் ஆரம்பப் பள்ளியும் ஆரம்பிக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது.

திருவாவடுதுறை ஆதீனம் பத்தாவது குருமகா சந்நிதானமவர்களால் பதிக்கப்பட்டுள்ள ஸ்ரீசக்கரம் மீதமர்ந்து நோன்பியற்றினால் வேண்டும் வரம் பெறலாம்.

முக்கிய திருவிழாக்கள்

1. ஆடித் தபசுத் திருவிழா
2. சித்திரைத் திருநாள்
3. திருவெம்பாவைத் திருநாள்
4. திருக்கல்யாணத் திருநாள்
5. கந்த சஷ்டித் திருநாள்
6. நவராத்திரி இலட்சார்ச்சனை
7. தை மாதத்துத் தெப்ப உற்சவம்

இத்திருக்கோயிலில் ஒவ்வொரு வெள்ளிக் கிழமைதோறும் அருள்தரும் கோமதி அம்பிகையின் தங்கப் பாவாடை தரிசனம் உண்டு.

மேலும் இத்திருக்கோயிலில் ரூ. 4.5 லட்சம் செலவில் இராஜகோபுரத் திருப்பணி வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. திருப்பணிக்குப் பக்தர்கள் தாராளமாக நன்கொடை வழங்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விரைவில் இத்திருக்கோயிலில் மகாகும்பாபிஷேகம் நடைபெற இருக்கிறது.

இத்திருக்கோயிலில் ''பத்தாயிர தீபக் கட்டளை'' என்று ஒரு கட்டளை ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. மேற்படி கட்டளைக்காக அன்பர்களிடமிருந்து வரும் பணத்திலிருந்து கிடைக்கக் கூடிய வட்டியை வைத்து ஒவ்வொரு வருடமும் தை அமாவாசையன்று பத்தாயிரம் தீபங்கள் ஏற்றி வைத்துக் கட்டளை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பக்தர்கள் தாராளமாக நன்கொடை வழங்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் ''குட்டித் திருவாசகம்'' என வழங்கும் கருவையந்தாதி பாடிய மன்னர் வரதுங்கராம பாண்டியன் வழிபட்ட அருள்மிகு பால்வண்ணநாத சுவாமி திருக்கோயில் இத்திருக்கோயிலின் துணைக்கோயிலாகும். மேற்படி திருக்கோயில் சங்கரன் கோயிலிலிருந்து வடக்கே இராஜபாளையம் ரோட்டில் சுமார் 8 மைல் தொலைவில் உள்ளதாகும். மேற்படி கரிவலம்வந்தநல்லூர் திருக்கோயிலில் 1—7—74-ல் திருக்குட நீராட்டு விழா சிறப்பாக நடந்துள்ளது. இது பாண்டி பஞ்ச ஸ்தலங்களில் ஒன்றாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த அபூர்வமான இத்திருக்கோயிலுக்கு அன்பர்கள் ஒரு முறையாவது வந்து வழிபட்டு அருள்பெற வேண்டுகிறோம்.

திரு. பூ. உள்ளமுடையார்துரை
தலைவர் அறங்காவலர் குழு

ஈ. பிச்சை, பி.ஏ.,
செயல் அலுவலர்

திரு. கி. வெங்கட்ராமன்,
திரு. க. பழனிச்சாமி,
திருமதி அரு. குருவம்மாள்,
திரு. வி. கடற்கரை.
அறங்காவலர்கள்.

நம் ஆசாரியர்களின் திருநாவீறு

''பத்மவிபூஷண்''

திரு. பி. ப. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்.

ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தில் தமிழ் மொழியில் முதன் முதலாக அவதரித்த வியாக்கியான நூல் ஆருயிரப்படி யென்பது. இது, திருவாய்மொழிக்குத் திருக்குருகைப் பிரான் பிள்ளான் இட்டருளின வியாக்கியானம். இதன் பெருமையை உபதேச ரத்தினமாலையில் மண வாளமாமுனிகள் ''தெள்ளாரும் ஞானத் திருக் குருகைப்பிரான், பிள்ளான், எதிராசர் பேரரு ளால்—உள்ளாருமன்புடனே மாறன் மறைப் பொருளை அன்றுரைத்தது, இன்பமிகுமாருயிரம்'' என்ற பாசுரத்தினால் வெளியிட்டருளினர். ''இன்பமிகும்ஆருயிரம்'' என்றது ஏற்ற மிகு சிறப்புரை. அந்த வியாக்கியானத்திலுள்ள இன்ப மிகுதியை அநுபவ ரஸிகர்களே அறியக் கூடும்.

இவ்வாருயிரப்படிக்கு முன்பும் (ஸ்ரீ வைஷ் ணவ சம்பிரதாயத்தில்) தமிழ் வியாக்கியான நூல்கள் (அல்லது) தமிழ் வசன நூல்கள் சில ஆசிரியர்களால் அருளிச் செய்யப்பட்டிருக்கவும் கூடும். ஆனால் அப்படி ஒரு நூலும் நமக்குத் தெரிய வரவில்லை. ஆருயிரப்படி யென்னும் வியாக்கியான நூலையே நமது சம்பிரதாயத் திற்கு முதற்றமிழுரை நூலாகக் காண்கிறோம். இந்நூல் அவதரித்து இன்றைக்கு ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளாகின்றன. இது வெறுந் தமிழ் நூலேயன்று. மணிப்பிரவாள வியாக்கி யானம் என்ற பெயர் பெற்றது. அதாவது, தமிழ்ச் சொற்களும் சம்ஸ்க்ருத வாக்கியங்களும் விரவி யெழுதப்பட்ட வியாக்கியானம் என்ற வாறு. இந்தச் சேர்த்தியழகு வெகு அற்புத மானது. 'உபய வேதாந்தப் பிரவர்த்தகாசார் யர்கள்' என்று நம் ஆசாரியர்கள் கொண்ட சிறப்புப் பெயரானது இத்தகைய மணிப்பிர வாள நூல்களிலேயே திண்மை பெறுகின்றது. மிகப் பழைய காலத்தில் சமண பௌத்தர் களின் மரபிலும் மணிப்பிரவாள நூல்கள் தோன்றியிருப்பதாகச் சில விமர்சகர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம். அவற்றில் சாதா ரண சம்ஸ்க்ருத பதங்களும் தமிழ்ச் சொற் களும் கலந்திருக்கக் கூடுமேயல்லாது, ச்ருதி ஸ்மிருதி இதிகாச புராண வசனங்களும், காவிய நாடகாலங்கார சுலோகங்களும், பலவகைத் தமிழ் நூல் மேற்கோள்களும் கலந்து கமழப் பிரசக்தி இராது.

ஆருயிரப்படிக்குப் பின், பெரியவாச்சான் பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை போல்வார் இட்டருளின வியாக்கியானங்களின் மாதுர்ய மும் காம்பீர்யமும் அளவு மிகக் கடந்தது. ஆருயிரப்படியானது சுருங்கிய தோரணையில் அமைந்த தாகையாலே அதில் பூர்வாசாரியர் களின் சம்வாதங்களோ, இதிகாச புராணாதி சுலோகங்களின் இன்சுவைப் பொருள்களோ காணப்பெறுதற்கு இடமில்லையாயிற்று. பெரிய வாச்சான் பிள்ளையும் வடக்குத் திருவீதிப் பிள்ளையும் இட்டருளின வியாக்கியானங்களின் சுவை மிகுதியைப் பற்றிப் பேசுவதற்கு நாமோ அதிகாரிகள்?

இவர்களின் சொல் தொடை யழகு 'என்னே! என்னே!' என்று கல்நெஞ்சையும் உருக்கவல்லது. இவர்களின் வியாக்கியானங் கள் திருவவதரிக்கவில்லையானால் ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தங்களுக்கு ஒருவிதமான மதிப் பும் இல்லையாகும்.

கம்பருடைய காலத்தில் திவ்வியப் பிரபந் தங்களுக்கு விசேஷமாக வியாக்கியானங்கள் அவதரித்திராமையாலே அவர் மூலத்தின் சுவை யில் மாத்திரமே ஈடுபட்டு (சடகோபரந்தாதி யில்) ''அந்தமிலா மறையாயிரத் தாழ்ந்த அரும் பொருளைச், செந்தமிழாகத் திருத்திலனேல் நிலத் தேவர்களும், தத்தம் விழாவுமழகுமென் னும்குருகூர்வந்தபண்ணவனே'' என்றுகுழைந்து பேசிப் போனார். வியாக்கியானங்கள் அவ தரித்த பின்பு, அதிலும் முக்கியமாகப் பெரிய வாச்சான் பிள்ளையின் வியாக்கியானங்கள் அவ தரித்த பின்பு, இவ்வுலகுக்கே விளைந்த பெரும் பாக்கியத்தை மணவாள மாமுனிகள் உபதேச ரத்தினமாலையில் ''பெரியவாச்சான் பிள்ளை பின்புள்ளவர்க்குந் தெரிய, வியாக்கியைகள் செய்வால்—அரிய, அருளிச்செயல் பொருளை ஆரியர்கட்கிப்போது அருளிச் செயலாய்த் தறிந்து'' என்ற பாசுரத்தினால் பரமார்த்தமாக அருளிச் செய்தார்.

பலகாலம் ஆசார்ய சந்நிதியில் பணி விடைகளைப் பண்ணிப், பலகால் கேட்டுக் கேட்டுணர வேண்டிய மேம்பொருள்கள் நிரம் பிய, அந்த அரிய பெரிய வியாக்கியானங்களைக் குருமுகமாகக் கேளாமல், ஏடுபார்த்து அந்வ யிக்கப் புகுமவர்கள் ஒன்றும் அறியகில்லார்கள். அன்னவர்கள் அந்த வியாக்கியானங்களினால் இறையும் பயன் பெறுர்களாதலால் 'அவற்றில் என்ன இருக்கிறது?' என்றும், 'நமக்குப் புரி யாத நடையில் ஏதோ எழுதி வைத்திருக்கிறுர் கள்' என்றும் சொல்லிப் போதுபோக்கக் கடமைப்பட்டவராயினர். உண்மையில் முற் காலத்தில் திவ்ய தேசந்தோறும் பலவிடங்களில் காலட்சேபங்கள் நடந்து கொண்டிருக்கும் ; வியாக்கியான நூல்களை வைத்துக்கொண்டு பக்தியுடனே சேவித்துப் பொருள் சொல்வ தும் கேட்பதுமாகிற பத்ததி இடையறாது நடந்து கொண்டிருந்தது. இக்காலத்தில் அந்த பத்ததி மிக மிக விரளமாயிற்று. உபந்நியாசங் கள் சொல்லுவதும் கேட்பதுமே பெரும்பான் மையான பழக்கமாய் விட்டபடியால் முன்னோர் அருளிய நூல்களின் ஆழ்பொருள்களை யறிவார் மிகச் சிலரே யாயினர்.

பூருவர்கள் தங்கள் திவ்விய நிதந்தங்களில் அரிய பெரிய சாத்திரப் பொருள்களை இடுவது போலவே விநோதமான சில லௌகிக வார்த் தைகளையும் இடுவதுண்டு. அவற்றின் பொரு ளும் உபதேச கம்யங்களே ஒழிய ஏடு பார்த்துத் தெரிந்து கொள்ளக் கூடியவையல்ல. இந்த வியாக்கியானங்களுக்கு முன்னமே சிலர் அரும் பதவுரைகள் பணித்து அவையும் அச்சேறியிருக் கின்றன. அவற்றைப் பார்க்கும்போது அவ்

வுரைகாரர்களுங்கூட, சிலவிடங்களில் சதா சார்ய பரம்பரையில் கேட்டிலர் போலும் என்று நினைக்க நேர்கின்றதென்று ஒரு சமயம் கோயில் பத்தராவி சுவாமி பணிக்கக் கேட்ட துண்டு. அந்த சுவாமி எடுத்துக் காட்டியருளிய ஒரு விஷயத்தையும் இங்குக் குறிப்பிடுகின் றேன்.

பெரிய திருமொழியில் (5—6—2) ''திருத் தண்கா லூராணைக் கரம்பனூருத்தமனை'' என்ற விடத்துப் பெரியவாச்சான் பிள்ளையாக் கியானத்தில் ''(கரம்பனூருத்தமனை) வழிக் கரையிலே திருவாசலுக்கொரு கதவிடாதே வந்து கிடக்கிறவனை'' என்று அருளிச்செய்யப் பட்டிருக்கிறது. திருவரங்கம் சமீபத்தில் 'உத்தமர் கோயில்' என்றொரு திவ்ய தேச முண்டே; அதற்குத்தான் திருக்கரம்பனூர் என்று திருநாமம். அத்தலத்து எம்பெருமான் உத்தமனென்று திருநாமம் வகித்திருப்பதை ரசோக்தியாக நிர்வகிக்கிறார் பெரியவாச்சான் பிள்ளை. ஒருவர்க்கும் ஒருபோதும் சேவை சாதியாத பெருமான் அதமன்; வெகு சிரமத் தினால் சேவை சாதிக்கும் பெருமான் மத்யமன்; அநாயாசமாக சேவை சாதிக்கும் பெருமான் உத்தமன்—என்று இவ்வகையான திருவுள்ளங் கொண்டு பெரியவாச்சான் பிள்ளை மேலே குறித்த நயவுரையை அருளிச் செய்திருக்கிறார். திருக்கரம்பனூர்த் திருமால், தேடிச் செல்ல வேண்டாதே வழிக்கரையிலே இருப்பது ஒரு சௌலப்பயம். அதற்குமேல் திருவாசலுக்குக் கதவிடாதே யிருப்பது மற்றொரு சௌலப்பியா திசயம். பெரிய வாச்சான் பிள்ளை காலத்தில் இந்த சந்நிதி செல்வக் குறைவினால் திருவாச லுக்குக் கதவிடப் பெறுமலிருந்தது (இருந்த கதவு பழுதாயிற்று; மீண்டும் புதிதாக அமைக் கப்படவில்லை. போலும்!) அதனைச் செல்வக் குறையானதென்று கொள்ளாமல், மிகமேலாக எளிவரும் தன்மைக்கு ஏற்ற குணமாகக் குறித்தது, பெரியவாச்சான் பிள்ளையின் விலட் சண சாதுர்யமாகும். உலகில் பிரபுக்கள் தங்கள் மாளிகைகளுக்குப் பல கதவுகளிட்டுத் தாளிட்டு ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் கிடப்பதும், அர்த்திகள் வந்தால் வெறுத்துத் தள்ளு வதற்கு வாசலிலே பலசேவகர்களை இருக்க வைப்பதும், இப்படியாகத் தங்களுடைய துர்க்குணங்களைப் பரப்பிக் கொள்ளுகிறார்கள். கரம்பனூர்த் திருமால் அங்ஙனன்றிக்கே திருவாசலுக்குக்கதவுமிடாதே வழிக்கரையிலே கிடந்து அநாயாசமாக சேவை சாதிக்கிற சௌலப்யம் என்னே! என்று ஈடு பட்டும், இந்த குணாதிசயத்திற்காகவே உத்தம னென்று திருநாமமாயிற்றென்று காட்டியும், இன்சுவை மிக்க பங்க்திகள் பணித்திருக்கிறார் பெரியவாச்சான் பிள்ளை.

இங்கு அரும்பதவுரைகாரர் எழுதியிருப்ப தென்னவென்றால், ''எல்லாரும் நடக்கும் வழி யாகையாலே சேவிப்பார் மிகுகையால் கதவிட அவசரமில்லையென்று கருத்து'' என்றெழுதியுள் ளார். இதில் ஒரு சுவையுமில்லை; பெரியவாச் சான் பிள்ளை திருவுள்ளம் பற்றின கருத்துமன்றிது. சேவிப்பார் மிகுகையால் கத விடவாய்ப்பில்லை யென்னும்படியான நிலைமை திருக்கரம்பனூர்க்குப் பொருந்துவதும் அன்று. இங்ஙனே பல பல விஷயங்கள் எடுத்துக்காட்ட வேண்டியவை உண்டு. அரும்பதவுரைகாரர் களிடத்துப் பட்சபாதத்தினால் சிலர் 'அவர் காட்டிய கருத்துத்தான் நன்று' என்று சாதிக்க முன் வருவரேல் அதற்கு நாம் பிரதிவாதம் செய்வோமல்லோம். கீர்த்தி மூர்த்தியான கோயில் பத்தராவி சுவாமி, பெரியார்களிடம் கேட்டதைச் சாதித்தார்; அதை இங்குத் தெரி வித்தபடி.

கண்ணபிரான் தூது சென்றான் என்ற குண விசேஷத்தில் ஈடுபட்டு ஆசார்யர்கள் பங்க்தி யெழுதுகையில் ''கழுத்திலே ஓலைகட்டித் தூது போனவன்'' என்று எழுதுகிறார்கள். இப்பங்க் தியைப் பெரிய திருமொழி 2—2—2— வியாக் கியானத்திலும், ''மகாபாரதத்தில்தூதுபோன வன் ஏற்றஞ்சொல்லுகிறது'' என்ற ஸ்ரீவசந பூஷண சூக்தி வியாக்கியானத்திலும் மற்றுஞ் சிலவிடங்களிலும் காணலாம். கழுத்திலே ஓலை கட்டித் தூது போகையாவது என்ன? என்று பலரும் கேட்பதுண்டு; சமீப காலத்தில் ஒரு பண்டிதர் இதற்குப் பொருள் உபந்யசித்தார் —ஏகாந்தமாகத் தூது செல்லாமல் 'நான் தூது செல்பவன் காண்மின்' என்று ஒரு ஓலையிலே யெழுதிக் கழுத்திலே தொங்கவிட்டுக் கொண்டு சென்றான்—என்பதாக. இதுவன்று பொருள்:

முற்காலத்தில் (தபால் போக்குவரத்து இல்லாத நாளில்) அவசியமாகச் சில கிராமங் களுக்குத் தபால் அனுப்பவும் உடனே பதில் தெரிந்து கொள்ளவும் நேர்ந்தால் ஒரு நாயை வளர்ப்பார்களாம். அதற்குச் சில நபர்களைக் கிராமாந்தரங்களில் பழக்கி வைப்பார்களாம். அவசியமுள்ள சமயங்களில் ஒரு நீட்டோலையில் சமாசாரத்தை எழுதி அவ்வோலையை நாயின் கழுத்திலே கட்டிவிடுவார்களாம். உடனே நாய் ஓடிச்சென்று குறிப்பிட்ட ஊருக்குப் போய் அந்த நபர் முன்னே நிற்குமாம். அவர் அதைத் தெரிந்து கொண்டு நாயின் கழுத்தில் கட்டி யிருந்த ஓலையை எடுத்துப் பார்த்துச் செய்தி யறிந்துகொண்டு பதில் எழுதி அந்த நாயின் கழுத்திலேயே கட்டிப் போகவிடுவாராம். இவ் விதமாகத் தபால் போக்குவரத்து ஒன்று நடந்து கொண்டிருந்தது. இந்த 'சுவவ்ருத்தியைக் கண் ணபிரான் சுவவ்ருத்தியாகக் கொண்டு தூது நடந்தானே' என்று ஆசாரியர்கள் உள்குழைந்து எழுதுகிறபடி. தூது செல்லும்போது கண்ண பிரான் தன் கழுத்திலே ஓலை கட்டிக்கொண்டு எழுந்தருளினதாகப் பொருளன்று. உபமான ரீதியில் எழுதப்பட்ட பங்க்தி இது.

சுவாவானது கழுத்திலே ஓலைக்கட்டிச் செல்வதுண்டே, அப்படிப்பட்ட இழிவான ஜந்துவின் செயலை அந்தோ! பராத்பரன் செய்தான் காணும்! என்று இவ்வளவு பொருளை உள்ளடக்கி ''கழுத்திலே ஓலைகட்டித் தூது போன ஏற்றம்'' என்று சுருக்கமாக எழுதினர் கள் ஆசாரியர்கள். இப்படிப்பட்ட பங்க்திகள் நமது சம்பிரதாய நூல்களிலே பல நூற்றுக் கணக்கிலுள்ளன. இங்ஙனம் நுட்பமாகவும் திட்பமாகவும் பற்பல அரிய பெரிய பொருள்களை விளக்கியருளும் நம் ஆசாரியர்களின் திருநாவீறு, மிகமிக விலட்சணமானது. ***

இராம காவியம்

இராம காவியம் ஆகிய இராமாயணம், மிகச் சிறந்த பெருங் கவிஞரும் ஞானியுமாகிய வால்மீகி முனிவரால் இயற்றப்பட்டது. கிரேதா யுகத்தில், இட்சுவாகு வம்சத்தில், தசரதனுக்கு மைந்தராகத் தோன்றியருளிய இராமபிரானின் வரலாற்றை, இந்நூல் விவரித்து அழகு மிகக் கூறுகிறது. இராம பிரான் பிறப்பதற்கு முன்னரே, வால்மீகி முனிவர் இராமாயணத்தை இயற்றிவிட்டதாக, ஒரு கருத்து உண்டு. ஆயினும், அது கி.மு. நான்காம் நூற்றாண்டில் இயற்றப் பெற்றிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

வால்மீகி முனிவர் தமது ஆதி காவியத்தை இயற்றுவதற்கு, இறையருளின் தூண்டுதல் பெற்றார். அதனுடைய அழகும் இனிமையும் சிறப்பும் தெய்விகத் தன்மையும் அளவிடற்கரியன. அது ஏழு காண்டங்களும், 660 சருக்கங்களும், 24,092 சுலோகங்களும் கொண்டது. கவிதைச் சிறப்பும், கற்பனை நலனும் பெரிதும் கொண்டது. உவமை உருவகம் உள்ளுறை மிகுத்துரை முதலிய பற்பல சுவைமிக்க அணிகள், அதனை அழகும் சிறப்புமுடையதாக ஆக்குகின்றன. உலகின் தலைசிறந்த இலக்கியங்களில் ஒன்றாக, இராமாயணம் ஈடும் எடுப்புமற்று இலங்குகின்றது.

இராமபிரான் ஒரு சிறந்த புதல்வராகவும், ஒப்பற்ற சகோதரராகவும், உண்மை நண்பராகவும், உயர்ந்த வீரராகவும், அன்புமிக்க கணவராகவும், இணையற்ற அரசராகவும், உத்தமக் குடும்பத் தலைவராகவும், சிறந்து விளங்குகின்றார். அவருடைய வாழ்க்கை மனித குலம் முழுவதற்கும், ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக இலங்குகின்றது. ஒழுக்கத்தின் உயர்வும், தியாகத்தின் சிறப்பும், தவத்தின் பெருமையும், பிறவும், இராமாயணம் என்னும் இதிகாசத்தால், உலக மக்களுக்குத் தெளிவுற உணர்த்தப் பட்டுள்ளன. கங்கையாறு தான் பாயும் நாட்டின் பகுதி அனைத்தையும் தொன்றுதொட்டு வளப் படுத்தி வருதல்போல, இவ் இதிகாசமும் எத்தனையோ பன்னெடுங்காலமாகத் தன்னை ஓதிவரும் பல கோடிக் கணக்கான மக்களின் உள்ளங்களைப் பண்படுத்திப் புனிதமாக்கி வருகின்றது. இந்திய நாட்டில் மட்டுமேயன்றி, கடல் கடந்து பல அயல் நாடுகளிலும் அது பெரிதும் போற்றிப் பாராட்டப் பெற்று விளங்கி வருகிறது. உலக இலக்கியங்களில் இத்தனைச் சிறப்பும், மக்களிடையே செல்வாக்கும் பெற்ற இலக்கியம், வேறு எதுவும் இல்லை என்று, அறிஞர்கள் அனைவரும் இதனை ஒருமுகமாகப் புகழ்ந்து மகிழ்ந்து இன்புறுகின்றனர்.

இராமாயணம் என்னும் இவ்வொரு நூலை, எத்தனையோ பல நூல்களை, எத்தனையோ பல கவிஞர்களும் அறிஞர்களும் இயற்றுவதற்கு, அடிப்படையாக அமைந்துள்ளது. காளிதாசரின் இரகுவம்சம்; பவபூதியின் மகா வீரசரிதம், உத்தர ராமாயணம்; வசிஷ்ட முனிவரின் யோக வாசிஷ்ட இராமாதரிசம்; வேதவ்யாசரின் அத்யாத்ம இராமகாவியம்; முதலியன மிகவும் புகழ்பெற்ற இராமாயண நூல்களாகும். தமிழில் கம்பரும், இந்தியில் துளசிதாசரும், வங்காளத்தில் கீர்த்திவாசரும், மலையாளத்தில் எழுத்தச்சரும், புகழ் மிக்க இராமாயண நூல்கள் இயற்றியுள்ளனர். பௌத்த மதத்தின் தசரத சாதகமும், சைவர்களின் பஸ்மசரிதமும் பிறவும் இராமாயணக் கதையைக் கூறுவனவேயாகும். 2000 ஆண்டுகட்கு முற்பட்ட நமது சங்க கால இலக்கியங்களிலும், சைவத் திருமுறைகளிலும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் முதலிய நூல்களிலும், இராமாயணத்தைப் பற்றிய குறிப்புகள் மிகுதியாக உள்ளன.

இங்ஙனம் வெவ்வேறு மொழிகளின் இலக்கியங்களில் மட்டுமேயன்றி, மற்றும் பிற துறைகளிலும் இராமாயணம் பரவியுள்ளது. ஜான்சியிலுள்ள தசாவதாரக் கோயிலிலும் (கி.பி. 6ஆம் நூற்றாண்டு), பட்டடக்கல் என்னுமிடத்திலுள்ள விருபாட்சர் கோயிலிலும், எல்லோராவிலுள்ள கயிலாயக் குகையிலும் உள்ள சிற்பங்களில், இராமாயணம் சிறப்பிடம் பெற்றுள்ளது. கங்ரா, இராஜஸ்தான், கொச்சி முதலிய பகுதிகளிலும், அழகிய வண்ண ஓவியங்களாக, இராமாயணக் கதைகள் தீட்டப் பெற்றிருக்கின்றன.

இந்தியாவில் மட்டுமேயன்றி, இலங்கை, பர்மா, மலேயா, சயாம், தாய்லாந்து, இந்தோனேஷியா, (ஜாவா, பாலி), கம்போடியா, அன்னம் திபேத், சைனு முதலிய பிற நாடுகளிலும், இராமாயண வரலாறுகள், இலக்கியங்களிலும் சிற்பங்களிலும் ஓவியங்களிலும் நாடகங்களிலும் பலவகை விழாக்களிலும் பரவி விரவிப் படர்ந்து வளர்ந்துள்ளன. சயாம் தாய்லந்து ஆகிய நாடுகளின் அரசர்கள் சிலரின் பெயர் ஈறுகள், இராமர் என்று உள்ளன. ஜாவாத் தீவின் தலைநகரப் பெயராகிய ஜகார்த்தா என்பது, **அயோத்தியா** என்பதன் திரிபேயாகும்.

ஜாவாத் தீவிலுள்ள பெரம்பானன் தொகுதிக் கோயில்களில், இராமாயண வரலாறு முழுவதும், கண் கவரும் வனப்பு மிக்க சிறந்த புடைப்புச் சிற்பங்களாக, ஏராளமாக மிகப் பெரிய அளவில் செதுக்கப்பட்டுள்ளன. அவைகள் ''கல்லும் சொல்லாதோ கவி'' என்பதற்கு ஏற்பக், கல்லில் அமைந்த அழகிய பெருங் காவியங்களாக விளங்குகின்றன. விஜய நகரத்துப் பேரரசர்கள் அமைத்த ஹசரா இராமசாமி கோயிற் சிற்பங்களும், இவற்றிற்கு ஒரு சிறிதும் ஈடாகமாட்டா என்று அறிஞர்

கள் கூறுகின்றனர்*. இராமபிரான் ஜாவாத் தீவின் தேசியத் தலைவராக மதிக்கப்படுகின்றார். சயாமிலுள்ள லோப்பரி என்னும் நகரின் பெயர் **லவபுரி** என்பதன் சிதைவேயாகும். ஜாவாவின் நடுவில் ஓடும் ஓர் ஆற்றுக்குச் சரையூ எனப்பெயர் வழங்குகின்றது.

அது கோசல நாட்டில் ஓடிய **சரயு** என்னும் நதியினது பெயரைத் தழுவியதே யாகும். பாங்காக் என்னுமிடத்திலுள்ள ஒரு கோயிலில் இராமாயண வரலாறு முழுவதும் வெள்ளித் தகடுகளில் செதுக்கப்பெற்றுப் பதிக்கப்பட்டுள்ளது. கம்போடிய அரசர்கள் தம்மைச் சூரிய வம்சத்தில், இட்சுவாகு குலத்தில் உதித்த, இராமபிரானின் வழிவழி வந்தவர்களாகக் கூறிக்கொள்ளுகின்றனர்.

அங்கோர்தாம் என்னும் தலைநகரில் ஆண்டு வந்த யசோவர்மன் என்னும் அரசன், இராம பிரானைப் போன்றவன் என்று புகழப்படுகின்றான். பபுவா எனத் தற்போது வழங்கும் ஏமகிருங்ககிரி எனும் நகரில் உள்ள கோயிலில், இராமாயணச் சிற்பங்கள் மிகுதியாக உள்ளன. கம்போடியாவில் அங்கோர்வாட் என்னும் இடத்திலுள்ள விஷ்ணு கோயிலிலும், இராமாயணச் சிற்பங்கள் பற்பல காணப்படுகின்றன.

சம்பா என வழங்கும் தெற்கு அன்னம் நாட்டிலும், இராமாயணக் கதை பெருக வழங்கி வருகின்றது. அந்நாட்டு மக்கள், தங்களை இராமபிரானின் வானர சேனைகளினது சந்ததியில் வந்தவர்கள் என்று பெருமையுடன் கூறிக்கொள்ளுகின்றனர். இங்ஙனமே திபேத்து மக்களும் தங்களைக் குறிப்பிட்டுக் கொள்ளுகின்றனர். சீனாவில், லங்காவதார சூத்திரம், தசரத ஜாதகம் என்னும் புத்த நூல்களால், இராமாயணம் பெரிதும் பரவியது.

இங்ஙனம் கிழக்கு ஆசிய நாடுகளில் மட்டுமின்றி, மேலை ஐரோப்பிய நாடுகளிலும் கூட, இராமாயணம் பெரிதும் பரவி வருகின்றது. மாக்ஸ் முல்லர், கீத், மாக்டனல்ட், வின்டர் நிட்ஸ், ஆப்கின்ஸ், ஜேக்கோபி முதலிய அறிஞர்கள் பற்பலர் இராமாயணத்தினை ஐரோப்பிய மொழிகளில் மொழி பெயர்த்து இயற்றியுள்ளனர். அண்மையில் ரஷ்யா நாட்டிலும் இராமாயணம் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. எகிப்து நாட்டிலும், மெக்சிகோ பெரு முதலிய அமெரிக்க நாட்டின் பகுதிகளிலும், இராமாயணம் மிகப் பழங்காலத்திலேயே பரவியிருந்த தற்குச் சரித்திரச் சான்றுகள் காணப்படுகின்றன என்று, ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இவைகளை எல்லாம் கருதின், இராமாயணம் என்னும் நம் இந்திய தேச இதிகாசத்தின் இணையற்ற பெருமை யாவர்க்கும் புலனாகும்.

—**ஆசிரியர்.**

---

* "The Rama reliefs which are found on the Hazara Rama swamy temple of Vijayanagar have been described as 'beautifully executed and carved with great life and spirit'. But how childish and insipid are those sculptures compared with the rendering of the same subject by the Javanese artists. Whereas the Borobudur sculptures are supreme in rendering to Buddhist ideal of mental repose, those of Perambanan picture the heroic deeds of the divine Rama with great vigour and perfect lucidity.''

—Dr. J. P. H. Vogel,
The Art of India & Java.

இலங்கை யாழ்ப்பாணம் நல்லூர்த் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனத்தின் தலைவர் சீலத்திரு. சுவாமிநாததேசிகபரமாசாரிய சுவாமிகள் அவர்கள், தமது பீடாரோகண விழாவின் முதலாண்டு நிறைவையொட்டித், தமிழகத்தில் உள்ள தெய்வக் திருத்தலங்களைத் தரிசிக்க எழுந்தருளியபோது, தருமையாதீனத்தின் 26-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிகபரமாசாரிய சுவாமிகள் அவர்களைச் சந்தித்து அளவளாவி மகிழ்தல்.

தமிழக ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்கள், தமது பிறந்தநாள் விழாவில், காஞ்சிபுரம் அருள்மிகு தேவராசப்பெருமாள் திருக்கோயில் அறங்காவலர் திரு தாதாசாரியார் அவர்களால் பொன்னாடை போர்த்துச் சிறப்பிக்கப் பெறுதல். (27-10-'75).

கோவை சுக்கிரவாரப்பேட்டை அருள்மிகு பாலதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு வருகைதந்த அருள்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களை வரவேற்று கௌரவித்தல்.

வாலி வழக்கு

'முதுபெரும் புலவர்'
—திரு. புரிசை சு. முருகேச முதலியார்.

(முற்றெடர்ச்சி)

மேலும், வாலி வதைக்குப் பின்னும் இளவல் மனம், அனுமன் வகுத்த வாலி வதைத் திட்டத்தில் மனங்கொளாமலே இருந்துள தென்பதற்கும் போதிய சான்றுகள் உள. வாலி செயலெல்லாம் முடிந்து சுக்ரீவன் அரசு செய்கின்றான். அண்ணன் சொற்படிச் சுக்ரீவனுக்குப் பட்டங் கட்டப் போகின்றவர் இந்த இளவல்தான். கட்டி முடிந்தது. அரசு அவனுடையதாகவிட்டது. அங்கு செல்வோம். அவன் சரத்காலம் கழித்துப் படைகளொடு வந்து சேருகிறேனென்று சொல்லினவன் அப்படிச் செய்யவில்லை. அண்ணல் பெரிதும் வருத்தமுற்று இளவலை ஏவ, விரைந்து கிட்கிந்தையை அடைந்தனன். இலக்குவன் வெகுளிக்கு அஞ்சிய குரங்கினத்தவர் கோட்டை வாயிலை அடைத்துக் கற்களையும் குவித்து, மரங்களில் ஏறி, பார்த்து நின்றனர். இது வாலிக்கு வழியடைத்த அனுபவம் போலும். வீரன் அவற்றை இடறித்தள்ளி உட்புகுந்தனன். அங்கதன் தெரிந்து இளைய தந்தைக்கு அறிவிக்க ஓடினன். அது முடியவில்லை. ஏன்? சுக்ரீவன் குடிமயக்கத்திலிருந்த நேரம். அனுமனை அழைத்துக் கொண்டு தனது அன்னைபால் சென்றனன் அங்கதன். தாரை வருத்தமுற்று, மைத்துனன் செயலை வெறுத்துக் கொண்டு, சுமங்கலிக் கூட்டத்தின் இடையே வீதியில் இளவல்எதிர் சென்றனள். வீரன் வெகுளி குறைந்தது. பெண்ணை எதிர்ப்பட நின்ற வெட்கத்தினால். வாலி மனைவி தாரை வந்து வரவேற்றனள். தாரை மங்கலநாண் இல்லாததனால் கழுத்து முழுக்க மறைத்துப் போர்த்துக் கொண்டு நின்றனள். அத்தாரையைப் பார்த்தவுடனே தமது இருதாய்மார்களையும் நினைந்து அவர்களும் இப்படித் தானே இருப்பரென வருந்தினன் இளையவள்ளல். இங்கே வாலியின் குடும்பத்தை எந்த நிலையில் மதித்துளன் ஏந்தலென்பது விளங்குகின்றதல்லவா?

இந்த நேரத்தில்தான் வீராதி வீரன் அனுமன் அங்குவந்து இளவலை வரவேற்க முடிந்தது. இளவல் அனுமனை நோக்கி உங்கள் அரசினால் நீயும் மறந்தனையே யென்றனன். மறக்கவுமில்லை, காலந் தாழ்த்தவுமில்லை. சேனை சேர்வதையே எதிர் நோக்க நேர்ந்தது என்றனன் அனுமன். அனுமனை நோக்கி இளவல், இல்லையில்லை. நீங்கள் எங்கே காலத்தைத் தாழ்வித்தீர்கள்கள்? முன்னமே தருக்கிக் கொண்டிருந்த அரக்கர் வாழ்வை நீள்வித்தீர்கள். அமரர் துன்பத்தையும் அதிகப்படுத்தினீர்கள். முனிவர்கள் துன்பத்திற்குத் தூபமிட்டு வளர்த்தீர்கள். அமைதி நிறைந்த அண்ணலைச் சிற்றத்திற்கு ஆளாக்கினீர்கள், நீங்கள் எங்கே காலத்தைத் தாழ்த்தினீர்கள்? எப்படியோ தொலையுங்கள் என்றனன் இளவல். (கிட்கிந்தை 74) ''தாழ்வித்தீர் அல்லீர், முன்னந் தருக்கிய அரக்கர் தம்மை வாழ்வித்தீர், இமையோர்க்கு ஏதம் வருவித்தீர், மரபில் தீராக் கேள்வித் தீயாளர் துன்பம் கிளர்வித்தீர், பாவம்தன்னை மூள்வித்தீர், முனியாதானை முனிவித்தீர் முடிதிர் என்றான்'' என வருகின்றது. முடிதிர் — தொலைந்து போங்கள் என்பது பொருள். இவ்வாறு உரைத்த இளவலின் சீற்ற உரைக்குப் பயந்த அனுமன், ''ஐயனே கோபிக்க வேண்டாம்; போனதையெல்லாம் பொருட்படுத்த வேண்டாம்; தாங்கள் சொன்னவண்ணம் இனித் தவறுமல் நடப்போம். இல்லையானால் உயிர் வாழ மாட்டோம்; தருமம் சாட்சியாகச் சொல்லுகின்றேன்; நீங்கள் ஐயனிடத்திற்குத் திரும்பிச் செல்லலாம்; தொடர்ந்தாற்போல் சேனையோடு வருவோம்'' என்றனன். (கிட்கிந்தை 75).

''தோன்றல் அஃதுரைத்தலோடும்
மாருதி தொழுது தொல்லை
ஆன்ற நூல் அறிஞ! போய
பொருள் மனத்து அடைப்பாயல்லை;
ஏன்றது முடியே மென்னில்
இறத்தும் இத்திறத்துக்கெல்லாம்
சான்றுஇனி அறனே, போந்து உன்
தம்முனைச் சார்தி யென்றான்.''

அதுகேட்ட இளவல், அப்படியே செய்கின்றோமப்பா நாங்கள் எப்பொழுதுதான் நீ சொல்லுவதைக் கேட்காமல் விட்டு விட்டோம்; முன்னே நாங்கள் செய்த முயற்சியெல்லாம் உன்னுடைய சொல்லின் வண்ணந்தானே; பின்னும் அப்படியே செய்கின்றோம். அதிலென்ன தடையென்று கூறி, அவனழைப்பின்படிச் சுக்ரீவன் இடத்திற்கு வீதிவாய் நின்றும் புறப்பட்டனன். (கிட்கிந்தை 76).

''முன்னும் நீ சொல்லிற்று அன்றே
முயன்றது முயற்சிதானும்
இன்னும் நீ இசைத்த செய்வான்
இசைந்தனம் என்று கூறி
அன்னதோர் அமைதியான்றன்
அருள்சிறிது அறிவான் நோக்கிப்
பொன்னின்வார் சிலையினனும்
மாருதியோடும் போனான்''

பின்னர் மயக்கமகன்று தனது செயலுக்கு வருந்தி, வெட்கமுற்ற சுக்ரீவன் வந்து மேள தாளத்தோடு வரவேற்றனன். கொலுமண்டபம் புகுந்தார்கள். மலரணையைக் காட்டி அதில் இருக்க வேண்டினார்கள். அரசனும் அமைச்சனும். அதைக் கண்டு அவர்கள் அறியாமைக்கும், வேண்டாத காலத்தாழ்விற்கும் வெகுண்டஐயன், ''கல்லத்தனைக்கடுமையள் கைகேயி, அவள் கொடுமையால் எனதண்ணல் காட்டில் கரடுமுரடான புல்லணையில் இருக்கின்றனன். நான், மலர் வேய்ந்த மெல்லணையில் இருக்கவா? உங்கள் உபசாரம் மிக நன்று'' என்றனன். அடுத்தபடி அவர்கள் கனிகளைக் கொண்டு வந்து வைத்து, இதை உண்ண வேண்டும் என வேண்டினர். அதற்கு அண்ணல், ''யான் தினந்தோறும் எங்கள் அண்ணலுக்குத் தரும் உணவின் மிச்சத்தையே உண்ணும் விரதமுடையேன். அவரங்கு உணவு கொணர்வாருந்தருவாருமின்றித் துன்புற்றிருக்க, யான் அவனமுது கொள்ளாத ஒன்றை உண்ணுவேனையின், அது நாய் தின்று வைத்த மிச்சத்திற்கே நிகராகும்'' என்றனன். (கிட்கிந்தை 103)

''கல்லணை மனத்தினை உடைக்கை கேசியால்
எல்லணை மணிமுடி துறந்த எம்பிரான்
புல்லணை வைகயான் பொன்செய் பூத்தொடர்
மெல்லணை வைகவும் வேண்டுமோ என்றான்''

பச்சிலை கிழங்கு காய் பரமன் நுங்கிய
மிச்சிலே நுகர்வது வேறுநான் ஒன்றும்
நச்சிலேன் நச்சினேன் ஆயின் நாய் உண்ட
எச்சிலே அது இதற்கு ஐயம் இல்லையால்''

என்றனன் இளவல்.

இந்த வள்ளலின் உறுதிமிக்க இடிப்புரையே அனுமனையும் சுக்ரீவனையும் குப்புற மாற்றி ஆட் கொண்டுவிட்டது. இளவல் அவ்விருவருக்கும் பெரியதொரு தீட்சா குருபரனை மாறிவிட்டனன். இதற்கு மேற்பட்ட அனுமன் வேறு, இதற்கு முன் பிருந்த அனுமன் வேறுதான் என்ற ஆழ்ந்தகன்ற அடிப்படைக் கருத்து, நமக்கு வாலி வழக்கின் திட்ப நுட்பங்களைத் தெளிவிக்கப் பெரிய சான்றாகும். அடுத்து ஆயவேண்டுவது இராமபிரான் வாலியைப் பற்றிப் பின்னே கொண்ட எண்ணங்கள். அவற்றை வாலி வதையின் முடிவிற்குச் சற்று முன்னதாக ஆய்வோம்.

முன்னர் நாம் விட்டு வைத்த இடம், வாலி சுக்ரீவன் போரின் இடையில், இராம இலக்குவர் தனித்து நின்று சந்திக்க வாய்ப்புற்ற நேரமும், அவர்களின் கருத்துரைகளுமாகும்.

இவ்வளவோடு சரி, இராம இலக்குவர்கள் கலந்து பேச நின்ற நேரம். ஏன்? இவர்கள் உரையாடலுக்குள் அங்கே சுக்ரீவன் பட்டபாடு கொஞ்சமல்ல. இன்னும் அவர்கள் பேச்சு முடிய வில்லை. ஆனால் சுக்ரீவன் வாழ்வு முடியும் நேரம் வந்துவிட்டது. அவன் ஒரு சிங்கத்தின் பாற்பட்ட யானைபடும் பாடெல்லாம் பட்டனன். உடல்நைந்த சுக்ரீவன் ஓடோடி வந்து ஐயனிடத்தில் அபயமிட் டனன். இங்கே அண்ணலின் நிலையென்ன? இட மில்லாததாயிற்று. பதினான்கு ஆண்டுகளாக இராப் பகலின்றிப் பணி புரிந்துவரும் பழைய தம்பிக்குப் பதிலிறுப்பதா, தனது அழுகையையே விலையாகத் தந்து பழைய அண்ணனைக் கொல்ல ஒரு புதிய அண்ணனை வாங்கிக் கொண்ட இந்தப் புதிய தம்பி யின் புதிய அழுகைக்குத்தான் விடையிறுப்பதா? களத்திலும் ஒரு அண்ணன் தம்பியர் போர். இங்கே சோலையிலும் ஒரு அண்ணன் தம்பிகளின் போர். அது மற்போர். இது சொற் போர். அங்கு தோற்றோடி வந்தவன் தம்பி. இங்கு தோல்வியின் பக்கமாக உள்ளம் சோர்ந்து நிற்கின்றவன் அண் ணன். களத்தில் வாலி எதிர்பார்க்கின்றான் தம்பி யின் வருகையை. இங்கே இலக்குவன் எதிர்பார்க்க வில்லை அண்ணலின் முடிவை. இளவலுக்கு இந்த நேரத்தில் அண்ணனுக்கு உள்ள இடுக்கண் தெரியும். இளவல் எப்பொழுதுமே வரப்போவதைச் சொல் லுவதுண்டு. அதை அண்ணியே கேட்கவில்லை. அண்ணன் எங்கே கேட்கப் போகிறார் என்பது இளவல் முடிவு. அந்நிலையில் இராமன் அடிபட்டு வந்தவனுக்கு நீ அஞ்சாதே. காட்டிக் கொடுத்து விட்டு வாளா இருக்கின்றார்களேயென வருத்தப் படாதே. உனக்கும் வாலிக்கும் வேற்றுமையே தெரியவில்லை. அவன்என நினைத்து உன் மேல் கணை தொடுத்து விட்டால் அரும் பழியாகுமே என்ன செய்வது என ஏங்கி நின்ற நேரம். நல்ல காலமாகவே நீயே வந்து விட்டனை, நீ அடையாளத் திற்காகக் கொடிப் பூவை அணிந்து கொண்டு செல்க என விடுத்தனன். (வாலி வதை 52).

''மலைந்த போதின் நைந்து இரவிசேய் ஐயன்மாட்
டணுகி
உலைந்த சிந்தையோடு உணங்கினன் வணங்கிட
உள்ளம்
குலைந்திடல்உமைவேற்றுமை தெரிந்திலம்கொடிப்பூ
மிலைந்து செல்க என விடுத்தனன் எதிர்த்தனன்
மீட்டும்''

கொடிகளில் பூக்கும் பூக்கள் பெரியனவாக இருக்குமாதலால் தூரத்தில் நின்றாலுந் தோற்ற மளிக்குமென அப்படிச் செய்தனர். சொற்படியே தனது தலையில் கொடிப் பூக்களைத் தொடுத்து மிகுதியாக அணிந்து கொண்டு அவன் சென்று முன்னையினும் தடிப்பாகப் போரிடத் தலைப்பட்ட னன். வாலி பார்த்தனன். அவன் கடுமையை. அவன் கண்களால் மட்டும் காணவில்லை. கருத்தி னாலுங் கண்டனன். என்ன இது அடிபட்டவன் ஆறுதலடைய உடையவருள்ள பக்கத்தைச் சாருவது உலகியல்தான். அவர்கள் உணவுண்டோ தாகந் தீர்த்துக் கொண்டோ போரில் தலைப்படுவார்கள். ஆற்றல் உள்ளவர்கள் அதற்கெல்லாம் இடந்தருவ தும் இயல்புதான். இவனது படைஞர்கள் அதோ அந்த மூலையில் நிற்கின்றார்கள். இவன் அங்குச் செல்லவில்லை. இவன் வேறொரு மூலைக்கு ஓடினான். அங்கு எவரையும் காணோம். ஆனால் பேராதரவு பெற்றவனைப் போலத் தருக்கோடு திரும்பி இருக் கின்றான். அவன் தளர்ந்து போனான்; கிளர்ந்து திரும்பினான். அங்கே அவள்; தாரை புறப்படுகிற போதே யாரோ துணை வந்துள்ளாரெனக் கூறினாள். ஆனால், அவள் சொல்லிய இராமன் வருவது ஒருக் காலும் பொருந்தாது. எனினும் இவன் போக்கா லும் வந்ததினாலும் யாரோ அங்கு ஒளிந்துள்ளார் கள் என்பது உன்னுதற்குரியதே என ஐயம் உற்ற னன் வாலி. நமனும் அஞ்சும்படி அந்த நெடுந் திசையைக் கடுமையாக நோக்கினன். இனிக் காலம் கடவாது இவனை முடித்து விடவேண்டுமெனும் ஊக்கமுடையவனானான் வாலி. (வாலி வதை 54).

பொறுக்கெனப் போரை முடிக்கப் புக்க வாலி சுக்ரீவன் கழுத்திலும் இடுப்பிலும் கைகொடுத்து உயரத் தூக்கினான். ஏன்? அவனை ஒரே அடியாக நிலத்தில் அடித்து ஒழித்து விடுவதுனைக் கருதினான்.

''அயிர்த்த சிந்தையன் அந்தகன்
குலைகுலைந்து அஞ்சச்
செயிர்த்து நோக்கினன், சினத்தொடு
சிறுநகை செய்யா
வயிர்த்த கையினும் காலினும்
கதிர்மகன் மயங்க
உயிர்த் தலந்தொறும் புடைத்தனன்
அடித்தனன் உதைத்தான்''

''எடுத்துப் பாரிடைஎற்றுவன் பற்றியென்
றிளவல்
கடித் தலத்தினுங் கழுத்தினுந் தன்னிரு கரங்கள்
மடுத்து மீக்கொண்ட வாலிமேல் கோல் ஒன்று
வாங்கித்
தொடுத்து நாணொடு தோளிறுத் திராகவன்
துரந்தான்''

(மீக்கொளல்—மேலே தூக்குதல்).

மிக நெருக்கடி நேரந்தான். இலக்கியச் சுவை வருகிறது விட்டுவிட முடியுமா? நடந்தது நடந்து விட்டது. முடிந்தது முடிந்துவிட்டது. இங்கே வாலியின் மார்பின் திண்மை, ''நீரும், நீர்தரு நெருப்பும் வான் கரு றும் கீழ்நிமிர்ந்த பாரும் சார் வலி'' படைத்ததாம். ஆகாசம் எல்லாவற்றிற்கும் இருப்பிடமானது. ஆனால் தனது வலியைக் காட் டாதது. மற்றைய நான்கு பெரும் பூதங்களின் வன்மையெல்லாங் கூடினால் எத்தனை வலிவோ அத்தனை வலிவுள்ளதாம் வாலியின் மார்பகம். அத்தகைய பெரும் பாறையின் மேல் பாய்ந்தது இராமபாணம். அவ்வளவு வலி படைத்த வாலி யின் மார்பகம் இந்த வாளிக்கு எப்படியிருந்தது? ஒரு கூர்மையான ஊசிக்கு வாழைப்பழம் எப்படி

யிருக்கும்? மஞ்சள் நிறம் உடையதாய் மாதக்கணக் கிலே கொஞ்சங் கொஞ்சமாகப் பழுத்துக்கொண்டே வருகின்ற பூவன் வாழையல்ல; பழுக்காமலே நைந்து விடுகின்றதொரு பச்சை வாழையுமல்ல ; பழுத்துங் கொம்பு போலிருக்கும் செவ்வாழையு மல்ல. சிறுமலே வாழை அது. சிறுமலே வாழைப் பழம் தோல் கருக்கக் கருக்க பழம் சால அளிந்து வரும். கெட்டு விடாது. அப்படி தோல் கருத்து உள்ளளிந்த கதலிக் கனியாகஇருந்ததாம், அந்தப் பாறைக்கு நெக்கு விடாப் பாறை, இராகவன் வாளி யின் வல்லமைக் கெதிரிலே. (வாலி வதை 57).

''காரும் வார்சுவைக் கதலியின் கனியினில் கழியச்
சேரும் ருசியில் சென்றது நின்ற தென் செப்ப
நீரும் நீர்தரு நெருப்பும் வன்காற்றும் கீழ்நிமிர்ந்த
பாரும் சார்வலி படைத்தவன் உரத்தையப் பகழி''

பாதலமுடியக் கடைக்காலாகக் கொண்டு மீதலம் முடிய வளர்ந்தெழுந்த மலே, மேரு மலேயென்பார் கள். அந்த மேரு சாய்ந்தாலும் சாயாத வன்மை படைத்தவன் வாலி. இவன் தம்பியைத் தூக்கிய கை சோர, மெய் சோரச் சாய்ந்து விட்டனன். சரியாமலேயைச் சரிவிக்க இடியென வொன்றும் உளதல்லவா? அப்படிப் பட்டதாக இருந்தது இராக வன் வாளி.

ஆலய ஊழியர் வாரிசுக்கு நிதியுதவி

திருநெல்வேலி மாவட்டம்—வட்டம்—வண்ணூர்பேட்டைக் கிராமத்தில் உள்ள அருள்மிகு அருணசலேசுவரர் திருக்கோயிலில், உதவி அர்ச்சகர் மற்றும் இரவுக் காவலராகப் பணியாற்றி வந்த **திரு. சுந்தர தட்சிணமூர்த்தி** என்பவர், கடந்த 2.5.75-ஆம் தேதியன்று இரவு, திருடர்களால் கொலே செய்யப்பட்டு இறந்தார். ஆணேயர் அவர்களது மூ. மு. 31761/75 தேதி 3—11—75 உத்தரவுக் குறிப்பின்படி, திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் நிதியில் இருந்து ''நன்கொடைத் தருமம்'' என்ற தலேப்பில் அனுமதிக்கப்பட்ட ரூபா. 10,000/- தொகையில் இருந்து ரூபா. 2,500/- மேற்படி இறந்து போன ஆலய ஊழியரின் நேரடி வாரிசுதாரரான திருமதி கோமதி அம்மாள் என்பவருக்கு, 12-12-75 தேதியன்று, ஷி ஆலய அறங்காவலர்களின் முன்னிலேயில், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா 8-12-75 நாள் பிசி/12 188081 எண்கொண்ட காசோலேயின் மூலம், திருநெல்வேலி உதவியாணேயரால் வழங்கப் பெற்றது.

158611

செய்திச் சுருக்கம் :—

உலக இந்து மாநாடு

சென்னே மாநகரில், புரசைவாக்கம் ''தர்மப்பிரகாஷ்'' திருமண மண்டபத்தில், 1—3—1976 முதல் 5—3—1976 வரையில், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமி கள் திருமுன்னிலேயில், உலக இந்து மாநாடு மிகவும் சிறப்புற நடைபெற்றது. 1—3—1976 காலே 9-30 மணியளவில், பிரார்த்தனேக்குப் பிறகு மாநாடு ஆரம்பமாயிற்று. வேதாந்த வித்தகர் திரு. டாக்டர் டி. எம். பி. மகாதேவன் அவர்கள் வரவேற்புரையும், ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள் தொடக்க விழா அரு ளுரையும் நிகழ்த்தினர்கள்.

1—3—1976 திங்கள் அன்று மாலேயில் நீதிபதி திரு. கிருஷ்ணசாமி ரெட்டியார், டாக்டர் லோகேஷ் சந்திரா, டாக்டர் வி. ராகவன், நீதிபதி திரு. எஸ். சூரியமூர்த்தி, டாக்டர் டி. எம்.பி. மகாதேவன், சோமலே ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள்.

2—3—1976 செவ்வாய் அன்று நீதிபதி கைலாசம், ஔவை நடராசன், திரு. பாலசுப்பிர மண்யம், திரு. அண்ணங்கராச்சாரியார், திரு. என். எஸ். தாத்தாச்சாரியார், இ. ராமானுஜ தாத்தாச் சாரியார் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

3—3—1976 புதன்கிழமை திரு. ம. பொ. சிவஞானம், திரு. நாகசுவாமி, திரு. தமிழ்வாணன், டாக்டர் வி.ஏ. தேவசேனுபதி, கண்ணதாசன், கிரிதாரி பிரசாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

4—3—1976 வியாழன் அன்று மாலேயில் பேராசிரியர் திரு. அ.மு. பரமசிவானந்தம், காஞ்சி புரம் தொண்டை மண்டலத்து ஆதீனம் சீலத்திரு ஞானப் பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள், திரு. பி. எம். ஜெயசெந்தில்நாதன், மற்றும் சிங்கப்பூர், சிலோன், தென்னுப்பிரிக்கா, பின்லண்ட் முதலிய எட்டு வெளிநாடுகளில் இருந்து வந்திருந்த பிரதிநிதிகள், மாநாட்டில் தத்தம் அனுபவங்களேயும், தங்கள் நாட்டுச் சமய நிலேகளேயும், தங்கள் தேவைகளேயும் பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

5—3—1976 வெள்ளியன்று மாலே ''திருக்கோயில்'' ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள், மதுரை ஆதீன குருமகா சந்நிதானம், திரு. பேஜாபர் சுவாமிகள், மதுரை ஆதீன இளவரசு சீலத்திரு அருணகிரி நாத தேசிகர், திரு. ஜான் பிரியோஜெட், திரு என். ஆர். பட் ஆகியோர் கலந்து கொண்டு சொற் பொழிவாற்றிச் சிறப்பித்தனர்.

ஒவ்வொரு நாளும் இறுதியில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஆசாரிய சுவாமிகள் அருளுரை வழங்கினர்கள். சமய சம்பந்தமான அழகிய சிறந்த கண்காட்சி ஒன்றும், ஐந்து நாட்களிலும் நடை பெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒவ்வொரு நாளும் பெருந்திரளாக வந்து, தொடக்க முதல் கடைசி வரையில் இருந்து, மிக்க ஆர்வத்துடனும், அமைதியுடனும் கலந்து கொண்டு மகிழ்ந்தனர். இந்தச் சிறப்பு மிக்க மாநாட்டில், நல்ல பல செயல் திட்டங்களும், தீர்மானங்களும் நிறைவேற்றப் பெற்றன.

இல்லங்களைப் பொலிவுறச் செய்யும் சிறந்த இல்லம் – **கதர் கிராப்ட்**

கோடைக்கேற்ற கதர் பருத்தி வகைகள்
கண்ணைக் கவரும் வண்ண வண்ணப்பட்டு
தினுசுகள், தாகம் தணிக்க பதநீர், சுவை
மிகுந்த தேன், அக்மார்க் செய்யப்பட்ட
செக்கெண்ணெய், உடலுக்கு உறுதி
அளிக்கும் பனைவெல்லம், மணமும், அழகும்
பெருக்கும் குறிஞ்சி வாசனை சோப்பு,
வெள்ளை வெளேர் சலவைக்குக் கோபுரம்
சோப்பு, சிறந்த முறையில் செய்யப்பட்ட
காலணிகள், தோல் பொருட்கள்,
வேலைப்பாடு மிக்க மண்பாண்டங்கள்,
இல்லத்தை அலங்கரிக்க எழில்மிகு மரச்
சாமான்கள், பிரம்பு, மூங்கிலிலான
பொருட்கள் மலிவு விலை தீப்பெட்டிகள்,
அழைப்பிதழ் அச்சிட கைக்காகிதங்கள்.

தமிழகமெங்கும் அமைந்துள்ள 180

கதர் கிராப்ட் களிலும்

மலிவு விலையில் கிடைக்கும்.
வாங்கிப் பயன் பெறுவீர்!
கிராமக் கைவினைஞர்களை ஊக்குவிப்பீர்!

வெளியீடு: தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

பதிவு எண். எம். 7039 மார்ச் 1976 ரூ. 1 திருக்கோயில்

பூம்புகார் கலைக்கூடம் காண வாரீர்!

- கல்லெல்லாம் கதை சொல்லும் சிலப்பதிகாரக் காட்சிகள் !
- புதையுண்ட பூம்புகார் புது வடிவம் பூண்டுள்ளது !
- சிந்தைக்கும் கண்ணுக்கும் தெவிட்டாத தமிழ் விருந்து !
- மனதைக் கவரும் மாதவியின் அழகுச் சிலை.

இவற்றைக் காண பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத்திற்கு வருகை தாரீர்!

பூம்புகார் கலைக்கூடம், சீர்காழியிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலும், மாயவரத்திலிருந்து 29 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை, சென்னை-600008



நெடுங்கல் மன்றம்



எழுநிலை மாடம்

வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.